winmeen.com
Learning leads to Ruling

அக்டோபர் 2020

# நடப்பு நிகழ்வுகள்






# நடப்பு நிகழ்வுகள்

**1.பரவா நோய்களைக்கட்டுப்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றியமைக்காக, ஐக்கிய நாடுகளின் விருதை வென்ற மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. கர்நாடகா

❖ பரவா நோய்களைக் கட்டுப்படுத்துவதின்மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சிறப்பான பங்களிப்பை செய்தமைக்காக கேரள மாநில அரசு ஐக்கிய நாடுகள் அவையின் விருதை வென்றுள்ளது. இந்த விருதைப் பெறும் உலகெங்கும் உள்ள ஏழு சுகாதார அமைச்சகங்களுள் கேரளாவும் ஒன்றாகும். அம்மாநிலத்தின் பிற திட்டங்களான புற்றுநோய் சிகிச்சை திட்டம், நுரையீரல் நோய் திட்டம் மற்றும் பக்கவாதம் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகியவையும் இந்த விருதுக்கு பரிசீலிக்கப்பட்டன.

**2.பல்லுயிர் தொடர்பான வட்டமேசை உரையாடலை நடத்திய நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. ஜெர்மனி

❖ "2020ஆம் ஆண்டு'க்கு அப்பால் பல்லுயிர் பற்றிய வட்டமேசை உரையாடல்: புவியில் உள்ள அனைத்து உயிர்களுக்குமான எதிர்காலத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பிலான உரையாடலை மெய்நிகர் முறையில் சீனா நடத்தியது. இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், இந்த வட்டமேசை உரையாடலில் கலந்துகொண்டார். இது, பல்லுயிர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உச்சிமாநாட்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக நடத்தப்பட்டுள்ளது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதையும் இந்த உரையாடல் நோக்கமாகக் கொண்டிருந்தது.

**3.பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (DRDO) பரிசோதனை செய்யப்பட்ட பிருத்வி–2 என்பது எந்த வகை ஏவுகணையாகும்?**

**அ. பரப்பிலிருந்து பரப்புக்கு பாயும் ஏவுகணை ☑**

ஆ. பீரங்கி எதிர்ப்பு கட்டளை ஏவுகணை

இ. கப்பல் எதிர்ப்பு ஏவுகணை

ஈ. கண்டங்களுக்கு இடையில் பாயும் எறிகணை

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அண்மையில் ஒரு பரப்பிலிருந்து மற்றொரு பரப்புக்கு ஏவக்கூடிய பிருத்வி–2 ஏவுகணையை சோதனை செய்தது. ஒடிசாவின் சண்டிப்பூர் தளத்தில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்திலிருந்து இந்திய இராணுவம் இந்தப் பரிசோதனையை

மேற்கொண்டது. இந்த பிருத்வி–2 ஏவுகணை, இந்திய ராணுவத்தால் தோராயமாக தெரிவு செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டதாகும். DRDO அறிவியலாளர்களின் கண்காணிப்பின்கீழ் இது நடந்தேறியது.

**4. 'பன்னாட்டு நீதியரசர்கள் ஆணையத்தின்' தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. பாரிஸ்

ஆ. ரோம்

**இ. ஜெனீவா ☑**

ஈ. நைரோபி

❖ 'பன்னாட்டு நீதியரசர்கள் ஆணையம்' என்பது சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்ட, சர்வதேய மனிதவுரிமைகள்பற்றி பேசும் ஓர் அரசுசாரா அமைப்பாகும். அண்மையில் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றிய வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) திருத்த மசோதா, 2020 ஆனது பன்னாட்டுச் சட்டத்திட்டங்களுடன் பொருந்தாது என்று இவ்வமைப்பு அறிவித்ததை அடுத்து அது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது. இந்த மசோதாவின் விதிகள் யாவும், மனிதவுரிமை மேம்பாட்டில் தன்னிச்சையான தடைகளை விதிக்கும் என்றும் அது கருத்து தெரிவித்திருந்தது.

**5. Dr. கபில வத்சயன் விட்டுச்சென்ற காலியிடத்தை நிரப்புவதற்காக, இந்திய பன்னாட்டு மையத்தின் (IIC) வாழ்நாள் அறங்காவலராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. கபில் சிபல்

**ஆ. கோபாலகிருஷ்ண காந்தி ☑**



இ. ராஜீவ் ஆகிர்

ஈ. சுனில் மேத்தா

❖ மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் ஆளுநரான கோபாலகிருஷ்ண காந்தி, புது தில்லியின் இந்திய சர்வதேச மையத்தின் வாழ்நாள் அறங்காவலராக நியமனஞ்செய்யப்பட்டுள்ளார். Dr கபில வத்சயனின் இறப்பால் உருவாக்கப்பட்ட காலியிடத்தை நிரப்ப அவர் தயாராகவுள்ளார். கோபாலகிருஷ்ணா காந்தி, ஓய்வுபெற்ற தூதரும் மகாத்மா காந்தியின் பெயரனும் ஆவார். 2004 முதல் 2009 வரை மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநராக அவர் பணியாற்றினார்.

**6. உலக மருந்தாளுநர்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. செப்டம்பர் 25 ☑**

ஆ. செப்டம்பர் 26

இ. செப்டம்பர் 27

ஈ. செப்டம்பர் 28

❖ ஒவ்வோர் ஆண்டும் செப்.25 அன்று உலக மருந்தாளுநர்கள் நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளை பன்னாட்டு மருந்துக் கூட்டமைப்பு (FIP) அனுசரிக்கிறது. இத்தேதியைக் கடைப்பிடிப்பதற்கான முடிவு, கடந்த 2009ஆம் ஆண்டில் இஸ்தான்புல்லில் நடந்த FIP கவுன்சில் கூட்டத்தின்போது எடுக்கப்பட்டது.

❖ உடல்நலத்தை மேம்படுத்துவதில் மருந்தாளுநர்களின் பங்கை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இந்நாளின் நோக்கமாகும். "Transforming global health" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**7.எந்தத் தேசிய திட்டத்தின்கீழ், நடுவணரசு, சமீபத்தில் மகாராஷ்டிரா, கோவா, குஜராத் மற்றும் சண்டிகர் ஆகிய மாநிலங்களுக்கு 670 மின்சார பேருந்துகளுக்கு அனுமதி வழங்கியது?**

அ. சூரிய மித்ரா

ஆ. பிரதமர் உஜ்வாலா யோஜனா

**இ. FAME ☑**

ஈ. தேசிய சூரிய மின்னாற்றல் திட்டம்

❖ மின்சார போக்குவரத்துக்கு ஒரு மிகப்பெரிய உந்துதலை அளிக்கும் விதமாக, Faster Adoption and Manufacturing of Electric Vehicle (FAME) இந்தியா திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் மகாராஷ்டிரா, கோவா, குஜராத் மற்றும் சண்டிகரில் 670 மின்சார பேருந்துகளுக்கும், தமிழ்நாடு, மத்திய பிரதேசம், கேரளா, குஜராத் மற்றும் போர்ட் பிளேரில் 241 மின்னேற்ற நிலையங்களுக்கும் நடுவணரசு ஒப்புதல் அளித்துள்ளது. FAME திட்டத்தை கனரக தொழிற்சாலைகள் அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.

**8.சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற "யோகா பிரேக்" நெறிமுறையுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. நலவாழ்வு அமைச்சகம்

ஆ. கல்வி அமைச்சகம்

**இ. AYUSH அமைச்சகம் ☑**

ஈ. உள்துறை அமைச்சகம்




❖ COVID–19 நெறிமுறைகள் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த, 'யோகா இடைவேளை'யை ஆயுஷ் அமைச்சகம் மீண்டும் தொடங்கியது. பணியிலிருந்து சிறிது நேரம் விலகி புத்துணர்வுபெற்று மீண்டும் பணியில் கவனஞ்செலுத்துவதே இந்த ஐந்து நிமிட யோகா இடைவேளை திட்டத்தின் நோக்கமாகும். மொரார்ஜி தேசாய் தேசிய யோகா மையத்துடன் இணைந்து இந்த 5 நிமிட, 'யோகா இடைவேளை' நெறிமுறைகளை கடந்த 2019ஆம் ஆண்டில் AYUSH அமைச்சகம் உருவாக்கியது.

**9.பாரத் கொடுப்பனவுகள் இயக்கப்பிரிவு அமைப்பதற்கு, அண்மையில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கொள்கை அளவிலான ஒப்புதலைப் பெற்ற அமைப்பு எது?**

**அ. வக்ரங்கீ ☑**

ஆ. IDFC

இ. கிராமாலயா

ஈ. ஏர்டெல் கொடுப்பனவு வங்கி

❖ பாரத் கொடுப்பனவுகள் இயக்கப்பிரிவு (BBPOU) அமைப்பதற்கு, வக்ரங்கீக்கு (Vakrangee), RBI (இந்திய ரிசர்வ் வங்கி) கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ளது. கொடுப்பனவு மற்றும் தீர்வை முறைகள்

சட்டம், 2007'இல்' உள்ள விதிகளின்படி இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் BBPS'இன் கீழ் வரும் கொடுப்பனவுகள் தொடர்பான சேவைகளை வக்ரங்கீயால் தற்போது கையாள முடியும்.

**10.இராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள நகர்ப்புறத் துறை ரீதியான திட்டங்களுக்கு, $570 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனுதவியைச் செய்ய ஒப்புதல் அளித்துள்ள வளர்ச்சி வங்கி எது?**

அ. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி

**ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

இ. BRICS வங்கி

ஈ. உலக வங்கி

❖ ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசத்தில் நகர்ப்புறத் துறை ரீதியிலான திட்டங்களுக்கென 2 கடன்கள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக ஆசிய வளர்ச்சி வங்கி அறிவித்துள்ளது. ராஜஸ்தான் நகரங்களில் நீர் வழங்கல் மற்றும் நலவாழ்வு உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு $300 மில்லியன் அமெரிக்க டாலர் கடனும், மத்திய பிரதேச நகர்ப்புற சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக $270 மில்லியன் அமெரிக்க டாலர் கடனையும் வழங்க அவ்வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாடு முழுவதும், 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை'த்திட்டத்தை இன்று (01.10.2020) முதலமைச்சர் எடப்பாடி க பழனிசாமி தொடக்கிவைத்தார். இத்திட்டம் சென்னை, காஞ்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட 32 மாவட்டங்களில் 01.10.2020 முதல் செயல்படுத்தப்படும். மேலும், தூத்துக்குடி, தஞ்சாவூர், விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் 16.10.2020 முதல் செயல்படுத்தப்படும்.

❖ நாட்டிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏழு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில், செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் பங்களிப்புடன் தொடக்கிவைக்கும் அடையாளமாக காம்பாக்டர்கள், மெக்கானிக்கல் ஸ்வீப்பர், இ–ரிக்ஷா வாகன சேவைகளை தமிழ்நாடு அரசு தொடங்கிவைத்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் நிறுவப்படவுள்ள நகரம் எது?**

அ. மும்பை

ஆ. சென்னை

**இ. குவாலியர் ☑**

ஈ. வாரணாசி

❖ மத்திய பிரதேச மாநிலம் குவாலியர் நகரத்தில் உலகத்தரம்வாய்ந்த, "மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்திற்கு" அடிக்கல் நாட்டப்பட்டது. ₹170.99 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள இந்த விளையாட்டு மையத்திற்கு மத்திய அமைச்சரவை கடந்த 2019 பிப்ரவரி.28 அன்று ஒப்புதல் அளித்தது. இது, நாட்டின் முதல் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையமாக இருக்கும்.

**2.இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட உரையாடலின் பெயரென்ன?**

அ. CHAAR DHAM

**ஆ. QUAD ☑**

இ. CONNECT

ஈ. DEVELOP



❖ Quadrilateral Security Dialogue (QUAD) என்பது அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக் களம் ஆகும். அண்மையில், பொதுநல நோக்கில் பிராந்திய பிரச்சனைகள்பற்றி மெய்நிகர் முறையில் இக் கருத்துக்களம் விவாதித்தது. கடைசியாக, கடந்த 2019 செப்டம்பரில் இது நடைபெற்றது. அனைத்தையும் உள்ளடக்கிய இந்தோ–பசிபிக் பிராந்தியத்திற்கான தங்கள் உறுதிப்பாட்டை, இந்தக் கருத்துக்களத்தில் பங்கேற்ற மூத்த அதிகாரிகள் அனைவரும் மறுவுறுதிப்படுத்தினர்.

**3.எந்த நாட்டுடனான பௌத்த உறவை மேம்படுத்துவதற்காக, இந்தியா, $15 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய மானியத்தை அறிவித்துள்ளது?**

அ. நேபாளம்

**ஆ. இலங்கை ☑**

இ. வங்கதேசம்

ஈ. வியட்நாம்



❖ பிரதமர் மோடி மற்றும் இலங்கை பிரதமர் மகிந்த இராஜபக்ஷ இடையேயான முதல் மெய்நிகர் உச்சி மாநாடு அண்மையில் நடைபெற்றது. இலங்கையுடனான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக, இந்தியா, $15 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய மானியத்தை அறிவித்துள்ளது.

❖ இந்தியப்பெருங்கடலில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, அந்நாட்டோடு பாதுகாப்புக்கூட்டணியை விரிவுபடுத்தவும் இந்தியா அப்போது உறுதி தெரிவித்தது.

**4.ஹைட்ரஜன் எரிபொருள் வாகனங்களின் பாதுகாப்பு மதிப்பீடு தரநிலைகளை அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. எரிசக்தி அமைச்சகம்

ஆ. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம்

**இ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

ஈ. MSME அமைச்சகம்

❖ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமானது ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல அடிப்படையிலான வாகனங்களின் பாதுகாப்பு மதிப்பீட்டிற்கான தரங்களை உள்ளடக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலங்களால் இயக்கப்படும் வாகனங்களுக்கான தரங்களைக் குறிப்பிட, மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989'ஐ அமைச்சகம் திருத்தியுள்ளது. இந்தத் தரநிலைகள், தற்போதுள்ள சர்வதேச தரநிலைகளுக்கு இணையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

**5.இந்திய நவநாகரிக உடை வடிவமைப்புக் கவுன்சிலின் தலைவரான சுனில் சேத்தி, கீழ்க்காணும் எந்த அமைப்பின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ. காதி & கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையம் ☑**

ஆ. தேசிய சிறு தொழிலகங்கள் கழகம்

இ. பிரிட்டிஷ் நவநாகரிக உடை வடிவமைப்புக் கவுன்சில்

ஈ. பல்கலைக்கழக மானியக் குழு

❖ MSME அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் காதி & கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையத்தின் (KVIC) ஆலோசகராக இந்திய நவநாகரிக உடை வடிவமைப்புத் துறையின் முன்னோடியான சுனில் சேத்தி நியமிக்கப்பட்டுள்ளார். ஆயத்த ஆடைகளில் சமீபத்திய வடிவமைப்புகள் போக்கு குறித்து சுனில் சேத்தி அவ்வாணையத்திற்கு ஆலோசனை வழங்குவார். உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் காதியை பிரபலப்படுத்துவதில் அவர் கவனம் செலுத்துவார்.

**6.எந்தத் திட்டத்தின் உருவாக்க நாள், "கௌஷல் சே கல் பாட்லெங்கே" எனக் கொண்டாடப்பட்டது?**

அ. பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா

**ஆ. தீனதயாள் உபாத்யாய கிராமீன் கௌஷல்யா யோஜனா ☑**

இ. திறன் இந்தியா கடன் பரப்புரை

ஈ. கௌஷல் சம்மான் நிதி

❖ தீனதயாள் உபாத்யாய கிராமீன் கௌஷல்யா யோஜனாவின் (DDU–GKY) உருவாக்க நாள், "கௌஷல் சே கல் பாட்லெங்கே" எனக் கொண்டாடப்பட்டுள்ளது. DDU–GKY திட்டத்தின் ஆறாவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், அந்தியோதயா திவாஸின் நிகழ்வில், ஊரக வளர்ச்சி

அமைச்சகம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 10.51 இலட்சம் கிராமப்புற இளையோருக்கு பயிற்சியளிக்கப்பட்டு 6.65 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**7.அண்மையில் காலமான திருமிகு S P பாலசுப்பிரமணியத்துடன் தொடர்புடையது எது?**

அ. அரசியல்வாதி

ஆ. கவிஞர்

**இ. பின்னணிப் பாடகர் ☑**

ஈ. நீதியரசர்

❖ மூத்த பின்னணிப் பாடகரான திரு S P பாலசுப்பிரமணியம் (74), COVID–19 தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப்பலனின்றி 2020 செப்.25 அன்று காலமானார். புகழ்பெற்ற பாடகரான இவர், ஒரு பாடகரால் பாடப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பாடல்களுக்காக கின்னஸ் உலக சாதனை படைத்தார். 1979 முதல் 1996 வரை 6 தேசிய விருதுகளை வென்ற இவர், 2001'இல் 'பத்மஸ்ரீ', 2011'இல் 'பத்ம பூஷண்' ஆகிய இரண்டு விருதுகளை வென்றுள்ளார்.

**8.மாநிலத்தில் வாழும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உணவுப்பொருட்களை வழங்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. கேரளம் ☑**

ஈ. ஹரியானா

❖ மாநிலத்தில் வாழும் 1,000 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்கு கேரள மாநில அரசு முடிவுசெய்துள்ளது. 2020 மார்ச் மாதத்தில் நாடங்கின் முதற்கட்டத்தின்போது மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கிய முதல் இந்திய மாநிலமாக கேரளா திகழ்ந்தது. 3ஆம் பாலினத்தவர்களுக்கு தலா ₹700 மதிப்புடைய உணவுப்பொருட்களை வழங்குவதற்கு, கேரள மாநில அரசு, தற்போது அனுமதியளித்துள்ளது.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "D–SII" என்பதன் முழு விரிவாக்கம் என்ன?**

**அ. Domestic – Systemically Important Insurers ☑**

ஆ. Domestic System Import Insurance

இ. Domestic Service Import Insurance

ஈ. Document for Service Import Insurance

❖ ஆயுள் காப்பீட்டுக்கழகம் (LIC), பொதுக் காப்பீட்டுக் கழகம் (GIC) மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் (NIA) ஆகியவற்றை உள்நாட்டு முறைப்படி முக்கிய காப்பீட்டாளர்களாக (D–SII) IRDAI இனங்கண்டுள்ளது.

❖ D–SII ஆனவை பேரளவிளான மற்றும் சந்தை முக்கியத்துவம்வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்களாகும்; அதன் தோல்வி உள்நாட்டு நிதியியல் அமைப்பில் பெருங்கேட்டை விளைக்கும். D–SII'கள் உயர்மட்ட ஒழுங்குமுறையின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படும்.

**10.எந்த நாட்டின் தலைவர், "தலையிடுதல் கூடாது (Non–Interference)" தொடர்பாக ஒப்பந்தம் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்?**

அ. இந்தியா

ஆ. சீனா

இ. ஜப்பான்

**ஈ. இரஷ்யா ☑**

❖ இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், அமெரிக்காவுடனான (USA) ஓர் ஒப்பந்தத்தை முன்மொழிந்துள்ளார். உள்நாட்டு விவகாரங்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் "தலையிடுதல் கூடாது" என்பதே அந்த ஒப்பந்தத்தின் சாராம்சமாகும். இந்த ஒப்பந்தம், ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான (USA) அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு இருக்கும் காலத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

❖ பிற நாடுகளின் தேர்தல் முடிவுகளுக்கு கேட்டை விளைவிக்க இரஷ்யா தனது நிரலாளர்களையும் கேலிச்சித்திரக்கலைஞர்களையும் பயன்படுத்துவதாக மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும், டொனால்ட் டிரம்பிற்கு ஆதரவாக தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க இரஷ்யா முயற்சிப்பதாக அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ 2020 அக்டோபர்.02 – கல்விக்கண் திறந்த 'கர்மவீரர்' காமராஜர் அவர்களின் 45ஆவது நினைவு நாள்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஹேகில் உள்ள சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தில், இந்தியாவுக்கு எதிரான வழக்கை வென்ற நிறுவனம் எது?**

அ. மோர்கன் ஸ்டான்லி

ஆ. பெப்ஸி கோ

இ. கோகோ கோலா

**ஈ. வோடபோன் ☑**

❖ ஹேக் நகரில் அமைந்துள்ள பன்னாட்டு நடுவர் தீர்ப்பாயத்தில் இந்திய அரசுக்கு எதிராக வோடபோன் நிறுவனம் தொடுத்த வழக்கில் அந்நிறுவனம் வெற்றிபெற்றுள்ளது. வோடபோன் நிறுவனத்தின் மீதான இந்திய அரசின் வரி விதிப்பு, வட்டி மற்றும் அபராதம் உள்ளிட்டவை இந்தியாவிற்கும் நெதர்லாந்திற்கும் இடையேயான முதலீட்டு ஒப்பந்தத்தை மீறுவதாக தீர்ப்பாயம் கூறியது. வரி, வட்டி மற்றும் அபராதம் என சுமார் $2 பில்லியன் டாலர் உட்பட மொத்தம் ₹279 பில்லியனை இந்தியா கோரியது.

**2.நடப்பாண்டு (2020) வரும் பன்னாட்டு சைகை மொழிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ. Sign Languages are for Everyone ☑**

ஆ. Sign Languages for Communication

இ. Making Sign Languages Mainstream

ஈ. IT for Sign Languages

❖ 'பன்னாட்டு சைகை மொழிகள் நாள்' ஆனது செப்டம்பர்.23 அன்று கொண்டாடப்படுகிறது. இந்தியாவில், இது சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின்கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக இயங்கிவரும் இந்திய சைகை மொழி ஆராய்ச்சி & பயிற்சி மையத்தால் கொண்டாடப்பட்டது. ஐநா அவை, செப்.23'ஐ பன்னாட்டு சைகை மொழிகள் நாளாக அறிவித்தது. சைகை மொழிகள் குறித்த விழிப்புணர்வை அதிகரி –ப்பதற்கும், அனைவருக்கும் அதன் அணுகலை விரிவாக்குவதற்குமாக, "Sign Languages are for Every one" என்பது நடப்பாண்டு (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**3.உலக கடல்சார் போக்குவரத்து நாள் (World Maritime Day) அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. 20 ஜூலை

**ஆ. 24 செப்டம்பர் ☑**

இ. 19 அக்டோபர்

ஈ. 4 நவம்பர்

❖ உலக கடல்சார் போக்குவரத்து நாளானது ஆண்டுதோறும் செப்டம்பர்.24 அன்று பன்னாட்டு கடல்சார் அமைப்பால் கொண்டாடப்படுகிறது. இது, உலக பொருளாதாரத்திற்கு சர்வதேச கடல்சார் தொழில்களின் குறிப்பாக கப்பல் போக்குவரத்து அளிக்கும் பங்களிப்பை குறிக்கின்றது. "Sustainable Shipping for a Sustainable Planet" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

**4.குண்டர் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) மசோதாவை நிறைவேற்றியுள்ள மாநிலச் சட்டமன்றம் எது?**

**அ. குஜராத் ☑**

ஆ. இராஜஸ்தான்

இ. உத்தர பிரதேசம்

ஈ. மத்திய பிரதேசம்

❖ குண்டர் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) மசோதாவை 2020 செப்.24 அன்று குஜராத் சட்டமன்றம் நிறைவேற்றியது. இம்மசோதா சமூக விரோத தீயசக்திகள் மற்றும் வன்குற்றம் புரிவோரை மிகக்கண்டிப்புடன் கையாளுவதோடு 7 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கவும் முற்படுகிறது. 15 நாட்களுக்கு பதிலாக 30 நாள் காவலில் வைக்கவும், தற்போதைய 60 நாட்களுக்கு பதிலாக 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வும் இது காவல்துறைக்கு அதிகாரம் அளிக்கிறது.

**5.எந்த அமைச்சகத்தின்கீழ், நாடு முழுவதும் தொகுதி அளவிலான கொத்துக்களை உருவாக்குவதற்கான தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது?**

**அ. ஜவுளித்துறை அமைச்சகம் ☑**

ஆ. வடகிழக்கு பிராந்திய வளர்ச்சி அமைச்சகம்

இ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம்

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

❖ ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் உட்பட நாடு முழுவதும் தொகுதி அளவில் கொத்து நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக இந்திய அரசின் மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் தேசிய கைத்தறி மேம்பாட்டுத்திட்டத்தை (NHDP) செயல்படுத்துகிறது. மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட சாத்தியக்கூறு நிறைந்த முன்மொழிவுகளின் அடிப்படையில் அவை அனுமதிக்கப்படுகின்றன.

**6.தேசிய ஊட்டச்சத்து ஆய்வை மேற்கொள்ளும் அமைச்சகம் எது?**

**அ. நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம் ☑**

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வழங்கல் அமைச்சகம்

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

❖ அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலைகுறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக மத்திய நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம் தேசிய ஊட்டச்சத்து ஆய்வுகளை மேற்கொள்கிறது. அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு விரிவான தேசிய ஊட்டச்சத்து ஆய்வு (CNSS) (2016–2018), பள்ளிசெல்லும் சிறார்களின் ஊட்டச்சத்து நிலைகுறித்த தரவுகளைச் சேகரித்தது.

**7.சமீபத்தில், பின்வரும் எந்(தெந்)த தொழிலாளர் குறியீடை(டுகளை) மாநிலங்களவை நிறைவேற்றியது?**

அ. தொழில்துறை உறவுகள் குறியீடு, 2020

ஆ. பணிசார் பாதுகாப்பு, நலவாழ்வு & பணிபுரி சூழல்கள் குறியீடு, 2020

இ. சமூகப் பாதுகாப்பு குறித்த குறியீடு, 2020

**ஈ. மேற்கண்ட அனைத்தும் ☑**

❖ (i) தொழிற்துறை உறவுகள் குறியீடு, 2020 (Industrial Relations Code, 2020) (ii) பணிசார் பாதுகாப்பு, நலவாழ்வு மற்றும் பணிபுரி சூழல்கள் குறியீடு, 2020 (Code on Occupational Safety, Health & Working Conditions Code, 2020) மற்றும் (iii) சமூகப் பாதுகாப்பு குறித்த குறியீடு, 2020 (Social Security Code, 2020) ஆகிய மூன்று தொழிலாளர் குறியீடுகளை மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது.

**8. 'ஏகலைவன் மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள்' திட்டத்தைச் செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

**அ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் ☑**

जनजातीय कार्य मंत्रालय
MINISTRY OF TRIBAL AFFAIRS
GOVERNMENT OF INDIA
सत्यमेव जयते

ஆ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

இ. கல்வி அமைச்சகம்

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

❖ பழங்குடியின (ST) மாணாக்கருக்கு தரமான தொடக்க நிலை, இடைநிலை & மேல்நிலைக் கல்வியை வழங்குவது; கல்வியினூடாக சிறந்த வாய்ப்புகளை அவர்களை அணுகவைப்பது; வழக்கமான நாட்டு மக்களுக்கு இணையாக அவர்களை வளர்த்தெடுப்பது ஆகிய முதன்மை நோக்கங்களுடன், மத்திய பழங்குடியின நலத்துறை அமைச்சகத்தால், 2019–20 முதல், 'ஏகலைவன் மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள்' திட்டம் ஒரு மத்திய துறை திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**9. 'U–Rise' என்ற தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. கேரளம்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. பஞ்சாப்

❖ மாணாக்கருக்கு தொழில் வாழ்க்கை குறித்த ஆலோசனைகளை வழங்குவதற்காக உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், 'U–Rise' என்ற பெயரிலான ஓர் ஒருங்கிணைந்த தளத்தைத் தொடங்கியுள்ளார். தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்கு, மாணாக்கருக்கு உதவிகளை வழங்குவதை இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மின்னணு உள்ளடக்கம், மின்–நூலகம் மற்றும் இணையவழி பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாகும். மாநிலத்தின் உள்ளகப் பகுதிகளில் வசிக்கும் மாணாக்கருக்கு இவை உதவிகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10.பெண்களுக்கு எதிரான குற்றங்களை கண்காணிப்பதற்காக, 'ஆபரேஷன் துராச்சாரி'யைத் தொடங்க உள்ள மாநில அரசு எது?**

**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

❖ உத்தர பிரதேச மாநிலமானது பெண்கள் / சிறுமிகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடிவாளம் போடும் விதமாக, விரைவில், உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள சாலைகளின் ஓரத்தில் பாலியல் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ள கொடுங்குற்றவாளிகளின் நிழற்படங்களைத் தாங்கிய பதாகைகளை வைப்பதற்காக, 'ஆபரேஷன் துராச்சாரி' என்றவொன்றைத் தொடங்க முடிவுசெய்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டில் முதன்முறையாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், முன்னோட்ட அடிப்படையில், நியாய விலைக்கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டம் அக்.1 அன்று தொடங்கப்பட்டது. தயாமின், நயாசின் அடங்கிய திரவத்தில் அரிசியை நனைத்து உலரவைத்து, அதன்மேல் இரும்புச்சத்துமிக்க பைரோ பாஸ்பேட்டுகளை தூவி செறிவூட்டப்பட்ட அரிசி அதற்குரிய ஆலைகளில் தயாரிக்கப்படுகிறது. 100 கிராம் செறிவூட்டப்பட்ட அரிசியில் இரும்புச்சத்து 4.25 மில்லி கிராம், போலிக் அமிலம் 12.5 மைக்ரோ கிராம், வைட்டமின் பி12 0.125 மைக்ரோ கிராம் ஆகியவை அடங்கியுள்ளன. திருச்சி மாவட்டத்தில் 100 கிகி வழக்கமான அரிசியுடன் 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசி கலக்கப்பட்டு நியாயவிலைக் கடைகளில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

❖ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே அகரத்தில் நடைபெற்ற அகழாய்வில், இருபது அடுக்குகள் கொண்ட உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை ஆறாம்கட்ட அகழாய்வில் கிடைத்த உறை கிணறுகளின் உயரத்தைவிட தற்போது கிடைத்துள்ள உறைகிணறு அதிக உயரங்கொண்டதாகும்.

❖ சிவகங்கை அருகே 'ஆசிரியம்' பற்றிய 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'ஆசிரியம்' என்றால் அடைக்கலம் தருதல், பாதுகாப்பு தருதல் என்று பொருள்.

❖ உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மத்திய அரசின் உதவி தலைமை அரசு வழக்குரைஞராக கதிர்வேல் பணிபுரிந்து வந்தார். அவர் பதவிக்காலம் முடிந்ததையடுத்து குமரி மாவட்டம் வெளிக்கோடு கிராமத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் விக்டோரியா கௌரி, அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் பெண் வழக்குரைஞர் ஒருவர் நடுவணரசின் உதவி தலைமை அரசு வழக்குரைஞராக நியமனம் செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. G20 தலைவர்கள் உச்சிமாநாட்டை மெய்நிகராக நடத்தவுள்ள நாடு எது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ. ஜப்பான்

**இ. சௌதி அரேபியா ☑**

ஈ. இந்தியா

❖ சௌதி அரேபியாவின் அண்மைய அறிவிப்பின்படி, G20 தலைவர்கள் உச்சிமாநாட்டை அந்நாடு வரும் நவ.21–22 ஆகிய தேதிகளில் நடத்தவுள்ளது. COVID–19 தொற்றுநோயால் ஏற்படும் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதில் இவ்வுச்சிமாநாடு கவனஞ்செலுத்தும் என்றும் அந்நாடு கூறியது. தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காக G20 கூட்டமைப்பு, $21 பில்லியன் டாலர்களுக்கு மேல் பங்களிப்பு செய்தது. குறைந்தபட்ச வளர்ச்சிகொண்ட நாடுகளுக்கான கடன் இடைநீக்க முன்னெடுப்பையும் இந்த அமைப்பு தொடங்கியுள்ளது.

**2. COVID–19 தடுப்பூசி தளத்தைத் தொடங்கும்போது, மத்திய சுகாதார அமைச்சர், எந்த நிறுவனத்தின் 100 ஆண்டுகால வரலாற்று காலச்சுவடை வெளியிட்டார்?**

அ. AIIMS

**ஆ. ICMR ☑**

இ. NMA

ஈ. CSIR

❖ மத்திய நலவாழ்வு அமைச்சர் ஹர்ஷ்வர்தன் சிங், சமீபத்தில், COVID–19 குறித்த அனைத்து சமீபத்திய தகவல்களையும் உள்ளடக்கிய ஓர் இணையதளத்தை தொடங்கினார். நாட்டில் மேற்கொள்ளப்படும் COVID–19 தடுப்பூசி குறித்த ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் குறித்தவையும் இதில் அடங்கும். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் (ICMR) நூறாண்டுகால காலச்சுவட்டையும் அமைச்சர் அப்போது தொடங்கிவைத்தார்.

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'குல்ஹதுபுஷி' அமைந்துள்ள நாடு எது?**

அ. இலங்கை

ஆ. நேபாளம்

**இ. மாலத்தீவு ☑**

ஈ. இந்தியா

❖ தமிழ்நாட்டின் தூத்துக்குடி மற்றும் கேரள மாநிலத்தின் கொச்சினிலிருந்து மாலத்தீவுக்கு சரக்கு கப்பல் போக்குவரத்து சேவையை இந்திய அரசு தொடங்கியுள்ளது. இந்தக் கப்பல் சேவையின் தொடக்கமாக, 'MCP Linz' என்ற கப்பல் வ உ சிதம்பரனார் துறைமுகத்திலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு கொச்சி துறைமுகத்துக்கு புறப்பட்டுச் சென்றது. அங்கு மேலும், பல்வேறு சரக்குகளை ஏற்றிக்கொண்டு வடக்கு

மாலத்தீவில் உள்ள குல்ஹதுபுஷி துறைமுகத்தை அடைந்த பிறகு மாலே துறைமுகத்தை செப்.29ஆம் தேதி சென்றடைந்தது. இந்தக்கப்பல்சேவையை இந்திய கப்பல் கழகம் மாதத்துக்கு மும்முறை இயக்கும்.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "Branded Royal" என்பதுடன் தொடர்புடைய உயிரினம் எது?**

அ. பாம்பு

**ஆ. வண்ணத்துப்பூச்சி ☑**

இ. தவளை

ஈ. கடலாமை

❖ "Branded Royal" என்று பெயரிடப்பட்ட ஓர் அரியவகை வண்ணத்துப்பூச்சி, அண்மையில், நீலகிரியின் கோத்தகிரி மலைச்சரிவுகளில் காணப்பட்டது. இந்த வகை வண்ணத்துப்பூச்சியை, 1888ஆம் ஆண்டில், GF ஹாம்ப்சன் என்பவர் ஆவணப்படுத்தியிருந்தார். இந்த வண்ணத்துப்பூச்சிபற்றி இதுபோன்ற ஒரு பதிவுமட்டுமே தமிழ்நாட்டில் உள்ளது. இது (*Tajuria melastigma*) லைசெனிட் வகையினமாகும்.

**5.யார் தலைமையின்கீழ், பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் செயல்முறை–2020 தயாரிக்கப்பட்டது?**

**அ. அபூர்வா சந்திரா ☑**

ஆ. ராஜீவ் குமார்

இ. ராஜ்நாத் சிங்

ஈ. அஜீத் தோவால்

❖ பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் செயல்முறை–2020'ஐ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் புது தில்லியில் வெளியிட்டார். கடந்த 2002ஆம் ஆண்டு முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் செயல்முறை, உள்நாட்டு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கவும், பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் தற்சார்பை எட்டவும் அவ்வப்போது திருத்தப்பட்டு வருகிறது. இதனை வடிவமைப்பதற்காக முதன்மை ஆய்வுக்குழு ஒன்றை தலைமை இயக்குநர் (கொள்முதல்) அபூர்வா சந்திரா தலைமையில் 2019 ஆகஸ்டில் பாதுகாப்பு அமைச்சகம் அமைத்தது. 2020 அக்டோபர் 1 அன்று பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் செயல்முறை–2020 அமலுக்கு வந்தது.

**6. 'Health in India' என்ற தலைப்பில் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வழங்கல் அமைச்சகம்

ஈ. நலவாழ்வு அமைச்சகம்

❖ 'Health in India' என்ற தலைப்பில் ஓர் ஆய்வறிக்கையை புள்ளியியல் & திட்ட அமலாக்கம் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கை, NSS அட்டவணை 25.0 (குடும்ப நுகர்வு: நலவாழ்வு) ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த அறிக்கையின்படி, சொராஷ்டிரிய மக்கள், வெகு எளிதாக நோயால் பீடிக்கப்படுகின்றனர்.

**7.இந்திய தரக்கழகத்துடன் இணைந்து மத்திய சுற்றுலா அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ள செயலியின் (app) பெயர் என்ன?**

அ. அதிதி (ADHITHI)

**ஆ. சாதி (SAATHI) ☑**

இ. வருகவே! (WELCOME!)

ஈ. வியக்கத்தக்கது (INCREDIBLE)

❖ உலக சுற்றுலாத் துறையை கருத்தில்கொண்டு இந்திய தரக்கழகத்துடன் இணைந்து SAATHI என்ற செயலியை சுற்றுலா அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது. பாதுகாப்பு தரங்கள் மற்றும் செயல்பாடுகளை பராமரிப்பதிலும் விருந்தோம்பல் தொழிற்துறைக்கும் இந்தச் செயலி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஊழியர்களிடையே நம்பிக்கையை வளர்க்கும். வியத்தகு இந்தியா சுற்றுலா வழிநடத்திகள் சான்றளிப்புத் திட்டம் குறித்த 'Pathik' என்ற திரைப்படமும் வெளியிடப்பட்டது.

**8.அண்மையில், ICT துளிர் நிறுவனங்கள் விருது – 2020'ஐப் பெற்ற இன்டோட் டெக்னாலஜிஸ் சார்ந்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளம் ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

❖ புத்தாக்கத்தின் மூலம் டிஜிட்டல் ஒலிபரப்பு ஏற்பிகள் துறையில் சிறந்து விளங்கியமைக்காக, கேரள மாநிலம் கொச்சியைச் சார்ந்த இன்டோட் டெக்னாலஜிஸ், ICT துளிர் நிறுவனங்கள் விருது–2020'ஐ வென்றுள்ளது. இந்த நிறுவனத்தை கேரள துளிர் நிறுவனங்கள் இயக்கம் (KSUM) ஆதரித்து வருகிறது. இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை சார்ந்த அமைப்புகளின் கூட்டமைப்பு (ASSOCHAM) மத்திய மின்னணு & தகவல் தொழினுட்ப அமைச்சகம் மற்றும் எரிக்சன் இணைந்து இந்நிகழ்வை நடத்தின.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கங்கா அவலோகன்' என்றால் என்ன?**

அ. பரப்புரை

**ஆ. அருங்காட்சியகம் ☑**

இ. நினைவு அஞ்சல்தலை

ஈ. கால்வாய்

❖ நமாமி கங்கை திட்டத்தின்கீழ் ஆறு மிகப்பெரிய வளர்ச்சித் திட்டங்களை உத்தரகண்டில் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார். கங்கையாற்றைப்பற்றிய பிரத்தியேக அருங்காட்சியகமான 'கங்கா அவலோகன்' என்பதையும் அவர் ஹரித்துவாரில் திறந்துவைத்தார். "Rowing Down the Ganges" என்னும் நூலையும் ஜல் ஜீவன் திட்டத்தின் புதிய இலச்சினையையும் அவர் அப்போது வெளியிட்டார். ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் கிராமப்பஞ்சாயத்துகள் மற்றும் நீர்குழுக்களுக்கான வழிகாட்டுதல்களையும் அந்நிகழ்ச்சியின்போது பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

**10.எந்த நாட்டோடு 'பசுமை முக்கியத்துவ பங்களிப்பு' நிறுவப்படுவதாக இந்தியா அறிவித்துள்ளது?**

அ. பின்லாந்து

ஆ. சுவிச்சர்லாந்து

**இ. டென்மார்க் ☑**

ஈ. பிரான்ஸ்

❖ பிரதமர் நரேந்திர மோடி டென்மார்க்கின் பிரதமரான மெட்டே பிரடெரிக்சனுடனான முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டார். கூட்டு அறிக்கையின்படி, அரசியல், எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்போதுள்ள ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணையத்தின் அடிப்படையில் புதிய 'பசுமை முக்கியத்துவ பங்களிப்பு – Green Strategic Partnership' நிறுவப்படும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ உழவர்களுக்கு மிகக்குறைந்த வாடகையில் உழவு எந்திரங்கள் உள்ளிட்ட எந்திரங்களை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் க. பழனிசாமி தொடங்கிவைத்துள்ளார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மும்பை பங்குச்சந்தை (BSE) ஆனது கீழ்க்காணும் எந்த வங்கியுடன் கூட்டிணைந்துள்ளது?**

அ. ஆக்ஸிஸ் வங்கி

**ஆ. YES வங்கி ☑**

இ. கோட்டக் மஹிந்திரா வங்கி

ஈ. ஐசிஐசிஐ வங்கி

❖ சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (SME) ஊக்கமளிப்பதற்காக YES வங்கியுடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக மும்பை பங்குச்சந்தை (BSE) அறிவித்துள்ளது. BSE'இன் கூற்றுப் படி, பட்டியலிடப்பட்டுள்ள SME'களுக்கு விழிப்புணர்வு மற்றும் அறிவுப்பகிர்வு திட்டங்களின் மூலம், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் வங்கியியல் & நிதியியல் தீர்வுகள் ஆகியவற்றில் அதிகாரமளிப்பதை இந்த ஒப்பந்தம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. பட்டியலிடப்பட்ட SME'களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் தயாரிப்புகளையும் YES வங்கி வழங்கும்.

**2.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Cat Que' என்பது எந்த நாட்டில் கண்டறியப்பட்ட நச்சுயிரியாகும்?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. கென்யா

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகத்தின் (ICMR) ஓர் அண்மைய எச்சரிக்கை அறிவிப்பின்படி, சீனாவில் 'Cat Que' என்ற ஒரு புதிய வகை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸ் சீனா & வியட்நாமில் உள்ள கியூலெக்ஸ் கொசுக்கள் மற்றும் பன்றிகளிலிருந்து பரவுகிறது. ICMR'இன் கூற்றுப்படி, இந்த வகை கியூலெக்ஸ் கொசுக்களுக்கேற்ற இனப்பெருக்க காலநிலை இந்தியாவில் நிலவி வருகிறது. இது இந்திய மருத்துவ ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**3.மனிதவுரிமைகள் குழுமமான பன்னாட்டு அவை, எந்த நாட்டிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ. இந்தியா ☑**

இ. சீனா

ஈ. வட கொரியா

❖ மனிதவுரிமைகள் குழுமமான பன்னாட்டு பொது மன்னிப்பு அவையானது தான் இந்தியாவில் நடத்தி வரும் அனைத்து பரப்புரை மற்றும் ஆராய்ச்சிப் பணிகளையும் நிறுத்துவதாக அறிவித்துள்ளது. உரிமை மீறல்கள்குறித்து பேசியதற்காக வங்கிக்கணக்குகளை அரசு முடக்கியுள்ளது என குழு தெரிவித்துள்ளது.

❖ ஜம்மு–காஷ்மீரில் நிகழ்ந்த உரிமை மீறல்கள் மற்றும் தில்லியில் நடந்த கலவரங்கள் குறித்து இந்தப் பன்னாட்டு பொது மன்னிப்பு அவை முன்னர் எடுத்துரைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**4. MSF இன்கீழ் வங்கிகளுக்கான மேம்பட்ட கடன் வசதியை, ரிசர்வ் வங்கி, எதுவரை நீட்டித்துள்ளது?**

அ. 2021 ஜனவரி

**ஆ. 2021 மார்ச் ☑**

இ. 2021 ஏப்ரல்

ஈ. 2021 ஜூன்

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) வங்கிகளுக்கு வழங்கும் மேம்பட்ட கடன் வசதியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது. 2021 மார்ச்.31 வரை பணப்புழக்க பற்றாக்குறையை பூர்த்தி செய்ய, MSF திட்டத்தின்கீழ் கடன் பெறுவதற்கான வசதி இதுவாகும். கடந்த மார்ச் மாதத்தில், RBI, வங்கிகளின் நிகர தேவையின் வரம்பை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக அதிகரித்திருந்தது.

**5.தனது ஐந்தாண்டுகால விண்மீன்கள் படமாக்கல் பணியை நிறைவுசெய்துள்ள இந்திய விண்வெளி செயற்கைக்கோள் எது?**

**அ. அஸ்ட்ரோஸாட் ☑**

ஆ. ரிஸாட்

இ. கார்டோஸாட்

ஈ. தெற்காசிய செயற்கைக்கோள்

❖ இந்தியாவின் முதல் பன்னலைநீள வானியல்சார் செயற்கைக்கோளான "அஸ்ட்ரோஸாட்", சமீபத்தில் விண்வெளியில் தனது ஐந்தாண்டு கால விண்மீன்கள் படமாக்கல் பணியை நிறைவுசெய்துள்ளது. இந்தச் செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) கடந்த 2015 இல் ஏவியது. இது, எண்ணூறு தனித்துவமான விண்மூலங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆய்வுகளை வெற்றிகரமாக மேற்கொண்டது. புவியிலிருந்து சுமார் 10 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஒரு விண்மீன் திரளும் இதைப் பயன்படுத்தி கண்டறியப்பட்டுள்ளது.

**6.எந்த நடிகருக்கு, UNDP இன் "SDG சிறந்த மனிதநேயச் செயற்பாட்டாளர்" விருது வழங்கப்பட்டுள்ளது?**

அ. சிவகார்த்திகேயன்

ஆ. கீர்த்தி சுரேஷ்

**இ. சோனு சூத் ☑**

ஈ. தீபிகா படுகோனே

❖ நடிகர் சோனு சூத் அவர்களுக்கு ஐநா வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) "SDG சிறந்த மனிதநேயச் செயற்பாட்டாளர் விருது" வழங்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்தோர், அயல்நாடுகளில் சிக்கித்தவிக்கும் மாணாக்கரை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கான அவரது தன்னலமற்ற உதவிக்காக

அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அருகிலுள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்காக மும்பையில் உள்ள தனது உணவகத்தையும் அவர் திறந்து வைத்தார்.

**7.பிளிப்கார்ட் ஆனது எந்தக் காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து இணைவழி பணமோசடிகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. தேசிய காப்பீட்டு நிறுவனம்

**ஆ. பஜாஜ் அலையன்ஸ் ☑**

இ. TATA AIG

ஈ. சுந்தரம் காப்பீடு

❖ பிளிப்கார்ட் மற்றும் பஜாஜ் அலையன்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து "டிஜிட்டல் சுரக்ஷா குழுமக் காப்பீட்டை" வழங்க முன்வந்துள்ளன. இணையவழித் தாக்குதல்கள், இணையவழி மோசடிகள் (அ) இணையதளங்களில் இதுபோன்ற பிற நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் பண இழப்புகளுக்கு எதிராக தங்களை தற்காத்துக்கொள்ள விரும்பும் வாடிக்கையாளர்களை காப்பதை இந்தக் காப்பீட்டுத் திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது. இக்காப்பீட்டுத் திட்டம், இணைவழி மோசடி ஏற்பட்டால், காப்பீடு செய்யப்பட்ட முழுத்தொகையையும் காப்பீடுதாரருக்கு வழங்குகிறது.

**8.எந்த நாட்டிலிருந்து 72,000 தாக்குதல் துப்பாக்கிகளை இந்தியா வாங்கவுள்ளது?**

அ. இஸ்ரேல்

ஆ. ஈரான்

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. இரஷ்யா

❖ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் கழகம் ஆனது ₹2290 கோடி மதிப்புள்ள கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டங்களுள் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து 72,000 தாக்குதல் துப்பாக்கிகள் பெறுவதும் அடங்கும். உள்நாட்டுத் தொழிலகங்கள் மற்றும் அயல்நாட்டு விற்பனையாளர்களிடமிருந்து இவை கொள்முதல் செய்யப்படும். இது, 'தற்சார்பு இந்தியா' கொள்கையுடன் இணக்கமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.தமிழ்நாட்டில், புதிய 'சேமிப்புக்கிடங்கைத்' தொடங்கியுள்ள மின்னணு வணிக நிறுவனம் எது?**

அ. பிளிப்கார்ட்

ஆ. கிளவுட் டெயில்

இ. அலிபாபா

**ஈ. அமேசான் ☑**

❖ முதன்மை மின்னணு வணிக நிறுவனமான அமேசான் தனது புதிய சேமிப்பு மையத்தை தமிழ்நாட்டில் தொடங்கியுள்ளது. இது, அந்நிறுவனத்தின் வலையமைப்பை தமிழ்நாட்டில் வலுப்படுத்துவதை நோக்கம் எனக்கொண்டுள்ளது. இவ்வசதி, தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்புகளை வழங்கும் மற்றும்

பொருளாதாரத்திற்கு ஓர் ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏழு இலட்சம் கன அடி அளவுக்கு சேமிப்பு இடம் கொண்டுள்ள இந்தச்சேமிப்புக்கிடங்கில், இலட்சக்கணக்கான தயாரிப்புகள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றைச் சேமிக்கவியலும்.

**10.மத்திய எரிசக்தி அமைச்சகத்துடன் கையெழுத்திட்டு, 2020–21ஆம் ஆண்டிற்கான தனது இலக்குகளை நிர்ணயித்துள்ள பொதுத்துறை நிறுவனம் எது?**

அ. ONGC

**ஆ. NTPC ☑**

இ. PFC

ஈ. GAIL

❖ மத்திய எரிசக்தி அமைச்சகத்துடனான ஒப்பந்தம் ஒன்றில் அண்மையில் NTPC கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில், 2020–21ஆம் நிதியாண்டில் அடைய வேண்டிய இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 340 BU மின்னுற்பத்தி, 15 மில்லியன் மெட்ரிக் டன் நிலக்கரி தயாரிப்பு, ₹21,000 கோடி முதலீட்டு செலவினங்கள் மற்றும் செயல்பாடுகளிலிருந்து ₹98,000 கோடி வருவாய் ஆகியவை சிறப்புப்பிரிவின் கீழ் 2020–21ஆம் ஆண்டுக்கான முக்கிய இலக்குகளாம். CAPEX உள்ளிட்ட இதர நிதி அளவுகோல்களும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. 'கரியமில உமிழ்வைத்தடுப்பது & எரிசக்தி மாற்றுத் திட்ட'த்திற்கான எந்த நாட்டின் தூதரகத்துடனான நோக்க அறிக்கையில் NITI ஆயோக் கையெழுத்திட்டுள்ளது?**

அ. ஜெர்மனி

ஆ. பின்லாந்து

**இ. நெதர்லாந்து ☑**

ஈ. ஐக்கியப் பேரரசு

❖ தூய்மையான மற்றும் அதிக அளவிலான எரிசக்திக்கு வழிவகுக்கும் வகையில், கரியமில உமிழ்வைத் தடுப்பது மற்றும் எரிசக்தி மாற்றுத் திட்டத்திற்குமான நோக்க அறிக்கை ஒன்றில் NITI ஆயோக்கும், புது தில்லியில் உள்ள நெதர்லாந்து தூதரகமும் கையெழுத்திட்டுள்ளன. கொள்கை வடிவமைப்பாளர்கள், தொழிலமைப்புகள், உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் துறைசார்ந்த நிபுணர்கள்போன்ற பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதற்கான தளத்தை இந்த ஒப்பந்தத்தின்மூலம் NITI ஆயோக்கும் நெதர்லாந்து தூதரகமும் உருவாக்கும்.

**2.உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஊக்கியுடன்கூடிய எந்த மீயொலி ஏவுகணை, சமீபத்தில், வெற்றிகரமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது?**

**அ. பிரமோஸ் ☑**

ஆ. நிர்பை

இ. ஷௌரியா

ஈ. விராத்

❖ இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு உபகரணங்களைக் கொண்டு தயாரான பிரமோஸ் ஏவுகணை, சமீபத்தில், வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஊக்கி (booster), பறக்கும் பிரிவு போன்ற பல்வேறு உபகரணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கண்டம்விட்டு கண்டம்பாயக்கூடிய நவீன ஏவுகணை, ஒடிசா மாநிலத்தின் பாலாசூரில் அமைந்துள்ள சோதனை தளத்திலிருந்து பரிசோதித்து பார்க்கப்பட்டது. இது அதன் முந்தைய 290 கிமீ வரம்பிலிருந்து சுமார் 400 கிமீ என்ற புதிய வரம்பிற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

**3.எந்த வளைகுடா நாட்டின் எமிராக (ஆட்சியாளர்) ஷேக் நவாப் பதவியேற்றுள்ளார்?**

அ. ஓமான்

ஆ. பக்ரைன்

**இ. குவைத் ☑**

ஈ. சௌதி அரேபியா

❖ ஷேக் நவாப் என்றும் அழைக்கப்படும் ஷேக் நவாப் அல்–அகமத் அல்–சபா குவைத்தின் எமிர் (தலைவர்) ஆக பதவியேற்றுள்ளார். முந்தைய ஆட்சியாளர் ஷேக் சபா அல்–அகமத் அல்–ஜாபர் அல்–சபா, சமீபத்தில்,

அமெரிக்காவில் தனது 91ஆம் வயதில் காலமானார். ஷேக் சபா, பதினான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டை ஆட்சிசெய்தார்; புதிய பட்டத்தரசரான ஷேக் நவாபுக்கு தற்போது 83 வயதாகிறது.

**4.USA'இன் 'Citizen Diplomacy' விருதுக்கு இணை வெற்றியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள அமைப்பு எது?**

அ. பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

ஆ. TATA அறக்கட்டளை

இ. ரிலையன்ஸ் அறக்கட்டளை

**ஈ. சேகல் அறக்கட்டளை ☑**

❖ இந்தியாவின் சேகல் அறக்கட்டளை, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) 'Citizen Diplomacy' விருதுக்கு இணை வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அதன் மனித உரிமைகள் மற்றும் கிராமப்புற இந்தியாவில் பெண்களின் அதிகாரமளித்தல் பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

❖ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வெளியுறவுக்கொள்கையை உலகெங்கிலும் வலுப்படுத்தும் குடிமக்கள் மற்றும் அமைப்புகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக அமெரிக்க உலகளாவிய பொது விவகாரங்களுக்கான பணியகம், கடந்த 2017ஆம் ஆண்டில் இவ்விருதை அறிமுகப்படுத்தியது.

**5. 16 ஆண்டுகளுக்குப் பிறகு கோலார் தங்க வயல்களில் ஆய்வு செய்யத் தொடங்கிய நிறுவனம் எது?**

அ. தேசிய கனிம மேம்பாட்டு கழகம்

**ஆ. கனிம ஆய்வுக்கழகம் ☑**

இ. ரிலையன்ஸ் தொழிலகங்கள்

ஈ. இந்திய நிலக்கரி நிறுவனம்

❖ கர்நாடக மாநிலத்தில் உள்ள கோலார் தங்க வயல்களை (KGF) கனிம ஆய்வுக் கழகம் ஆய்வுசெய்யத் தொடங்கியுள்ளது. கனிம ஆய்வுக் கழகம் என்பது சுரங்கங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் மினி இரத்னா தகுதிபெற்ற ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்த ஆய்வு நடவடிக்கை, கடந்த பதினான்கு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள தங்க வயலை ஆராய்வது தொடர்பான பாரத் தங்கங்கள் ஆய்வு நிறுவனத்தின் சிக்கலைத் தீர்க்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் கூற்றுப்படி, முழு வளர்ச்சியடைந்த ஓர் இந்திய ஆண்மகனுக்கான புதிய சிறந்த எடை (ideal weight) என்ன?**

**அ. 65 கிகி ☑**

ஆ. 85 கிகி

இ. 95 கிகி

ஈ. 100 கிகி

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் தேசிய ஊட்டச்சத்து கல்வி நிறுவனமானது ஓர் இந்திய ஆணின் சிறந்த உடல் எடையை 2010ஆம் ஆண்டிலிருந்த 60 கிலோவிலிருந்து தற்போது 65 ஆகவும், இந்தியப் பெண்ணின் சிறந்த உடல் எடையை ஐம்பது கிலோவிலிருந்து ஐம்பத்தைந்து

ஆகவும் உயர்த்தியுள்ளது. மேலும், வயது வந்த இந்தியர்களுக்கான வரம்பு தற்போது 19–39ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது 2010ஆம் ஆண்டில் 20–39ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**7.இந்திய ஆயுதப்படை வீரர்கள் உருவாக்கும் புத்தாக்கங்களை அடையாளங்காணுவதற்காக, பாதுகாப்பு அமைச்சகம் தொடங்கியுள்ள முன்னெடுப்பின் பெயர் என்ன?**

அ. ஆயுதப்படை திட்டம்

ஆ. ஐடியா படை

**இ. iDEX4Fauji ☑**

ஈ. Fauji இயக்கம்

❖ iDEX4Fauji என்பது இந்திய ஆயுதப்படை வீரர்களால் உருவாக்கப்படும் புத்தாக்கங்களை இனங்காண பாதுகாப்பு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும். ஆயுதப்படைகளின் உறுப்பினர்க –ளால் இனங்காணப்பட்ட புத்தாக்கங்களுக்கு வெகுமதி அளிப்பதற்காக இது தொடங்கப்பட்டுள்ளது. மேலும், வீரர்கள் / கள அமைப்புகளிடமிருந்து புதுமையான எண்ணங்கள் மேலோங்கச் செய்வதை இது அதிகரிக்கும். பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட்அப் சவால்–4'ஐஉம் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

**8.இந்தியா வழங்கிய கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை மறுஆய்வு செய்வதற்காக, எந்த நாட்டுடன் "உயர்மட்ட கண்காணிப்புக் குழுவை" இந்தியா அமைக்கவுள்ளது?**

அ. மாலத்தீவு

ஆ. இலங்கை

இ. மியான்மர்

**ஈ. வங்கதேசம் ☑**

❖ இந்தியா வழங்கிய கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களை மறுஆய்வு செய்ய, இந்தியாவும் வங்கதேசமும் ஓர், "உயர்மட்ட கண்காணிப்புக்குழுவை" அமைக்க உத்தேசித்துள்ளன. மெய்நிகராக நடைபெற்ற, இருநாடுகளுக்கும் இடையிலான ஆறாவது கூட்டு ஆலோசனை ஆணையக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

❖ உயர்மட்ட கண்காணிப்புக் குழுவிற்கு வங்கதேசத்தின் பொருளாதார உறவுகள் பிரிவு செயலாளரும் வங்கதேசத்துக்கான இந்திய உயராணையரும் இணைந்து தலைமை தாங்குவார்கள்.

**9. 'CSIR – ஊரக வளர்ச்சிக்கான தொழினுட்பங்களை' அறிமுகப்படுத்தியுள்ள நடுவணமைச்சகம் எது?**

**அ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ. கல்வி அமைச்சகம்

இ. வேளாண்மை & உழவர்நல அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்



❖ மத்திய அறிவியல் & தொழினுட்ப அமைச்சர் ஹர்ஷ் வர்தன், ஊரக வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) தொழினுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். CSIR, உன்னத்

பாரத் அபியான், ஐஐடி தில்லி மற்றும் விஞ்ஞான பாரதி ஆகியவற்றின் கூட்டு முயற்சியின்கீழ் இந்தத் தொழினுட்பங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்தொழினுட்பங்களுள் மேம்பட்ட தேன்கூடு, ஈரப்பதமற்ற உலர்த்தி மற்றும் வேளாண் கழிவுகளை அடிப்படையாகக்கொண்ட மக்குந்தட்டுகள் ஆகியன அடங்கும்.

**10. 'ஸ்வச்சதா கே 6 சால், பெமிசால்' என்ற முழக்கம் கீழ்க்காணும் எந்தத்திட்டம் அதன் ஆறு ஆண்டுகளை நிறைவு செய்ததை நினைவுகூரும் வகையில் பயன்படுத்தப்பட்டது?**

**அ. தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் ☑**

ஆ. தூய்மை இந்தியா இயக்கம் – கிராமப்புறம்

இ. நமாமி கங்கை

ஈ. கந்தகி முக்த் பாரத்

❖ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறத் திட்டத்தின் (SBM–U) ஆறாமாண்டு நிறைவைக்கொண்டாடுகிறது. இதனை நினைவுகூரும் வகையில், 'ஸ்வச்சதா கே 6 சால், பெமிசால்' என்ற தலைப்பில் ஓர் இணையவழிக் கருத்தரங்கை அமைச்சகம் ஏற்பாடு செய்தது. இதுவரை 4,327 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறந்தவெளி மலங்கழித்தலற்ற நகர்ப்புறங்கள் (ODF) என அறிவிக்கப்பட்டுள்ளதாக அவ்வமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவில் உள்ள மரபுசாரா துறைகள் & நுண் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக $1.9 மில்லியன் டாலர்களை வழங்கவுள்ள நாடு எது?**

அ. ஜப்பான்

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. ஜெர்மனி

❖ மரபுசாரா துறை தொழிலாளர்கள் உட்பட இந்தியாவில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய மக்களுக்கு உதவுவதற்காக, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) பன்னாட்டு வளர்ச்சிக்கான அமெரிக்க முகமை $1.9 மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளது. இதன்மூலம், இந்தியாவில் சிறு மற்றும் குறு தொழில்கள் மேம்படும். ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**2.உலக நலவாழ்வு அமைப்பால், "நலமான முதுமை தசாப்தம்" என்று அறிவிக்கப்பட்டுள்ள தசாப்தம் எது?**

அ. 2018 – 2028

**ஆ. 2020 – 2030 ☑**

இ. 2021 – 2031

ஈ. 2022 – 2032

❖ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) 2020–2030'ஐ "நலமான முதுமை தசாப்தம்" என அறிவித்து உள்ளது. ஆண்டுதோறும் அக்.1 அன்று பன்னாட்டு முதியோர் நாள் அனுசரிக்கப்படுகிறது. முதியோரின் நலன் மற்றும் சிறப்புத்தேவைகளில் கவனஞ்செலுத்துவதற்காக ஐநா அவை இந்த நாளை அறிவித்தது. "Pandemics: Do They Change How We Address Age and Ageing?" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**3.இந்தியாவின் மிகப்பெரிய கைவினைப் பொருட்கள் மற்றும் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்கள் சந்தையின் பெயரென்ன?**

அ. Go Tribal

**ஆ. Tribes India ☑**

இ. Local to Global

ஈ. India Tribe

❖ மத்திய பழங்குடியின நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா, இந்தியாவின் மிகப்பெரிய கைவினைப் பொருட்கள் மற்றும் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்கள் சந்தையை, "பழங்குடியினர் இந்தியா மின்–சந்தை" என்ற பெயரில் தொடங்கியுள்ளார். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு இச்சந்தை தொடங்கப்பட்டது. TRIFED'இன் இம்முயற்சி, நாட்டின் அனைத்து பகுதிகளைச் சார்ந்த பழங்குடி நிறுவன –ங்களின் உற்பத்தி மற்றும் கைவினைப்பொருட்களைக் விற்பனை செய்யும்.

❖ ஜார்க்கண்டின் பாகூரைச் சேர்ந்த சந்தால் பழங்குடியினரால் சேகரிக்கப்பட்ட பாகூர் தேனையும் அமைச்சர் அப்போது தொடங்கிவைத்தார்.

**4.பதிப்பாளர்களுக்கு அவர்களின் உள்ளடக்கத்திற்காக பணஞ்செலுத்த உறுதிபூண்டுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. பேஸ்புக்

**ஆ. கூகுள் ☑**

இ. அமேசான்

ஈ. ஆப்பிள்

❖ உலகெங்குமிருந்து கூகுள் தளத்தில் செய்திகளை வெளியிடும் பதிப்பாளர்களுக்கு நிதி வழங்கப்படும் என அந்நிறுவன தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை அறிவித்துள்ளார். இதற்காக, 'கூகுள் நியூஸ் ஷோகேஸ்' என்றவொன்றை உருவாக்கியிருப்பதாகவும், முதலில் ஜெர்மனியில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் இந்தியா உள்ளிட்ட பலநாடுகளில் விரிவுப்படுத்தப்படும் என சுந்தர் பிச்சை குறிப்பிட்டுள்ளார்.

**5. 'Asteroid Mining Robot' என்று பெயரிலான உலகின் முதல் சுரங்கப்பணி மேற்கொள்ளும் எந்திரத்தை விண்வெளிக்கு அனுப்பவுள்ள நாடு எது?**

அ. இந்தியா

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ. சீனா ☑**

ஈ. இஸ்ரேல்



❖ உலகின் முதல் சுரங்கப் பணி மேற்கொள்ளும் ரோபோவை வரும் நவம்பர் மாதத்தில் விண்வெளிக்கு சீனா அனுப்பவுள்ளது. பெய்ஜிங்கில் உள்ள தனியார் நிறுவனமான ஆர்ஜின் ஸ்பேஸ் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த ரோபோ, "சிறுகல் சுரங்க ரோபோ' என்று அழைக்கப்படுகிறது. இந்த ரோபோ இடம்பெற்றுள்ள NEO–1 என்ற விண்கலத்துடன் சீனத்தின் லாங் மார்ச் ஏவுகலம் விண்ணுக்குச் செல்லவுள்ளது.

**6. "அம்பேத்கர் சமூக புத்தாக்கம் மற்றும் அடைவுத் திட்டத்தை" தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

**ஆ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

❖ மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது பட்டியலினத்தவர்களுக்கான கூட்டு மூலதன நிதியத்தின்கீழ், "அம்பேத்கர் சமூக புத்தாக்கம் மற்றும் அடைவுத் திட்டத்தை" தொடங்கியுள்ளது. உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் பட்டியலினத்தைச் (SC) சார்ந்த மாணாக்கரிடையே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு எண்ணத்தை ஊக்குவிக்கும்நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**7.புதிய பொது வழங்கல் முறை அங்காடிகளுள் 30 சதவீதத்தை பெண்களுக்கு வழங்க முடிவு செய்துள்ள மாநிலம் எது?**

அ. கேரளா

ஆ. உத்தர பிரதேசம்

**இ. இராஜஸ்தான் ☑**

ஈ. மேற்கு வங்கம்

❖ புதிய பொது வழங்கல் முறை அங்காடிகளுள் 30 சதவீதத்தை பெண்களுக்கு வழங்க இராஜஸ்தான் மாநில அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத்தின் மகளிர்க்கு அதிகாரமளிக்கும் விதமாக முதலமைச்சர் அசோக் கெலாட் இந்த முடிவை எடுத்துள்ளார். 'சஹ்யோக் எவம் உபர் யோஜனா'வுக்கு ₹11 கோடி கூடுதல் செலவினத்துக்கும் அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், மகளின் திருமணத் தேவைக்கு நிதி தேவைப்படும் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

**8.விரைவு ரோந்துக்கப்பலான "கனகலதா பருவா", எந்தப் பாதுகாப்புப் படையில் சேர்க்கப்பட்டுள்ளது?**

அ. இந்தியக் கடற்படை

ஆ. இந்திய இராணுவம்

**இ. இந்தியக்கடலோரக் காவல்படை ☑**

ஈ. இந்திய வான்படை

❖ விரைவு ரோந்துக்கப்பலான "கனகலதா பருவா", இந்தியக்கடலோரக் காவல்படையில் சேர்க்கப்பட்டது. இந்தக் கப்பலை கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனத்தால் கட்டியுள்ளது. விரைவு ரோந்துக்கப்பல் வரிசையில் இந்த நிறுவனத்தால் கட்டப்பட்ட ஐந்தாவது மற்றும் கடைசிக் கப்பலாக இது உள்ளது. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்ட, அசாம் மாநிலத்தைச் சார்ந்த பதின்மவயது விடுதலைப் போராளியின் பெயர் இக்கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

**9.இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (ISRO) எவ்வாண்டில், வீனஸ் திட்டத்தை தொடங்கவுள்ளது?**

அ. 2022

ஆ. 2023

இ. 2024

**ஈ. 2025 ☑**



❖ இந்திய விண்வெளி ஆய்வு மையம் தனது வெள்ளிக் கோளுக்கு பயணம் மேற்கொள்ளும் 'வீனஸ்' திட்டத்தை, எதிர்வரும் 2025ஆம் ஆண்டளவில் தொடங்க முன்மொழிந்துள்ளது. பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான CNES, இந்தப் பயணத்தில் ISRO உடன் கைகோர்க்கவுள்ளது. தற்போது, இருநாடுகளும் 2022'க்குள் மூன்று இந்தியர்களை விண்வெளிக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்ட ISRO'இன் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமான 'ககன்யான்' குறித்து ஈடுபட்டு வருகின்றன.

**10.எந்த அமைப்புக்கான புதிய இலச்சினையை மத்திய விளையாட்டு அமைச்சர் வெளியிட்டுள்ளார்?**

அ. அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு

ஆ. இந்திய தடகள கூட்டமைப்பு

**இ. இந்திய விளையாட்டு ஆணையம் ☑**

ஈ. இந்திய ஒலிம்பிக் சங்கம்

❖ இந்திய விளையாட்டு ஆணையத்தின் (SAI) புதிய இலச்சினையை மத்திய விளையாட்டு அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார். இப்புதிய இலச்சினை, விளையாட்டு ஆளுமைகளின் திறமைகளை இனங்கண்டு அவர்களை திறமையாளர்களாக உருவாக்கும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் (SAI) பயணத்தைக் குறிக்கும் வகையில் உள்ளது. கடந்த 1982'இல் இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) நிறுவப்பட்டது. இது, இந்தியாவில் விளையாட்டுக்கான மையமாக இருந்துவருகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. 'ஆபரேஷன் மை சகேலி'யைத் தொடங்கிய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. இந்திய இரயில்வே ☑**

இ. ISRO

ஈ. இந்திய இராணுவம்

❖ தென்கிழக்கு இரயில்வே அமைப்பால், 'ஆபரேஷன் மை சகேலி' என்றவொன்று தொடங்கப்பட்டுள்ளது. ஏறுமிடத்திலிருந்து இறங்குமிடம் வரை பெண் பயணிகளின் பாதுகாப்பை அதிகரிப்பதை இத்திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு சோதனைத் திட்டமாக, ஹௌரா – யெஷ்வந்த்பூர் துரந்தோ சிறப்பு இரயில், ஹௌரா – அகமதாபாத் சிறப்பு இரயில் மற்றும் ஹௌரா – மும்பை சிறப்பு இரயிலில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**2.2020 அக்டோபர்.1 அன்று, எந்த ஆப்பிரிக்க நாடு தனது 60ஆவது விடுதலை நாளைக் கொண்டாடியது?**

அ. தென்னாப்பிரிக்கா

**ஆ. நைஜீரியா ☑**

இ. எகிப்து

ஈ. ஜிம்பாப்வே

❖ நைஜீரியா தனது 60ஆவது விடுதலை நாளை 2020 அக்.1 அன்று கொண்டாடியது. 1960 அக்.1 அன்று, நைஜீரியா, ஏகாதிபத்திய பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றது. அப்போது, 2ஆம் எலிசபத் பேரரசியின் பிரதிநிதி, நைஜீரியாவின் அரசியலமைப்பை அந்நாட்டின் புதிய பிரதமரான அபுபக்கர் தபவா பலேவாவி –டம் ஒப்படைத்தார். அதன்பின் மூன்றாண்டுகளுக்குப்பின், நைஜீரியா ஒரு குடியரசு நாடாக மாறியது.

**3. 10 லட்சம் கையெறி குண்டுகளை வாங்குவதற்காக, பாதுகாப்பு அமைச்சகம், எந்த நிறுவனத்துடனான ₹400 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

**அ. பொருளாதார வெடிபொருட்கள் நிறுவனம் ☑**

ஆ. இராணுவ தளவாட தொழிற்சாலை வாரியம்

இ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

ஈ. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிட்

❖ பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் பிரிவு, பத்து இலட்சம் பல்முனை கையெறி குண்டுகளுக்காக நாக்பூரைச் சார்ந்த எக்கனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் நிறுவனத்துடனான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (DRDO) / டெர்மினல் பாலிஸ்டிக் ஆராய்ச்சி ஆய்வகத்தால் இந்தக் கையெறி குண்டுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. முன்னர், இதேபோன்ற தயாரிப்புகளை, ராணுவ தளவாட தொழிற்சாலை வாரியமானது இறக்குமதியோ அல்லது தயாரிக்கவோ செய்துகொண்டிருந்தன.

**4.காந்தி ஜெயந்தியை நினைவுகூரும் வகையில், திரைப்படப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த இணையவழி திரைப்படத் திருவிழாவின் பெயர் என்ன?**

அ. காந்தி பிலிமோற்சவம் ☑

ஆ. தேசத்தந்தை உற்சவம்

இ. மகாத்மா விழா

ஈ. மகாத்மா பற்றி அறிக



❖ மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த ஆண்டு விழாவின் இரண்மாண்டு கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்வின் ஒருபகுதியாக திரைப்படப்பிரிவு, "காந்தி பிலிமோற்சவம்" என்றவொரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. ஒருவாரகாலம் நீண்ட இவ்விணையவழி திரைப்பட விழா, திரைப்படப்பிரிவின் வலைத் தளத்திலும் அதன் யூடியூப் அலைவரிசையிலும் ஒளிபரப்பப்பட்டது. மகாத்மா காந்தியின் பிறந்தநாள் அக்.2 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாளும் அதேநாளில் கொண்டாடப்படுகிறது.

**5.மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த எந்த முதன்மை போர் பீரங்கியிலிருந்து, DRDO, பீரங்கி எதிர்ப்பு கட்டளை ஏவுகணையை (anti-tank guided missile) பரிசோதனை செய்தது?**

அ. அர்ஜுன் ☑

ஆ. விராத்

இ. கட்டபொம்மன்

ஈ. கருட்

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது (DRDO) உள்நாட்டில் உருவாக்கப்பட்ட லேசர் பொருத்தப்பட்ட பீரங்கி எதிர்ப்பு கட்டளை ஏவுகணையை (ATGM) வெற்றிகரமாக சோதனை செய்தது. இந்த ஏவுகணை, மகாராட்டிர மாநிலத்தின் அகமதுநகரிலிருந்து மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த, 'அர்ஜுன்' என்ற முதன்மை போர் பீரங்கியிலிருந்து பரிசோதனை செய்யப்பட்டது. இந்த ATGM, பல் வேறு தளங்களிலிருந்து ஏவுவதற்கான திறனுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

**6. 2020 அக்டோபரில் நடத்தப்பட்ட, இந்தியா மற்றும் அயல்நாட்டில் வாழும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்ற உலகளாவிய மெய்நிகர் உச்சிமாநாட்டின் பெயர் என்ன?**

அ. வைபவ் ☑

ஆ. அஸ்பையர்

இ. அக்யூமென்

ஈ. ஸ்பார்க்

❖ அக்.2 அன்று பிரதமர் நரேந்திர மோடி, Vaishwik Bharatiya Vaigyanik (VAIBHAV) உச்சிமாநாட்டைத் தொடங்கிவைத்தார். இவ்வுச்சிமாநாடு, இந்தியா மற்றும் அயல்நாட்டில் வாழும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கான பன்னாட்டு மெய்நிகர் மாநாடாகும். இது, அக்டோபர் 2 முதல் 31 வரை

நடத்தப்படவுள்ளது. இந்த உச்சிமாநாடு அறிவியல் மற்றும் தொழினுட்பம் தொடர்பான விவாதங்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கித்தருகிறது.

**7.கம்போடியாவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய அதிகாரி யார்?**

**அ. தேவயானி உத்தம் கோப்ரகடே ☑**

ஆ. தரஞ்சித் சிங் சந்து

இ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்களா

ஈ. நவ்தேஜ் சர்னா

❖ கம்போடியாவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக இந்திய வெளியுறவு சேவை அதிகாரி தேவயானி உத்தம் கோப்ரகடே நியமிக்கப்பட்டுள்ளார். இதை வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. 1999'ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு சேவை அதிகாரியான செல்வி. தேவயானி உத்தம் கோப்ரகடே, தற்போது வெளியுறவு அமைச்சகத்தின் இணைச்செயலாளராக பணியாற்றி வருகிறார். அவர் பெர்லின், இசுலா –மாபாத், ரோம் மற்றும் நியூயார்க்கில் உள்ள இந்தியத்தூதரகங்களில் பணியாற்றியுள்ளார்.

**8. COVID–19 சிகிச்சைக்காக, மிகவும் தூய்மைப்படுத்தப்பட்ட 'ஆன்டிசீரா'வை உருவாக்கியுள்ள அமைப்பு எது?**

**அ. ICMR ☑**

ஆ. AIIMS

இ. JIPMER

ஈ. CSIR

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது (ICMR) COVID–19 தடுப்பு மற்றும் சிகிச்சைக்காக மிகவும் தூய்மைப்படுத்தப்பட்ட 'ஆன்டிசீரா'வை உருவாக்கியுள்ளது. ICMR மற்றும் ஹைதராபாத்தைச் சார்ந்த பயோலாஜிக்கல் E. லிட் ஆகியவை COVID–19 சிகிச்சை மற்றும் நோய்த்தடுப்புக்காக விலங்குகளிடம் இருந்து பெறப்பட்ட மிகவும் தூய்மைப்படுத்தப்பட்ட எதிர்–ஊனீரை உருவாக்கியுள்ளன. இது, முன்னர், பல்வேறு வைரஸ் & பாக்டீரியா தொற்றுநோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மருத்துவ அறிவியலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**9.சுவச் சுந்தர் சமுதாயிக் சௌச்சாலயா பரப்புரையில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. உத்தர பிரதேசம்

❖ காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, சுவச் பாரத் திவாஸ் – 2020 கொண்டாடப்பட்டது; இதில், சுவச் பாரத் விருதுகள் வழங்கும் நிகழ்வும் அடங்கும். 2019 நவ.1 முதல் 2020 ஏப்ரல்.30 வரை ஏற்பாடு செய்யப்பட்ட

சுவச் சுந்தர் சமுதாயிக் சௌச்சாலயா பரப்புரையில், குஜராத் மாநிலத்திற்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. தமிழ்நாட்டின் திருநெல்வேலிக்கு, 'சிறந்த மாவட்ட விருது' கிடைத்துள்ளது.

## 10. "Time Use Survey in India" என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ. பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

**ஆ. தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

இ. பிரதம்

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம்

❖ தேசிய புள்ளியியல் அலுவலகமானது (NSO) 2019 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில், "இந்தியாவில் நேரப்பயன்பாட்டு ஆய்வை" நடத்தியது. இந்த ஆய்வின் முடிவு, சமீபத்தில், ஓர் அறிக்கை வடிவில் வெளியிடப்பட்டது. ஊதியம் பெற்ற செயல்பாடுகள், பராமரிப்பு செயல்பாடுகள், ஊதியம் பெறாத செயல்பாடுகள் போன்றவற்றுக்காக செலவிடப்பட்ட நேரத்தை இந்த ஆய்வு அளவிடுகிறது. நகர்ப்புற மற்றும் ஊரகங்களில் உள்ள 1,38,799 வீடுகளை உள்ளடக்கிய இந்த ஆய்வை NSO நடத்தியது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த அமைப்பின்கீழ், 'E Way Bill' செயல்படுத்தப்படுகிறது?**

அ. மத்திய நேரடி வரிகள் வாரியம்

**ஆ. மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கங்கள் வாரியம் ☑**

இ. அமலாக்க இயக்குநரகம்

ஈ. நிதி ஆணையம்

❖ 'E Way Bill' முறையை மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியம் (CBIC) செயல்படுத்துகிறது. GST'இல் பதிவு செய்த ஒருவர் ₹50,000'க்கு மேல் மதிப்புள்ள பொருட்களை 'E Way Bill' இல்லாமல் கொண்டு செல்லமுடியாது. 2020 செப்டம்பர் மாதத்தில் 5.74 கோடிக்கும் அதிகமான 'E Way Bill'கள் உருவாக்கப்பட்டுள்ளதாக நிதிச்செயலாளர் Dr. அஜய் பூஷன் பாண்டே அண்மையில் தெரிவித்தார். இது, நாட்டில் வணிக நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றுள்ளதன் அடையாளமாகக் கருதப்படுகிறது.

**2.எவ்வமைப்பால், தரவு ஆளுகை தரக்குறியீடு (Data Governance Quality Index) ஆய்வு நடத்தப்படுகிறது?**

அ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

ஆ. உலக பொருளாதார மன்றம்

இ. பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு

**ஈ. NITI ஆயோக் ☑**

❖ தரவு ஆளுகைத் தரக் குறியீடு ஆய்வினை நாட்டின் மதியுரைகமான NITI ஆயோக், அதன் வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்தால் நடத்துகிறது. மத்திய துறைசார் திட்டங்கள் மற்றும் மத்திய நிதியுதவி திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு அமைச்சகங்கள் அல்லது துறைகளின் செயல்திறனை மதிப்பீடு செய்வதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவு ஆளுகைத் தரக் குறியீட்டு ஆய்வின்கீழ், 65 துறைகளுள் உரங்கள் துறை இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

**3.எந்த வங்கியை நடத்துவதற்கு இயக்குநர்கள் குழுமத்தை நியமிக்க, இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. YES வங்கி

**ஆ. தனலக்ஷ்மி வங்கி ☑**

இ. PMC வங்கி

ஈ. லக்ஷ்மி விலாஸ் வங்கி

❖ தனலக்ஷ்மி வங்கியை நடத்துவதற்கு இயக்குநர்கள் குழுமத்தை நியமிக்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஒப்புதல் அளித்துள்ளது. வங்கியை நடத்துவதற்கு ஜி சுப்பிரமணிய ஐயர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட இடைக்கால இயக்குநர்கள் குழுமத்திற்கு ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்ததாக கூறப்படுகிறது. முன்னதாக, பங்குதாரர்கள் அனைவரும், வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக சுனில் குர்பாக்சானியைத் தெரிவு செய்வதற்காக வாக்களித்தனர்.

**4.ஆண்டுதோறும் பன்னாட்டு அகிம்சை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 01

**ஆ. அக்டோபர் 02 ☑**

இ. அக்டோபர் 03

ஈ. அக்டோபர் 04

❖ மகாத்மா காந்தியின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் அக்டோபர்.2ஆம் தேதியை ஐநா அவை ஆண்டுதோறும் பன்னாட்டு அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறது. 2007 ஜூன்.15 அன்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதன்மூலம் ஐநா பொது அவை இந்நாளை அறிவித்தது. கல்வி & விழிப்புணர்வு மூலம் அகிம்சையின் சாராம்சத்தை பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும். மகாத்மா காந்தி தனது அகிம்சை இயக்கமான, 'சத்யாகிரகத்தின்' மூலம் உலகம் முழுவதும் அறியப்பட்டவராவார்.

**5.செய்திகளில் இடம்பெற்ற மாதாபி பூரி புச், எந்த அமைப்பின் முதலாவது முழுநேர பெண் உறுப்பினராக உள்ளார்?**

அ. RBI

**ஆ. SEBI ☑**

இ. IRDAI

ஈ. PFRDA

❖ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) முதல் முழுநேர பெண் உறுப்பினர் மாதாபி பூரி புச் ஆவார். தனியார் துறையிலிருந்து SEBI வாரியத்திற்கு உறுப்பினராக நியமிக்கப்பட்ட முதல் நபரும் இவராவார். 2020 அக்டோபர் 4 முதல் மேலும் ஓராண்டுக்கு அவரது பதவிக்காலத்தை நீட்டித்து அமைச்சரவையின் நியமனக்குழு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

**6.ஒடிசா சோதனை தளத்திலிருந்து பரிசோதனை செய்யப்பட்ட, அணுவாயுதங்களை தாங்கிச் செல்லும் திறன்கொண்ட மீஉயர் ஏவுகணையின் பெயர் என்ன?**

அ. வீர்

**ஆ. சௌரியா ☑**

இ. அக்னி VII

ஈ. தேஜஸ்

❖ 'சௌரியா' என்ற பெயரிலான உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அணுவாயுதங்களை தாங்கிச் செல்லும் திறன்கொண்ட மீஉயர் ஏவுகணையை இந்தியா தனது ஒடிசா சோதனை தளத்திலிருந்து சோதனை செய்தது. இந்த ஏவுகணை 1000 கிமீ தொலைவுக்கு அப்பாலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் பெற்றது. 'சௌரியா', இந்தியாவின் K–15 ஏவுகணையின் தரை வகையினதாகும். 200 கிலோ முதல் 1000 கிலோ வரையிலான எடையைத் தாங்கிச் செல்லும் திறன்கொண்டதாகும் இது.

**7.எந்தத் தலைவரின் பிறந்தநாளின்போது, 'உலக பண்ணை விலங்குகள் நாள்' கொண்டாடப்படுகிறது?**

**அ. 'மகாத்மா' காந்தி ☑**

ஆ. 'பெருந்தலைவர்' காமராஜர்

இ. ஆபிரகாம் லிங்கன்

ஈ. வ. உ. சிதம்பரனார்

❖ மகாத்மா காந்தியின் பிறந்தநாளான அக்.2 அன்று 'உலக பண்ணை விலங்குகள் நாள்' கொண்டாடப்ப –டுகிறது. 'உலக விலங்குப்பாதுகாப்பு & விலங்குகளுக்கான ஆசியக்கூட்டணி' உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு அமைப்புகளால் கடந்த 1983ஆம் ஆண்டு முதல் இந்நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில், 'Pledge to #FastAgainstSlaughter' என்ற பரப்புரை நடைபெற்றது.

**8.எந்நகரின் வனப்பரப்பை அதிகரிப்பதற்காக இந்தியக்கடற்படை 'வான்வழி விதைப்பு' செயல்முறையை மேற்கொண்டது?**

அ. சென்னை




ஆ. மும்பை

**இ. விசாகப்பட்டினம் ☑**

ஈ. திருவனந்தபுரம்

❖ இந்தியக்கடற்படையானது பெருநகர விசாகப்பட்டின மாநகராட்சியுடனிணைந்து விசாகப்பட்டினத்தில் 'வான்வழி விதைப்பை' மேற்கொண்டது. இம்முயற்சி, விசாகப்பட்டினம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் வனப்பரப்பை அதிகரிக்கும் நோக்கம் கொண்டது. கடற்படை உலங்கூர்திகளில் இருந்து ஐந்து இடங்களில் கிட்டத்தட்ட 6.25 டன் விதைப்பந்துகள் வீசப்பட்டுள்ளன.

**9.பெண்கள் குறித்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நான்காவது உலக மாநாட்டை நடத்திய நாடு எது?**

அ. இந்தியா




**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்கா நாடுகள்

ஈ. ஜப்பான்

❖ பெண்கள் தொடர்பான நான்காவது உலக மாநாட்டை ஐநா அவை கடந்த 1995 செப்டம்பரில் சீனாவின் பெய்ஜிங்கில் நடத்தியது. இம்மாநாட்டின் 25ஆவது ஆண்டுவிழா அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் மத்திய பெண்கள் மற்றும் சிறார்கள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி பங்கேற்றார். தேசிய ஊட்டச்சத்து இயக்கம் உட்பட இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்புகள் குறித்து அவர் அப்போது எடுத்துரைத்தார்.

**10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'P–8A' என்னும் கடல்சார் ரோந்து வானூர்தி சார்ந்த நாடு எது?**

அ. சீனா

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜப்பான்

ஈ. இஸ்ரேல்

❖ **ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) கடற்படையைச் சார்ந்த 'P–8A' என்ற கடல்சார் ரோந்து வானூர்தி, அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் போர்ட் பிளேரில் தரையிறங்கியது. இருதரப்பு தளவாடங்கள் ஆதரவு ஒப்பந்தத்தின்கீழ் எரிபொருள் நிரப்புவதற்காக USA P–8A வானூர்தி போர்ட் பிளேரில் தரையிறங்கியது இதுவே முதன்முறையாகும். இந்த ஒப்பந்தம், 'Logistics Exchange Memorandum of Agreement (LEMOA)' என்றும் அழைக்கப்படுகிறது.**

---

# நடப்பு நிகழ்வுகள்

## 1. 'இந்தியா P V எட்ஜ் 2020' என்ற பன்னாட்டு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்த நடுவணமைச்சகம் எது?

அ. எரிசக்தி அமைச்சகம்

**ஆ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

இ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. தகவல் தொடர்பு அமைச்சகம்

❖ இந்தியாவில் அதிநவீன சூரிய மின்னாற்றல் தகடுகள் உற்பத்தியை ஊக்குவிக்க, 'இந்தியா P V எட்ஜ் 2020' என்ற தலைப்பில் உலகளாவிய இணைய கருத்தரங்குக்கு NITI ஆயோக், புதிய மற்றும் புதுப்பிக்–கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மற்றும் இன்வெஸ்ட் இந்தியா ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்தன.

❖ 'தொகுதிகள் மற்றும் உற்பத்தி உபகரணங்கள்' மற்றும் 'விநியோக சங்கிலி' ஆகியவை பற்றிய முழுமையான அமர்வு மற்றும் அடுத்தடுத்த அமர்வுகள் இக்கருத்தரங்கில் நடைபெற்றன. இந்தியாவின் பிரபல நிறுவனங்களின், 60 தலைமைச் செயல் அதிகாரிகள், இந்தக்கருத்தரங்கில் காணொலிக்காட்சி வழியில் பங்கேற்றனர்.

## 2. 'CORPAT' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான இராணுவப் பயிற்சியாகும்?

அ. ஜப்பான்

ஆ. இலங்கை

**இ. வங்கதேசம் ☑**

ஈ. பிரான்ஸ்



❖ பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அண்மைய செய்திக்குறிப்பில், 'பாங்கோசாகர்' மற்றும் Coordinated Patrol (CORPAT) ஆகிய இரண்டு பயிற்சிகள் அக்டோபர் முதல் வாரத்தில் இந்தியாவிற்கும் வங்கதேசத்துக்கும் இடையில் நடைபெறும். சர்வதேச கடலெல்லைப்பகுதியில் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை தடுக்கும் ரோந்துப்பணியில் இருநாட்டு கடற்படைகளும் இணைந்து செயல்பட இக் கூட்டு ரோந்துப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. பிரதமரின் SAGAR (Security and Growth for All in the Region) முன்னெடுப்பின் ஒருபகுதியாக இந்தப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

## 3.இந்திய பொது நிர்வாக நிறுவனத்தின் தலைவர் யார்?

அ. பிரதமர்

ஆ. குடியரசுத்தலைவர்

**இ. குடியரசுத்துணைத்தலைவர் ☑**

ஈ. பணியாளர் நலத்துறை அமைச்சர்

❖ இந்திய பொது நிர்வாக நிறுவனம் (IIPA) என்பது மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் ஓர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பாகும். குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா, IIPA'இன் பதவிவழித் தலைவராக உள்ளார்.மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன்

முண்டா தலைமையில், பழங்குடியினர் நலத்துறை அமைச்சகமும் இந்திய பொது நிர்வாக நிறுவனமும் இணைந்து அண்மையில் "தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி மாநாட்டை" ஏற்பாடுசெய்தன. இரு நாட்கள் நடைபெற்ற இம்மாநாடு மெய்நிகர் முறையில் நடந்தேறியது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற V S காயதோன்டி சார்ந்தது எது?**

அ. விளையாட்டு

**ஆ. கண்ணுள் வினைஞர் ☑**

இ. வழக்குரைஞர்

ஈ. அரசியல்வாதி

❖ மும்பை ஏலக்கூடமான புந்தோலில் நடைபெற்ற ஏலத்தில், ₹32 கோடிக்கு விலைபோனதை அடுத்து, VS காயதோன்டியின் அவ்வோவியம், ஓர் இந்திய கலைஞரின் மிகவும் விலையுயர்ந்த கலைப்படைப்பு ஆக மாறியுள்ளது. கடந்த 1974ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அப்பெயரிடப்படாத எண்ணெய் வண்ண ஓவியத்தை பன்னாட்டு வாங்குபவர் ஒருவர் வாங்கியுள்ளார். இதன்மூலம் VS காயதோன்டியின் மற்றொரு கலைப்படைப்பு, 2015ஆம் ஆண்டில் நிகழ்த்திய ₹29.3 கோடி சாதனையை இது முறியடித்தது.

**5.நடப்பாண்டில் (2020) கடற்படை பதவியேற்பு விழாவை நடத்திய நகரம் எது?**

அ. திருவனந்தபுரம்

**ஆ. விசாகப்பட்டிணம் ☑**

இ. கொச்சின்

ஈ. சென்னை

❖ நடப்பாண்டு (2020) கடற்படை பதவியேற்பு விழா, விசாகப்பட்டிணத்தில் நடத்தப்பட்டுள்ளது. விழாவின் போது, நடப்பாண்டு குடியரசு நாளன்று அறிவிக்கப்பட்ட வீரதீரச் செயல் புரிந்தோருக்கான விருதுகள் வழங்கப்பட்டன. கடற்படைத் துணைத்தலைவர் அதுல் குமார் ஜெயின், கடந்த ஆண்டு (2019) சிறப்பாக செயல்பட்ட புகழ்பெற்ற கடற்படை அலகுகளுக்கு, சிறப்புப் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்.

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'PARAM சித்தி – AI' என்றால் என்ன?**

**அ. மீத்திறன் கணினி ☑**

ஆ. எந்திர மனிதன்

இ. ஆளில்லா வானூர்தி

ஈ. ஏவுகணை

❖ நவீன கணித்திறன் வளர்ச்சி மையமானது (C–DAC) இந்தியாவின் மிகப்பெரிய HPC–AI மீத்திறன் கணினியான, 'பரம் சித்தி – AI'ஐ அமைக்கவுள்ளது. இந்த முயற்சிக்கு CDAC அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர் அபிஷேக் தாஸ் தலைமைதாங்கினார். இதற்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் ஒப்புதல் அளித்துள்ளார்.

❖ இந்த மீத்திறன் கணினியில் (super–computer), 210 AI பெட்டாபிளாப்கள் இருக்கும்; இது NVIDIA DGX சூப்பர்POD கட்டமைப்பினை அடிப்படையாகக்கொண்டு இருக்கும்.

**7.ஓர் அண்மைய ஆய்வின்படி, எந்தக் காடு, வனத்திலிருந்து சவானா புல்வெளியாக மாறும் அபாயத்தில் உள்ளது என்று கூறப்படுகிறது?**

அ. சோலைக்காடுகள், மேற்குத்தொடர்ச்சி மலை

**ஆ. அமேசான் மழைக்காடுகள் ☑**

இ. காங்கோ மழைக்காடுகள்

ஈ. சதுப்புநிலக்காடுகள், பிச்சாவரம்

❖ நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் இதழில் வெளியிடப்பட்ட ஓர் அண்மைய ஆய்வில், வெப்பமண்டல மழைக் காடுகளின் நெகிழ்திறன் 2 கூடுதல் தீவிர சூழ்நிலைகளின்கீழ் ஆராயப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி, அமேசானில் மழைப்பொழிவின் அளவு மிகவும் குறைந்துள்ளது; இதன் காரணமாக நாற்பது சதவீதம் வரையிலான வனப்பரப்புகள் சவானா புல்வெளிப்பரப்பாக மாறும் அபாயத்தில் உள்ளன. புதைப்படிவ எரிபொருட்களை எரிப்பதால் ஏற்படும் தாக்கத்தையும் இந்த ஆய்வு உருவகப்படுத்தியுள்ளது.

**8.தனது வணிக மென்பொருள் தொகுப்புக்கு 'Workspace' என மறுபெயரிட்டுள்ள தொழினுட்ப நிறுவனம் எது?**

அ. மைக்ரோசாப்ட்

**ஆ. கூகுள் ☑**

இ. IBM

ஈ. சோஹோ

❖ கூகிள் தனது வணிக கருவிகளின் தொகுப்புக்கு, 'Google Workspace' என மறுபெயரிட்டுள்ளது. மின்–அஞ்சல் மற்றும் ஆவணத்திருத்தம் உள்ளிட்ட இந்தத்தொகுப்பு முன்னர் 'G Suite brand' என்ற பெயரில் அறியப்பட்டது. 2016ஆம் ஆண்டில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. சக ஊழியர்களுடன் காணொளிவழி அரட்டையை ஒருங்கிணைப்பது உள்ளிட்ட சில புதிய அம்சங்களையும் கூகிள் அறிமுகம் செய்துள்ளது.

**9.சூரிய ஆற்றல் துறையில் புத்தாக்கம் குறித்த டிஜிட்டல் மாநாட்டை, இந்தியா, எந்நாட்டோடு இணைந்து நடத்தவுள்ளது?**

அ. பிரான்ஸ்

ஆ. ஜெர்மனி

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. ஐக்கியப் பேரரசு

❖ தொழில்நுட்ப ஒத்துழைப்பில் சிறப்பு கவனஞ்செலுத்தி COVID–19 வைரசுக்கு எதிரான போராட்டத்தில் இருதரப்பு ஒத்துழைப்பை முன்னெடுக்க, இந்தியாவும் இஸ்ரேலும் ஒப்புக்கொண்டுள்ளன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி & இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோருக்கு இடையிலான

தொலைபேசி உரையாடலின்போது, சூரிய ஆற்றல் துறையில் புத்தாக்கம் குறித்த டிஜிட்டல் மாநாட்டை நடத்த இரு தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

**10. 'டிஜிட்டல் சேவா சேது திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. உத்தரகண்ட்

❖ குஜராத் மாநில அரசானது அண்மையில் மாநிலத்தின் கிராமப்புறங்களுக்காக, 'டிஜிட்டல் சேவா சேது திட்டத்தை' அறிமுகப்படுத்தியது. இந்தத்திட்டத்தின்கீழ், குடிமக்களுக்கு பஞ்சாயத்து மட்டத்தில் பல்வேறு பொதுநலச்சேவைகளுக்கான இணைய அணுகல் கிடைக்கப்பெறும்.

❖ கிராமப் பஞ்சாயத்துகளை கண்ணாடியிழை வலையமைப்பின்மூலம் இணைப்பதை நோக்கமாகக் கொண்ட, 'பாரத் நெட் திட்டத்தின்'கீழ் இந்த, 'டிஜிட்டல் சேவா சேது' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ மத்திய அரசின் இ–சஞ்சீவினி திட்டத்தில் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதில் தேசிய அளவில் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டம் இரண்டாமிடத்தில் உள்ளது. இந்தச்சேவையை அதிகம் பயன்படுத்திய மாநிலங்களுள் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. பொதுமக்கள் அலைபேசிமூலம் மருத்துவர்களைத் தொடர்புகொண்டு நோய்களுக்கான மருந்து, மாத்திரைகள் பரிந்துரைச்சீட்டு பெறும் வகையில் இ–சஞ்சீவினி என்ற திட்டத்தை மத்திய அரசு கடந்த ஏப்ரல்.13 அன்று அறிமுகப்படுத்தியது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய தூய்மை கங்கை திட்டமானது இந்திய வனவுயிரி நிறுவனத்துடன் இணைந்து எந்த வனவுயிரி தொடர்பான திட்டத்தைத் தொடங்கியுள்ளது?**

அ. வங்கப்புலி

**ஆ. ஓங்கில் ☑**

இ. கடலாமை

ஈ. கடற்குதிரை

❖ தேசிய தூய்மை கங்கை திட்டமானது இந்திய வனவுயிரி நிறுவனம் & வனத்துறை ஆகியவற்றுடன் இணைந்து 'எனது கங்கை எனது ஓங்கில்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. 2020 அக்.5 அன்று அனுசரிக்கப்பட்ட, கங்கையாற்றில் வாழும் ஓங்கில்கள் நாளை முன்னிட்டு இது தொடங்கப்பட்டது. கங்கையாற்றின் குறுக்கே பல்வேறு இடங்களில் ஓங்கில்கள் சார்ந்த சூழல் சுற்றுலா திட்டமும் தொடங் –கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், கங்கை ஓங்கில்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு விழிப்புணர்வு பரப்புரைகள் நடத்தப்படும்.

**2.புதிய வேளாண் தொழினுட்பத்தை விளம்பரப்படுத்துவதற்காக, எந்நிறுவனத்துடன் இந்திய உழவர்கள் உர கூட்டுறவு நிறுவனம் (IFFCO) கூட்டிணைந்துள்ளது?**

**அ. பிரஸார் பாரதி ☑**

ஆ. பத்திரிகை தகவல் அலுவலகம்

இ. இந்திய பத்திரிகை அறக்கட்டளை

ஈ. ANI செய்தி முகமை

❖ புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் & புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும், அவை குறித்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவும், இந்திய உழவர்கள் உர கூட்டுறவு நிறுவனம் (IFFCO) மற்றும் பிரஸார் பாரதி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி, வேளாண்துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை பற்றிய நிகழ்ச்சிகள், உழவர்களின் நலனுக்காக எளிய மொழி நடையில் 30 நிமிட தொடராக தூர்தர்ஷன் கிஸான் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பாகும்.

**3.எந்தப் பொதுத்துறை வங்கியின் தலைவராக தினேஷ்குமார் காரா நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ. பாரத வங்கி ☑**

ஆ. பஞ்சாப் தேசிய வங்கி

இ. யூனியன் பாங்க் ஆப் இந்தியா

ஈ. கனரா வங்கி

❖ தினேஷ் குமார் காராவை பாரத வங்கியின் (SBI) தலைவராக நடுவணரசு நியமித்துள்ளது. 2020 அக்.7 முதல் மூன்றாண்டு காலத்திற்கு அவர் SBI வங்கியின் தலைவராக பொறுப்பு வகிப்பார் என்று மத்திய நிதி அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

❖ தற்போது பாரத வங்கியின் தலைவராக உள்ள இரஜ்னிஷ் குமாரின் மூன்றாண்டுகால பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து தினேஷ்குமார் காரா புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2016 ஆகஸ்ட் முதல் SBI'இன் நிர்வாக இயக்குநராக தினேஷ்குமார் காரா பணியாற்றிவந்தார்.

**4.சென்னையில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்ட, இந்தியக் கடலோரக் காவல்படையின் ஏழாவது ரோந்துக் கப்பலின் பெயரென்ன?**

**அ. விக்ரஹா ☑**

ஆ. விராத்

இ. வராஹா

ஈ. வீர்

❖ சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள L&T கப்பல்கட்டுந்தளத்தால் கட்டப்பட்ட 'விக்ரகா' எனப்பெயரிடப்பட்ட கடலோரக் காவல்படைக்கான புதிய ரோந்துக்கப்பலின் வெள்ளோட்டம் முறையாக தொடங்கிவைக்கப்பட்டது.

❖ கடந்த 2015'ஆம் ஆண்டு ஏழு ரோந்துக்கப்பல்கள் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தை L&T நிறுவனத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியது. இதில் 'விக்ரம்', 'வீர்', 'விஜயா', 'வராஹா', 'விராத்', 'வஜ்ரா' ஆகிய ஆறு ரோந்துக்கப்பல்கள் ஏற்கனவே கடலோரக் காவல்படையிடம் ஒப்படைக்கப்பட்டு பணியில் ஈடுபடு –த்தப்பட்டு வருகின்றன. இவ்வரிசையில், 'விக்ரஹா' 7ஆவதும் கடைசியுமாகும். ரோந்துக்கப்பல்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தை ஒரு தனியார் துறை கப்பல்கட்டுந்தளம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

**5.இந்தியாவில், எந்த மாதத்தில், 'வனவுயிரி வாரம்' கொண்டாடப்படுகிறது?**

அ. செப்டம்பர்

**ஆ. அக்டோபர் ☑**

இ. நவம்பர்

ஈ. டிசம்பர்

❖ வனவுயிரிகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் அக்.1 முதல் 8 வரை இந்தியாவில், 'வனவுயிரி வாரம்' கொண்டாடப்படுகிறது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள்மூலம் வனவுயிரிகளின் வாழ்வை பாதுகாப்பதற்குமாக, 1952ஆம் ஆண்டில் வனவுயுரி வாரம் கருத்துருவாக்கம் செய்யப்பட்டது. நடப்பாண்டு, இந்திய வனவுயிரி நிறுவனம், இதுதொடர்பாக இணையவழிக் கருத்தரங்கத் தொடரை ஏற்பாடு செய்து வருகிறது.

**6.வாங்குபவர்–விற்பவர் வலையமைப்பை மேம்படுத்துவதற்காக, 'கிஸான் ரத்' திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

அ. கர்நாடகா **ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மேகாலயா ஈ. குஜராத்

❖ வேளாண் பொருட்களை குறித்த நேரத்தில் விற்பனை செய்வதற்காக அஸ்ஸாம் முதல்வர் சர்பானந்தா சோனோவால், 'கிஸான் ரத்' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்தச் செயலி தேசிய தகவல் மையத்தால் வடிவமைக்கப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக பராமரிக்கப்பட்டு வருகிறது. வலுவான வாங்குபவர்–விற்பவர் வலையமைப்பை நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அஸ்ஸாம் வேளாண்–வணிக மற்றும் கிராமிய உருமாற்றம் திட்டம் (APART) இதனை வெளியிடும்.

**7. வரும் நவம்பர்.17 அன்று மெய்நிகராக நடைபெறவிருக்கும் 12ஆவது BRICS உச்சிமாநாடு, முதலில் எந்த நகரத்தில் நடைபெறவிருந்தது?**

அ. பெய்ஜிங்

**ஆ. புனித பீட்டர்ஸ்பர்க் ☑**

இ. மாஸ்கோ

ஈ. புது தில்லி

❖ பிரேசில் (B) – இரஷ்யா (R) – இந்தியா (I) – சீனா (C) – தென்னாப்பிரிக்கா (S) – (BRICS) நாடுகளின் 12ஆவது உச்சிமாநாடு, வரும் நவம்பர் 17 அன்று மெய்நிகராக நடைபெறவுள்ளது. மே மாதம் லடாக்கில் நிகழ்ந்த எல்லை மோதலுக்குப் பின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இணையும் முதல் மெய்நிகர் பலதரப்பு கூட்டமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

❖ "BRICS Partnership for Global Stability, Shared Security and Innovative Growth – உலகளாவிய நிலைத் தன்மை, பகிரப்பட்ட பாதுகாப்பு மற்றும் புத்தாக்க வளர்ச்சிக்கான BRICS கூட்டாண்மை" என்பது நடப்பாண்டு (2020) கூட்டத்தின் கருப்பொருளாகும்.

**8.உலக வர்த்தக அமைப்பின் (WTO) கூற்றுப்படி, நடப்பாண்டில் (2020) உலக வணிகத்தின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. -1.2 %

ஆ. -5.2 %

**இ. -9.2 % ☑**

ஈ. -13.2 %

❖ உலக வர்த்தக அமைப்பின் (WTO) திருத்தப்பட்ட வர்த்தக முன்கணிப்பின்படி, நடப்பாண்டில் (2020) உலக வணிகம், 9.2 சதவிகிதம் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், 2021ஆம் ஆண்டில், உலகம், 7.2% உயர்வை பதிவுசெய்யும் என WTO மதிப்பிட்டுள்ளது. முன்னதாக ஏப்ரல் மாதத்தில், உலக வர்த்தகத்தின் அளவு 2020ஆம் ஆண்டில் 13 சதவிகிதத்திற்கும் 32 சதவிகிதத்திற்கும் இடையில் வீழ்ச்சியடையும் என்று உலக வர்த்தக அமைப்பு கணித்திருந்தது.

**9.கீழ்க்கண்ட எந்த வேதியியல் துறையில் பணியாற்றியதற்காக வேதியியலுக்கான நடப்பாண்டு (2020) நோபல் பரிசு இரண்டு அறிவியலாளர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது?**

**அ. மரபணு திருத்தியமைத்தல் ☑**

ஆ. உயிரி – வேதியியல்

இ. மின் வேதியியல்

ஈ. குவாண்டம் வேதியியல்

- வேதியியல் துறைக்கான நடப்பாண்டு (2020) நோபல் பரிசு இம்மானுவேல் சார்பென்டியர் மற்றும் ஜெனிபர் A டௌட்னா ஆகிய இரு பெண் அறிவியலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக இராயல் சுவீட அறிவியல் கழகம் அறிவித்துள்ளது. மரபணுவைத் திருத்தியமைப்பதற்கான வழிமுறையைக் கண்டறிந்ததற்காக அவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

- இவர்கள் இருவரும் பாக்டீரியத்தின் நோயெதிர்ப்பு மண்டலத்தை ஆய்வுசெய்தபோது, ஒரு மூலக்கூறு கருவியைக் கண்டறிந்தனர். அது, மரபணுவில் துல்லியமான கீறல்களை மேற்கொள்ள உதவுகிறது. மரபணு தொழில்நுட்பத்தின் கூர்மையான கருவிகளுள் ஒன்றான CRISPR / Cas9 மரபணு கத்தரிக் கோலை பயன்படுத்தி, விலங்குகள், தாவரங்கள் & நுண்ணுயிரிகளின் மரபணுவை மிகத்துல்லியமாக மாற்றவியலும்.

**10. 5G ரேடியோ மற்றும் போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதற்காக எரிக்சனுடன் கூட்டிணைந்துள்ள இந்திய நிறுவனம் எது?**

அ. ஜியோ

**ஆ. ஏர்டெல் ☑**

இ. வோடபோன்

ஈ. ஐடியா

- இந்திய தொலைத் தொடர்பு சேவை வழங்குநரான பாரதி ஏர்டெல், 5G ரேடியோ வலையமைப்பை உருவாக்குவதற்கான எரிக்சன் நிறுவனத்துடனான ஒப்பந்த காலத்தை நீட்டித்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஐந்தாம் தலைமுறைக்கேற்ற எரிக்சன் ரேடியோ அமைப்பு தயாரிப்புகள் அனைத்தும் ஏர்டெல் வாடிக்கையாளர்களின் இணைய அனுபவத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் அதிக திறன்பேசி பயன்பாடு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.இணைய பாதுகாப்பு குறித்த அறிவு & தொழில்நுட்ப பரிமாற்றத்திற்காக எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. ஜெர்மனி

ஆ. பிரான்ஸ்

**இ. ஜப்பான் ☑**

ஈ. சிங்கப்பூர்



❖ இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையே இணைய பாதுகாப்பு குறித்த கூட்டுறவுப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இயற்கை எரிவாயு விலையிடலில் தரப்படுத்தப்பட்ட மற்றும் வெளிப்படையான மின்னணு–ஏல நடைமுறைக்கு நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கொல்கத்தா மெட்ரோ இரயிலின் ஒரு திட்டத்தின் திருத்தப்பட்ட செலவினத்திற்கும் அது அனுமதி அளித்துள்ளது. COVID–19 குறித்த பொது விழிப்புணர்வு பரப்புரைத் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2.விழாக்காலங்களை முன்னிட்டு இந்தியப்பிரதமர் தொடங்கியுள்ள COVID–19 விழிப்புணர்வு பரப்புரைத் திட்டத்தின் பெயரென்ன?**

**அ. ஜன் அந்தோலன் ☑**

ஆ. பாரத் அந்தோலன்

இ. COVID ஜக்ருதா

ஈ. COVID சோடோ இந்தியா

❖ அண்மையில் பிரதமர் மோடி, COVID–19 தற்காப்பு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, 'ஜன் அந்தோலன்' என்ற பரப்புரைத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். திருவிழாக்கள், குளிர்காலம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் செயல்படவுள்ளதை கருத்தில்கொண்டு இப்பரப்புரை தொடங்கப்பட்டுள்ளது. முகமறைப்பு அணியவும், கைகளை நன்றாக கழுவவும், சமூக விலகலை பின்பற்றவும் பிரதமர் மோடி அப்போது கேட்டுக்கொண்டார்.

**3.உலக பருத்தி வணிகத்தில், இந்திய உயர்ரக பருத்தியின் புதிய வணிகப் பெயர் (brand) என்ன?**

அ. பாரத் பருத்தி

ஆ. வியத்தகு பருத்தி

**இ. கஸ்தூரி பருத்தி ☑**

ஈ. மகாராஜா பருத்தி

❖ மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, அண்மையில், இந்திய பருத்திக்கான முதல் வணிகப் பெயரையும் இலச்சினையையும் வெளியிட்டார். அது, அக்டோபர்.7 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்ட இரண்டாவது உலக பருத்தி நாளன்று வெளியிடப்பட்டது.

❖ இந்தியாவின் உயர்ரக பருத்தி, உலக பருத்தி வணிகத்தில், 'கஸ்தூரி பருத்தி' என்று அழைக்கப்படும். இந்திய பருத்திக்கான புதிய இலச்சினையையும் அமைச்சர் அப்போது வெளியிட்டார்.

**4.நெதர்லாந்து பேரரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. நவ்தேஜ் சர்னா

**ஆ. பிரதீப் குமார் ராவத் ☑**

இ. அருண்குமார் சிங்

ஈ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா

❖ 1990ஆம் ஆண்டைச் சார்ந்த மூத்த இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரியான பிரதீப் குமார் ராவத் நெதர்லாந்து பேரரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, தற்போது இந்தோனேசிய குடியரசின் இந்திய தூதராக இருக்கும் பிரதீப் குமார், விரைவில் புதிய பதவியை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) புதிய துணை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. M இராஜேஸ்வர் ராவ் ☑**

ஆ. ஆஷிமா கோயல்

இ. ஜெயந்த் R வர்மா

ஈ. சஷங்கா பிதே

❖ ரிசர்வ் வங்கியின் புதிய துணை ஆளுநராக M இராஜேஸ்வர் ராவை நடுவணரசு நியமித்துள்ளது. அவர் தற்போது RBI'இன் நிர்வாக இயக்குநராக பணியாற்றி வருகிறார். மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு, இந்த நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது, N S விஸ்வநாதனை அடுத்து RBI'இன் நான்காவது துணை ஆளுநராக M இராஜேஸ்வர் ராவ் பொறுப்பேற்கவுள்ளார்.

**6.இந்தியாவின் முதல் அதிநவீன உற்பத்தி மையம் (AMHUB) நிறுவப்படவுள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கர்நாடகா

இ. கேரளம்

ஈ. மேகாலயா

❖ இந்தியாவின் முதல் அதிநவீன உற்பத்தி மையமானது (Advanced Manufacturing HUB – AMHUB) தமிழ்நாட்டில் நிறுவப்படவுள்ளது. இது தொடர்பாக, தமிழ்நாட்டின் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் உதவி நிறுவனமான, 'The Guidance' உலக பொருளாதார மன்றத்துடன் (WEF) கூட்டிணைந்துள்ளது. AMHUB என்பது WEF வடிவமைத்த பத்தொன்பது தளங்களுள் ஒன்றாகும். நான்காம் தொழிற்துறை புரட்சியின் வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதன்மூலம், இது, தமிழ்நாட்டில் உற்பத்தி சூழலியல் அமைப்புக்கு உதவிபுரியும்.

**7.ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, எந்த நாட்டினுடைய அந்நிய நேரடி முதலீட்டில் நிதி நிறுவனங்களை அமைக்கவியலாது?**

அ. மாலத்தீவு

**ஆ. மொரிஷியஸ் ☑**

இ. செஷல்ஸ்

ஈ. கேமன் தீவுகள்

❖ நிதியியல் நடவடிக்கை பணிக்குழு வகுத்துள்ள வரையறைகளை பூர்த்திசெய்யாத மொரிஷியஸ் அல்லது பிற களங்களினுடைய அந்நிய நேரடி முதலீட்டில் நிதி நிறுவனங்களை அமைக்க முடியாது என்று இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் அறிவித்தது. ரிசர்வ் வங்கியின் இந்த நடவடிக்கை, வங்கி சாரா நிதி நிறுவனங்களின் வருடாந்திர வருவாயை பேரளவுக்கு பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.முதன்முறையாக, போர்ப்ஸ் இந்தியா செல்வந்தர்கள் பட்டியல் – 2020'இன் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்ற இந்திய தொழிலதிபர் யார்?**

அ. கௌதம் அதானி

ஆ. சிவ் நாடார்

**இ. சைரஸ் பூனவல்லா ☑**



ஈ. உதய் கோடக்

❖ சமீபத்தில் வெளியிடப்பட்ட போர்ப்ஸ் இந்தியா செல்வந்தர்கள் பட்டியல் – 2020'இன்படி, ரிலையன்ஸ் தொழிற்துறையின் தலைவர் தொடர்ந்து பதிமூன்றாம் ஆண்டாக செல்வந்த இந்தியராக இருக்கிறார். அவரது நிகர மதிப்பு $88.7 பில்லியன் டாலராக உள்ளது. முகேஷ் அம்பானியைத் தொடர்ந்து $25.2 பில்லியன் டாலர் சொத்துக்களுடன் கௌதம் அதானியும், $20.4 பில்லியன் டாலர் சொத்துக்களுடன் சிவ் நாடரும் உள்ளனர். முதன்முறையாக முதல் பத்து இடங்களுக்குள் சீரம் இந்தியா நிறுவனத்தின் தலைவர் சைரஸ் பூனவல்லா இடம்பெற்றுள்ளார்.

**9.INOX வளி தயாரிப்புகளால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய கிரீன்பீல்ட் உயிர்வளி (oxygen) ஆலையை திறந்துவைத்துள்ள மாநில அரசு எது?**

அ. குஜராத்

ஆ. பீகார்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. ஜார்க்கண்ட்

❖ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், காசியாபாத்தின் மோடி நகரில், மாநிலத்தின் மிகப்பெரிய உயிர்வளி ஆலையைத் திறந்து வைத்துள்ளார். தொழிலக மற்றும் மருத்துவ வாயுக்களின் முன்னணி உற்பத்தியாளர்களான INOX வளி தயாரிப்புகள் நிறுவனம் இந்த ஆலையை உருவாக்கி உள்ளது. இவ்வாலையின் திட்ட செலவினம் ₹135 கோடியாகும். இந்த ஆலை, நாளொன்றுக்கு 150 டன் திரவ மருத்துவ உயிர்வளியை உற்பத்தி செய்யும் திறன்கொண்டதாகும்.

**10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'SARDP–NE' என்பதை செயல்படுத்தும் நடுவணமைச்சகம் எது?**

**அ. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ☑**

ஆ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ. வீட்டு வசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

ஈ. உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

❖ வடகிழக்கு பகுதிகளில் சிறப்பு விரைவுச் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடை இந்த நிதியாண்டில் மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் கிட்டதட்ட இரு மடங்காக உயர்த்தியுள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் நெடுஞ்சாலைகள் அமைக்க, 2020–21'ஆம் நிதி ஆண்டுக்கு முன்பு ₹390 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது இதே காலகட்டத்துக்கு இந்தத் தொகை ₹760 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் ₹300 கோடி, அருணாச்சல பிரதேச மாநிலத்தில் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ "Indian Sat" என்ற பெயரில் கருர் மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்கள் உருவாக்கிய செயற்கைக்கோள், அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA'ஆல் விண்ணில் ஏவப்படவுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றதற்காக இராம்விலாஸ் பஸ்வான் கின்னஸ் சாதனை படைத்தார்; அவர் எந்தத் தொகுதியிலிருந்து இந்தச் சாதனையை புரிந்தார்?**

**அ. ஹாஜிப்பூர் ☑**

ஆ. புத்த கயா

இ. பாட்னா சாஹிப்

ஈ. நாளந்தா

❖ ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளுக்காகப் போராடிய மூத்த அரசியல் தலைவரும், லோக் ஜனசக்தி கட்சியின் நிறுவனருமான இராம்விலாஸ் பஸ்வான் தனது 74ஆம் வயதில் காலமானார். நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றமைக்காக கின்னஸ் சாதனை படைத்தார். 1977ஆம் ஆண்டில் பீகார் மாநிலத்திலுள்ள ஹாஜிப்பூர் தொகுதியிலிருந்து 4.24 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவர் வெற்றி பெற்றார். நுகர்வோர் விவகார அமைச்சராக பணியாற்றி வந்த பஸ்வானின் மறைவுக்குப் பிறகு, அவரின் பொறுப்பை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், கூடுதலாக நிர்வகித்து வருகிறார்.

**2. ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, 2020 டிசம்பர் முதல், கீழ்க்காணும் எந்தச் சேவை, 24x7 (நாள் முழுவதும்) கிடைக்கவுள்ளது?**

அ. NEFT

ஆ. IMPS

**இ. RTGS ☑**

ஈ. BBPS

❖ எதிர்வரும் 2020 டிசம்பர் முதல் **RTGS** (Real Time Gross Settlement) என்ற பணமனுப்பும் முறையில் 24 மணி நேரமும் (24x7) பணம் அனுப்ப முடியும் என இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளார். தற்போதுள்ள RTGS சேவையில், ஒரு வேலை நாளில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே வாடிக்கையாளரால் பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ள முடியும். நேரக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது என்பது இணையவழி பணப்பரிமாற்றத்தை மிகவும் பயனுள்ளதாக்கும். குறைந்தபட்சம் ₹2 லட்சத்திலிருந்து உச்சவரம்பு ஏதுமில்லாமல் RTGS மூலம் இனி பணமனுப்பவியலும்.

**3.நடப்பாண்டில் (2020) அமைதிக்கான நோபல் பரிசை வென்ற நபர் / நிறுவனம் யார் / எது?**

அ. ஜெசிந்தா ஆடெர்ன்

ஆ. கிரேட்டா துன்பெர்க்

இ. உலக நலவாழ்வு அமைப்பு

**ஈ. ஐநா உலக உணவுத் திட்டம் ☑**

WFP World Food Programme wfp.org

❖ COVID-19 தொற்றுநோய்க்கு இடையில் மில்லியன் கணக்கான மக்களுக்கு உணவளித்தமைக்காக ஐநா அவையின் உலக உணவுத்திட்டத்திற்கு நடப்பாண்டுக்கான (2020) அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 1961ஆம் ஆண்டில் ஐநா உலக உணவுத்திட்டம் நிறுவப்பட்டது.

❖ இந்த ஐநா அமைப்பானது கடந்த ஆண்டில் மட்டும் 97 மில்லியன் உலக மக்களுக்கு உதவியுள்ளது. மேலும், 88 நாடுகளைச் சார்ந்த 15 பில்லியனுக்கும் அதிகமானோருக்கு கடந்த ஆண்டில் உணவுப் பொருட்களை அது வழங்கியுள்ளது. இந்தப் பரிசு தங்கப்பதக்கம், பட்டயம் மற்றும் பத்து மில்லியன் சுவீட குரோனாருக்கான காசோலையைக் கொண்டுள்ளது.

**4.உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டு DRDO'ஆல் பரிசோதிக்கப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையின் பெயரென்ன?**

**அ. ருத்ரம் ☑**

ஆ. சிவா

இ. சக்தி

ஈ. இறைவா

❖ ஒடிசா கடற்பகுதியிலிருந்து SU30 MK1 போர் விமானத்தின்மூலம், மேம்படுத்தப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையின் (ருத்ரம்) சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்திய வான்படைக்காக, பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO), இந்த 'ருத்ரம்' எனும் முற்றிலும் உள்நாட்டிலேயே உருவான மேம்படுத்தப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையை தயாரித்தது. இந்த ஏவுகணையின்மூலம் இந்திய வான்படை வீரர்கள், வெகு தொலைவிலிருந்தே எதிரி நாடுகளின் ரேடார்கள், டிராக்கிங் மற்றும் தகவல் தொடர்பை அழிக்கவியலும்.

**5.எந்தவொரு திட்டத்தின்கீழ், சொத்து விவர அட்டைகளின் விநியோகத்தை பிரதமர் தொடங்கவுள்ளார்?**

**அ. ஸ்வாமித்வா ☑**

ஆ. ஸ்வயம்

இ. ஸ்வநிதி

ஈ. ஸ்வீகார்

❖ பிரதமர் மோடி, SVAMITVA (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) திட்டத்தின்கீழ் சொத்து விவர அட்டைகளை விநியோகத்தை தொடங்கவுள்ளார். கடன் பெறவோ அல்லது இதர நிதி பயன்பாடுகளுக்காகவோ கிராம மக்கள், தங்களது சொத்துகளை, ஒரு நிதி சொத்தாக உபயோகிப்பதற்கு இந்த நடவடிக்கை வழி வகுக்கும். இந்நிகழ்வின்போது 132,000'க்கும் மேற்பட்ட நில உரிமையாளர்களுக்கு சொத்து விவர அட்டைகளின் நகல்கள் ஒப்படைக்கப்படும். அட்டைகளை மாநில அரசுகளும் மக்களுக்கு விநியோகிக்கும்.

**6.நாட்டின் வேலைவாய்ப்பு நிலையை மதிப்பிடுவதற்காக தொழிலாளர் அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தலைவர் யார்?**

அ. S P முகர்ஜி ☑

ஆ. சந்தோஷ் கங்வார்

இ. நிர்மலா சீதாராமன்

ஈ. பியூஷ் கோயல்

❖ நாட்டின் வேலைவாய்ப்பு நிலைகுறித்து மதிப்பீடு செய்வதற்காக தொழிலாளர் பணியகம் அமைக்கப்ப –ட்டிருப்பதாக தொழிலாளர் அமைச்சகம் அறிவித்துள்ளது. SP முகர்ஜி தலைமையிலான நிபுணர் குழு புலம்பெயர்தல், தொழிற்முறை அமைப்புகள், வீட்டுப்பணியாளர்கள் குறித்து மூன்று ஆய்வுகள் நடத்தும். கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியரான SP முகர்ஜி தலைமையிலான இக்குழுவில் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்கள், புள்ளியிலாளர்கள் மற்றும் அரசலுவலர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**7.தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு பயிற்சிகளை தொடங்கியுள்ள நாடு எது?**

அ. சீனா

**ஆ. ஜப்பான் ☑**

இ. மலேசியா

ஈ. தைவான்

❖ ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சகத்தின் அண்மைய அறிக்கையின்படி, ஜப்பானின் கடல்சார் தற்காப்புப் படை, தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்புப் பயிற்சிகளைத் தொடங்கியுள்ளது. இப்பயிற்சியில் உலங்கூர்தி தாங்கி கப்பல் மற்றும் நீர்மூழ்கி கப்பல் உள்ளிட்ட மூன்று கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. முழு தென்சீனக்கடலும் சீனாவால் உரிமைகோரப்படும் நிலையில், அந்நாடு அக்கடலில் அமைந்துள்ள செயற்கைத் தீவுகளில் இராணுவ நிலையங்களை நிறுவியுள்ளது. தென்சீனக்கடலை சீன தேசம் இராணுவமயமாக்கியதாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) குற்றஞ்சாட்டிவருகிறது.

**8.மே மற்றும் அக்டோபர் மாதத்தில் வரும் இரண்டாம் சனிக்கிழமைகளில், பல்லுயிர் தொடர்பான எந்தச் சிறப்புநாள் கொண்டாடப்படுகிறது?**

அ. உலக பல்லுயிர் நாள்

**ஆ. உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாள் ☑**

இ. உலக பாலூட்டிகள் நாள்

ஈ. உலக நீர்வாழ் விலங்கினங்கள் நாள்




❖ புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் மே மற்றும் அக்டோபர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமைகளில் உலக புலம்பெயர்வு பறவைகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த பறவைகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், சூழலியலில் அவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஆகிவற்றை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

❖ "Birds Connect Our World – புள்ளினங்கள் நம் உலகத்தை இணைக்கின்றன" என்பது நடப்பாண்டு (2020) அக்.10 அன்று கொண்டாடப்பட்ட உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளின் கருப்பொருளாகும்.

**9.அண்மையில் தேசிய கடல்சார் அறக்கட்டளையுடன் கூட்டுசேர்ந்த TAEF என்பது எந்த நாட்டில் அமைந்த ஒரு மதியுரையகமாகும்?**

அ. ஜப்பான்

**ஆ. தைவான் ☑**

இ. பிலிப்பைன்ஸ்

ஈ. தாய்லாந்து

❖ தைவான் – ஆசியா பரிமாற்ற அறக்கட்டளை (TAEF) என்பது தைவானைச் சார்ந்த ஒரு முன்னணி மதியுரையகமும் யுஷான் மன்றத்தின் அமைப்பாளரும் ஆகும். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழை –ப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் தேசிய கடல்சார் அறக்கட்டளையுடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதால், இது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது. கூட்டு ஆராய்ச்சி செய்வதையும் இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10.எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ், 'இராஷ்டிரிய காமதேனு ஆயோக்' அமைக்கப்பட்டுள்ளது?**

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ. மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சகம் ☑**

இ. சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

ஈ. உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

❖ இந்திய அரசானது மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையின்கீழ், 'இராஷ்டிரிய காமதேனு ஆயோக்' அமைத்துள்ளது. நவீன மற்றும் அறிவியல்பூர்வ வழிமுறைகளில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதும், கால்நடையினங்களை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

❖ பஞ்சகவ்யப் பொருட்களைப் பயன்படுத்தித் தீபாவளியைக் கொண்டாடும் நோக்கத்தோடு, "காமதேனு தீபாவளி அபியான்" பரப்புரையை தேசிய காமதேனு ஆயோக் தொடங்கியுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. TRIFED, IIT கான்பூர் மற்றும் சத்தீஸ்கர் MFP கூட்டமைப்பு ஆகியவற்றால் இணைந்து தொடங்கப்பட்ட முன்னெடுப்பின் பெயர் என்ன?**

அ. Incredible Tribals

**ஆ. Tech for Tribals ☑**

இ. Tribal Thrust

ஈ. Tribal Leaders

❖ பழங்குடியினர் நலத்துறை அமைச்சகத்தின்கீழ் இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பானது (TRIFED), சத்தீஸ்கர் MFP கூட்டமைப்பு & IIT கான்பூர் ஆகியவற்றுடன் இணைந்து, "பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. இது, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின் (MSME) ஒத்துழைப்புடன், 'தொழில் முனைவு திறன்மேம்பாட்டுத்திட்டத்தின்'கீழ் தொடங்கப்பட்டுள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வான் தன் பயனாளிகளுக்கு ஆறு வாரங்கள் பயிற்சியளிக்கப்படுகிறது.

**2.யாரின் வாழ்க்கை வரலாற்றை, 'தே வெச்சவா கரணி' என்ற தலைப்பில், பிரதமர் மோடி வெளியிட்டார்?**

**அ. Dr பாலாசாகேப் விகே பாட்டீல் ☑**

ஆ. அடல் பிகாரி வாஜ்பாயி

இ. L K அத்வானி

ஈ. ஷியாமா பிரசாத் முகர்ஜி

❖ காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் Dr. பாலாசாகேப் விகே பாட்டீலின் வாழ்க்கை வரலாற்றை பிரதமர் மோடி அண்மையில் வெளியிட்டார். ஒருவரின் வாழ்க்கையை ஓர் உன்னத நோக்கத்திற்காக அர்ப்பணிப்பது எனப்பொருள்படும், 'தே வெச்சவா கரணி' என்ற பெயரில் இந்தத் தன்வரலாறு வெளியீடு செய்யப்பட்டுள்ளது. பாலாசாகேப், எழுமுறை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றியவராவார். சமூக பணித்துறையில் அவராற்றிய பங்களிப்புக்காக, கடந்த 2010ஆம் ஆண்டில் அவருக்கு மதிப்புமிக்க, 'பத்ம பூஷண்' விருது வழங்கப்பட்டது.

**3.எந்த இந்திய நிறுவனத்தின் நிறுவனர்கள், நடப்பாண்டு (2020) IIFL வெல்த் ஹுரூன் இந்தியா 40 & தாமாக உருவான செல்வந்தர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளனர்?**

அ. சொமேட்டோ (Zomato)

**ஆ. செரோதா (Zerodha) ☑**

இ. உதான்

ஈ. பிளிப்கார்ட்

❖ பங்குச்சந்தை தரகு நிறுவனமான, 'செரோதா'வின் நிறுவனர்களான நிதின் காமத் மற்றும் நிகில் காமத் ஆகியோர், நடப்பாண்டு (2020) IIFL வெல்த் ஹுரூன் இந்தியா 40 & தாமாக உருவான செல்வந்தர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளனர்.

❖ அவர்கள், 'True Beacon' என்ற சொத்து மேலாண்மை நிறுவனத்தையும் நிர்வகித்து வருகின்றனர். அவ்விருவரின் மொத்த நிகர சொத்து மதிப்பு ₹24,000 கோடியாகும். இப்பட்டியலில், ₹1000 கோடிக்கும் அதிகமான சொத்து மதிப்புடன்கூடிய 40 வயதுக்குட்பட்ட இந்திய தொழிலதிபர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**4.உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கால்சியம் நைட்ரேட் மற்றும் போரோனேட்டட் கால்சியம் நைட்ரேட் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

**அ. குஜராத் மாநில உரங்கள் மற்றும் இரசாயனங்கள் நிறுவனம் ☑**

ஆ. இந்திய உரங்கள் கழகம்

இ. வேதாந்தா வேதி நிறுவனம்

ஈ. SPIC

❖ குஜராத் மாநில உரங்கள் மற்றும் இரசாயனங்கள் நிறுவனமானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கால்சியம் நைட்ரேட் & போரோனேட்டட் கால்சியம் நைட்ரேட் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போதுவரை இறக்குமதி செய்யப்பட்டு வரும் இவ்விரு வேதிகளும், இந்தியாவில் முதன்முறையாக தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கால்சியம் நைட்ரேட் என்பது மிகவும் கரையக்கூடிய கூறாகும்; இது பரவலாக பாசனவழி உரமிடலில் பயன்படுத்தப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு & சிமெண்டின் வலிமையை அதிகரிக்கவும் இது பயன்படுத்தப்படுகிறது. போரோனேட்டட் கால்சியம் நைட்ரேட் ஆனது நீரில் கரையக்கூடிய ஓர் உரமாகும், இதில் உயர்தர அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

**5.தனது பதிமூன்றாவது பிரெஞ்சு ஓப்பன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?**

அ. நோவக் ஜோகோவிச்

ஆ. ரோஜர் பெடரர்

**இ. ரபேல் நடால் ☑**

ஈ. டொமினிக் தியம்

❖ பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், ஸ்பெயினின் ரபேல் நடால் சாம்பியனானார். பிரெஞ்சு ஓப்பனில் இது அவரது 13ஆவது பட்டமாகும். ஒட்டுமொத்த கிராண்ட்ஸ்லாமில் இது அவரது இருபதாவது பட்டம். இதன்மூலம், இருபது கிராண்ட்ஸ்லாம் பட்டம்வென்ற சுவிச்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சாதனையை ரபேல் நடால் சமன்செய்துள்ளார். 2005ஆம் ஆண்டு அறிமுகமானதில் இருந்து, மொத்தம் ஆடிய 102 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே தோல்வியடைந்த ரபேல், 100 பிரெஞ்சு ஓப்பன் போட்டிகளில் வென்றுள்ளார். இளம் போலந்து வீராங்கனையான இகா ஸ்வெய்டெக், பிரெஞ்சு ஓப்பனில் வென்ற மிகக்குறைந்த தரவரிசையுடைய பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

**6. 'Animal Discoveries 2019 and Plant Discoveries 2019' என்ற அண்மைய அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் எத்தனை புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?**

அ. 244

ஆ. 344

இ. 444

**ஈ. 544 ☑**

❖ இந்திய விலங்கியல் ஆய்வுமையம் மற்றும் இந்திய தாவரவியல் ஆய்வுமையம் ஆகியவை, 'Animal Discoveries 2019 and Plant Discoveries 2019' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டன. இந்த அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் 364 விலங்கினங்கள் மற்றும் 180 தாவர இனங்கள் உட்பட 544 புதிய இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. *Cnemaspisanandani* (பாறையில் வசிக்கும் மரப்பல்லி) மற்றும் *Ginger Amomum nagamiense* (நாகாலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு காட்டு இஞ்சி வகை) ஆகியவை இந்தக் கண்டுபிடிப்புகளுள் இடம்பெற்ற சில முக்கியமான இனங்களாகும்.

**7.யாரை கௌரவிக்கும் விதமாக, பிரதமர், ₹100 மதிப்புள்ள நினைவு நாணயத்தை வெளியிட்டார்?**

**அ. விஜய ராஜே சிந்தியா ☑**

ஆ. திருப்பூர் குமரன்

இ. சியாமா பிரசாத் முகர்ஜி

ஈ. தீனதயாள் உபாத்யாய

❖ விஜய ராஜே சிந்தியாவின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக இந்தியப் பிரதமர் மோடி ₹100 மதிப்புள்ள நினைவு நாணயத்தை வெளியிட்டார். குவாலியரின் 'ராஜமாதா' என அழைக்கப்பட்ட அவர், 1919ஆம் ஆண்டில் பிறந்தார். விஜய ராஜே சிந்தியா தனது அரசியல் வாழ்க்கையை காங்கிரஸ் கட்சியிலிருந்து தொடங்கினார்; பின்னர் பாரதிய ஜனதா கட்சியின் தாய் கட்சியான ஜன சங்கத்தில் உறுப்பினராவதற்கு முன்பு சுதந்திராக் கட்சியில் சேர்ந்தார்.

**8.அனைத்து FCRA கணக்குகளையும் தொடங்குவதற்கு மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள வங்கி எது?**

அ. ஆக்சிஸ் வங்கி

**ஆ. பாரத வங்கி ☑**

இ. ஐசிஐசிஐ வங்கி

ஈ. YES வங்கி

❖ வெளிநாட்டு நன்கொடைகளைக்கோரும் அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் 2021 மார்ச்.31ஆம் தேதிக்குள் பாரத வங்கியின் புதுதில்லி கிளையில் FCRA கணக்கைத் தொடங்க உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. FCRA இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் 2021 ஏப்ரல்.1 முதல் வேறு எந்த வங்கிக் கணக்கிலும் வெளிநாட்டு நன்கொடைகளைப் பெறவியலாது. வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டம், 2020, கடந்த செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தால் திருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**9.நடப்பாண்டில் (2020) ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) சட்டம் மற்றும் நீதி அமைச்சர்களின் ஏழாவது கூட்டத்தை நடத்திய நாடு எது?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. பாகிஸ்தான்

ஈ. இரஷ்யா

❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நீதித்துறை அமைச்சர்களின் ஏழாவது மாநாட்டை, மத்திய சட்ட அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் தலைமைதாங்கி நடத்தினார். இதில் கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் நாடுகளின் நீதித்துறை அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். நிபுணர்கள் பணிக்குழுவின் இரண்டாவது கூட்டத்தை சட்ட விவகாரங்கள் துறையின் செயலாளர் நடத்தினார்.

**10. '2020 காலநிலை சேவைகளின் நிலை' குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. உணவு & வேளாண் அமைப்பு

**ஆ. உலக வானிலை அமைப்பு ☑**

இ. UNICEF

ஈ. உலக உணவுத் திட்டம்

❖ நடப்பாண்டு (2020) காலநிலை சேவைகள் அறிக்கையை உலக வானிலை அமைப்பு, 16 பன்னாட்டு முகவர் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைந்து வெளியிட்டுள்ளது. ஆண்டுதோறும் வானிலை காரணமாக அதிக பேரிடர்கள் நடைபெறுவதாக உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பன்னாட்டளவில் மனிதநேய அடிப்படையிலான உதவிகள் தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கை, 2030ஆம் ஆண்டுக்குள் 50% உயரக்கூடும் என்றும் அது எச்சரித்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ நீலகிரி மாவட்டத்தில் பன்னெடுங்காலமாக வசித்துவரும் 'படுகர்' இன மக்களை பூர்வகுடியினருக்கான பட்டியலில் சேர்த்து, ஐநா மலைகளுக்கான கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. 'ஊழல் ஏற்றுமதி 2020' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ☑

ஆ. UNESCO

இ. உலக வர்த்தக அமைப்பு

ஈ. UNCTAD

- பெர்லினில் உள்ள ஊழல் தடுப்பு கண்காணிப்புக் குழுவான டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் தனது அண்மைய ஆய்வை, "ஏற்றுமதி ஊழல் 2020: OECD கையூட்டு ஒழிப்பு தீர்மானத்தின் அமலாக்கத்தை மதிப்பிடுதல்" என்ற தலைப்பில் வெளியிட்டது. ஆய்வின்படி, சீனா, ஜப்பான், நெதர்லாந்து, தென்கொரியா, ஹாங்காங், கனடா மற்றும் மெக்ஸிகோ ஆகியவற்றுடன் மிக மோசமான பதிவுகளைக்கொண்ட மிகப் பெரிய உலகளாவிய ஏற்றுமதியாளர்களுள் ஒன்றாக இந்தியா உள்ளது.
- இந்திய ஏற்றுமதியாளர்கள் அயல்நாட்டு அதிகாரிகளுக்கு கையூட்டு கொடுப்பதைத் தடுப்பதற்கான எந்த ஒரு வழிமுறையும் இந்தியாவில் இல்லை என்பதையும் அவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

**2.பன்னாட்டுச் செலவாணி நிதியம் (IMF) வெளியிட்டுள்ள, "உலக பொருளாதார கண்ணோட்டம்–2020" அறிக்கையின் தலைப்பு என்ன?**

அ. A Long and Difficult Ascent ☑

ஆ. Pandemic and Global Economy

இ. Tackling the Economic Crisis

ஈ. Longway Ahead

- பன்னாட்டுச் செலவாணி நிதியம், "A Long and Difficult Ascent" என்ற தலைப்பில் "உலக பொருளாதார கண்ணோட்டம்–2020" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 10.30 சதவிகித அளவுக்கு குறுகிவிடும். நடப்பாண்டு (2020) உலகளாவிய வளர்ச்சி – 4.4 சதவிகித அளவுக்கு (குறுக்கம்) இருக்கும் என அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

**3.உலைச்சாம்பலை வழங்குவதற்காக நாடு முழுவதுமுள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ள இந்திய எரிசக்தி உற்பத்தி நிறுவனம் எது?**

அ. அதானி பவர்

ஆ. TATA பவர்

இ. NTPC ☑

ஈ. ரிலையன்ஸ் பவர்

- நாட்டின் மிகப்பெரிய எரிசக்தி உற்பத்தி நிறுவனமும், மத்திய எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனமுமான NTPC லிமிடெட், நாடு முழுவதுமுள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் இணைந்து, சாம்பலை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச்செல்லும் பணியை தொடங்கியுள்ளது.

❖ மின்னுற்பத்தி ஆலைகளிலிருந்து உலைச்சாம்பலை 100 சதவிகிதம் பயன்படுத்துவதற்கான NTPC'இன் உறுதிப்பாட்டுக்கு ஏற்ப இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய ரயில்வேயின் பரந்து விரிந்த வலைப்பின்னலை பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும், குறைந்த செலவிலும் சாம்பலை நாடு முழுவதும் NTPC எடுத்துச்செல்கிறது. சிமெண்ட் உற்பத்தியாளர்களுக்கு பதப்படுத்தப்பட்ட உலைச் சாம்பலை அனுப்பிய முதல் மின்னுற்பத்தி நிலையமாக உபி'இல் உள்ள NTPC ரிஹந்த் திகழ்கிறது.

**4.AYUSH அமைச்சகத்தின் மண்டல மூல மருந்துக் களஞ்சியம் நிறுவப்பட்டுள்ள இடம் எது?**

**அ. சென்னை ☑**

ஆ. மும்பை

இ. கொல்கத்தா

ஈ. தில்லி

❖ AYUSH திட்டத்தின்கீழ் சென்னையில் மண்டல மூலமருந்துக்களஞ்சியத்தை (Regional Raw Drug Repository – RRDR) மத்திய AYUSH அமைச்சகம் தொடங்கியுள்ளது. தேசிய AYUSH இயக்கத்தின்கீழ் மூலிகைத் தாவரங்களைப் பயிரிடுவதில் மண்டல மூலமருந்துக்களஞ்சியம் முக்கியப்பங்கு வகிக்கிறது. சென்னை தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. தென் மண்டலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மூலமருந்துகளைப் பாதுகாக்கவும், ஆவணப்படுத்தவும் இது ஏதுவாக இருக்கும்.

**5. ஈராண்டுகாலத்திற்கு பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடு எது?**

அ. பிஜி

ஆ. மொரீஷியஸ்

**இ. இந்தியா ☑**

ஈ. நைஜர்

❖ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தில், முப்பத்து நான்கு உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இந்தக்கூட்டத்தில், தலைவர் மற்றும் துணைத்தலைவராக இந்தியா மற்றும் பிரான்ஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

❖ ஈராண்டு காலத்துக்கு இந்தப் பதவியில் இந்தியாவும், பிரான்சும் இருக்கும். ஆசிய–பசிபிக் பகுதிக்கு, பிஜி மற்றும் நௌரு, ஆப்பிரிக்காவுக்கு மொரீசியஸ் மற்றும் நைஜர், ஐரோப்பா மற்றும் இதர பகுதிகளுக்கு இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து, இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிக்கு கியூபா மற்றும் கயானா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் துணைத் தலைவர்களாக தேர்வுசெய்யப்பட்டனர்.

**6. 'அங்கிகார்' திட்டம் குறித்த தேசிய அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சு

**ஆ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்

❖ கடந்த 2019ஆம் ஆண்டில், 'அங்கிகார்' திட்டம் தொடங்கப்பட்டது; இதன்கீழ், பிரதமர் ஆவாஸ் திட்டத்தின் பயனாளிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு பிற நலத்திட்டங்களுக்கு அணுகல் வழங்கப்படுகிறது. மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஓர் இணையவழி கருத்தரங்கில் பங்கேற்றார்; அப்போது, கட்டுப்படியாகக்கூடிய வாடகை வீட்டுவசதி வளாகங்களுக்கான வலைத்தளத்–தை அவர் தொடங்கிவைத்தார். இந்தக் கருத்தரங்கத்தின்போது, அவர், 'ANGIKAAR' திட்டம் குறித்த தேசிய அறிக்கையையும் வெளியிட்டார்.

**7.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற நகர்னர் எஃகு ஆலை அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. குஜராத்

ஈ. ஒடிசா

❖ தேசிய கனிம மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (NMDC), நகர்னர் எஃகு ஆலையை (NSP) பிரிக்கவும், அதிலுள்ள நடுவணரசின் பங்குகளை முழுமையாக விற்கவும், பிரதமர் திரு. மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்கட்கான அமைச்சரவைக்குழு கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியது.

❖ NSP பங்குகளை, NMDC'இன் கிளை நிறுவனமாக விற்பனை செய்ய கடந்த 2016ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த முடிவில் திருத்தஞ்செய்து, NSP நிறுவனத்தை தனி நிறுவனமாக பிரித்து அதன் பங்குகளை விற்க பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தச் செயல்முறை 2021 செப்டம்பருக்குள் நிறைவடையும் என எண்ணப்படுகிறது.

**8.ஆப்பிரிக்காவின் மிகவுயர்ந்த சிகரமான கிளிமஞ்சாரோ அமைந்துள்ள நாடு எது?**

அ. தென்னாப்பிரிக்கா

**ஆ. தான்சானியா ☑**

இ. ஜிம்பாப்வே

ஈ. நைஜீரியா

❖ கிளிமஞ்சாரோ சிகரம் தான்சானியாவில் அமைந்துள்ள ஒரு செயற்பாடற்ற எரிமலையாகும. இது, ஆப்பிரிக்காவின் மிகவுயர்ந்த சிகரமும் உலகின் மிகவுயர்ந்த தனித்த மலையுமாகும். அண்மையில், ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தீ பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்றாலும், செய்திகளின்படி, 'கிபுனிகா மலை' என்று அழைக்கப்படும் பகுதி இன்னும் எரிந்துகொண்டுதான் உள்ளது. இந்தத் தீயில், 28 சகிமீ பரப்பளவில் இருந்த தாவரங்கள் தீக்கு இரையானதாக கூறப்படுகிறது.

**9.கீழ்க்காணும் எந்த நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான முதலாவது மருந்தாக, 'Inmazeb' என்ற மருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது?**

அ. COVID-19

**ஆ. எபோலா ☑**

இ. டெங்கு

ஈ. தட்டம்மை




❖ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஒழுங்குமுறை அமைப்பான உணவு மற்றும் மருந்து நிர்வாகம், எபோலா சிகிச்சைக்கான முதலாவது மருந்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 'Inmazeb' என்ற பெயரிலான இம்மருந்து ரீஜெனரான் மருந்துகள் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. பிற சிகிச்சை முறைகளை ஒப்பிடும் போது, நோயாளிகளின் உயிர்வாழ்வு விகிதம் இந்த மருந்தில் அதிகமாக உள்ளது. காங்கோவில் ஈராயிரத்துக்கும் மேற்பட்டோரின் மரணத்திற்கு காரணமாக இருந்த எபோலா நோய்த்தொற்றின்போது இந்த மருந்து பரிசோதிக்கப்பட்டது.

**10. பன்னாட்டுச் செலவாணி நிதியம் வெளியிட்டுள்ள, 'உலக பொருளாதார கண்ணோட்டம்–2020'இன் படி, 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்னவாக இருக்கும்?**

அ. USD 1800

ஆ. USD 1855

**இ. USD 1877 ☑**

ஈ. USD 2000

❖ பன்னாட்டுச் செலவாணி நிதியத்தால் (IMF) அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 'உலக பொருளாதார கண்ணோட்டம்–2020'இன்படி, இந்தியாவின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020ஆம் ஆண்டில் $1877 டாலராக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்கதேசத்தின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020ஆம் ஆண்டில் $1888 டாலராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ இது, இந்தியாவின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகமாகும். இந்த அறிக்கையின்படி, COVID–19 தொடர்பான நாடடங்கு மற்றும் பொருளாதார மந்தநிலையின் விளைவே தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் இந்த வீழ்ச்சிக்கு காரணமாக கூறப்படுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "கடன்களுக்கான கூட்டு வட்டி தள்ளுபடி" என்பது கீழ்க்காணும் எத்தனை வகை கடன்களுக்கு பொருந்தும்?**

அ. மூன்று

ஆ. நான்கு

**இ. எட்டு ☑**

ஈ. பத்து

❖ வங்கிகளில் கடன் பெற்றவர்கள் COVID–19 பேரிடர் காலத்தில் திரும்பச் செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டதையடுத்து, அவர்களுக்கு நடப்பாண்டு மார்ச்–ஆகஸ்ட் வரையிலான ஆறு மாத காலத்துக்கு மாதாந்திர தவணை ஒத்திவைப்பு சலுகை அறிவிக்கப்பட்டது. இச்சலுகையை பயன்படுத்தியோருக்கு கூட்டு வட்டி (வட்டிக்கு வட்டி) விதிக்க முன்பு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது, ₹2 கோடி வரை கடன்பெற்றவர்களுக்கு இந்த வட்டியை தள்ளுபடி செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

❖ அதன்படி, ரூ.2 கோடி வரையில் கடன் பெற்ற குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் தனிநபர் கடனாளிகளுக்கு கூட்டு வட்டி தள்ளுபடி செய்யப்படவுள்ளது. இவைதவிர, கல்வி, வீட்டு வசதி, நுகர்வோர் சாதனங்கள், கடனட்டை நிலுவை, மோட்டார் வாகனம், நுகர்வு ஆகிய பிரிவுகளுக்கும் இந்த கூட்டு வட்டி தள்ளுபடி சலுகை பொருந்தும். இந்தத் திட்டத்தை வரும் 2020 நவம்பர்.2ஆம் தேதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டவட்டமான திட்டத்தை கொண்டுவருமாறு இந்திய உச்சநீதிமன்றம் அண்மையில் நடுவணரசுக்கு அறிவுறுத்தியது.

**2. COVID–19 தொற்றை சமாளிப்பதற்கு ஏழ்மையான நாடுகளுக்கு உதவுவதற்காக, $25 பில்லியன் டாலர் மதிப்பிலான அவசரகால நிதியுதவிக்கு அழைப்பு விடுத்துள்ள நிறுவனம் எது?**

அ. ADB

ஆ. AIIB

**இ. உலக வங்கி ☑**

ஈ. IMF

❖ உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு உதவ, COVID–19 தொற்றுநோயின் சவால்களை கையாள, $25 பில்லியன் அமெரிக்க டாலர் அவசர நிதியுதவிக்கு உலக வங்கி அழைப்பு விடுத்துள்ளது. அண்மையில், உலக வங்கியின் தலைவர் டேவிட் மால்பாஸ், நிதியமைச்சர்கள் மற்றும் G20 முதன்மை பொருளாதார –ங்களின் மத்திய வங்கி ஆளுநர்களிடம், பன்னாட்டு வளர்ச்சி சங்கத்தின் பிரதிநிதிகளிடம் இந்த உதவி நிதித்தொகுப்பை வழங்கப்போவதாக தெரிவித்தார்.

**3. "Grow, nourish, sustain. Together. Our actions are our future" என்பது அக்.16 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**




அ. உலக புவி நாள்

**ஆ. உலக உணவு நாள் ☑**

இ. உலக ஊட்டச்சத்து நாள்

ஈ. உலக வாழ்வாதார நாள்

❖ நல்ல உணவு மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக உணவு நாள், ஆண்டுதோறும் அக்டோபர்.16 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. "Grow, nourish, sustain. Together. Our actions are our future" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். உலகம் முழுவதும் இந்த நாளில் நடத்தப்படும் கொண்டாட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) தலைமை வகிக்கிறது.

**4.அதிநவீன பன்னாட்டு வைராலஜி நிறுவனம் திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ. கர்நாடகா

ஆ. மகாராஷ்டிரா

**இ. கேரளா ☑**

ஈ. உத்தர பிரதேசம்

❖ அதிநவீன பன்னாட்டு வைராலஜி நிறுவனத்தை கேரள மாநிலத்தின் முதலமைச்சர் பினராயி விஜயன் சமீபத்தில் திறந்துவைத்தார். அது, திருவனந்தபுரத்தில் உள்ள தொனக்கல்லில் உள்ள வாழ்வறிவியல் பூங்காவில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற வைராலஜிஸ்ட், Dr அகில் பானர்ஜி, தற்போது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின்கீழ் உள்ள இவ்வாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**5.எந்த நாட்டுடனான அமைதி ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ. இரஷ்யா

ஈ. ஈரான்

❖ இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் (UAE) இடையில் கையெழுத்திடப்பட்ட சுமூகமாக்குதல் ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் நாடாளுமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இஸ்ரேலும் ஐக்கிய அரபு அமீரகமும் செப்.15 அன்று வாசிங்டனில் தங்கள் உறவுகளை சுமூகமாக்குதலுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மேலும் பக்ரைனுடனான ஓர் அமைதி ஒப்பந்தத்திலும் இஸ்ரேல் கையெழுத்திட்டது. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பக்ரைன் ஆகியவை இஸ்ரேலுடனான உத்தியோகபூர்வ உறவுகளுக்கு உடன்பட்ட முதல் வளைகுடா நாடுகளாகும்.

**6. "தாலசீமியா பால் சேவா யோஜனா" என்பது ஹீமடோபாய்டிக் ஸ்டெம் செல் மாற்று சிகிச்சையின் ஒரு பகுதியாகும். இதற்கு நிதியுதவி அளித்துவரும் பொதுத்துறை நிறுவனம் எது?**

அ. NTPC

**ஆ. இந்திய நிலக்கரி நிறுவனம் ☑**

இ. SAIL

ஈ. ONGC

❖ தலசீமியாவால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய நோயாளிகள் பயன்பெறும் வகையில், 2ஆம்கட்ட, "தலசீமியா பால் சேவா யோஜனா" திட்டத்தை மத்திய நலவாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr. ஹர்ஷ வர்தன் தொடங்கிவைத்தார். இந்திய நிலக்கரி நிறுவனத்தின் சமூகப்பணியாக கடந்த 2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்மூலம் தலசீமியா மற்றும் அரிவாள் செல் நோயாளிகளுக்கு குருதியில் உள்ள ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'e-VIN' என்பதன் விரிவாக்கம் என்ன?**

**அ. Electronic Vaccine Intelligence Network ☑**

ஆ. Emergency Vaccine Infrastructure Network

இ. Electronic Voting Intelligence Network

ஈ. Electronic Voluntary Intelligence Network

❖ சுமார் 200-250 மில்லியன் மக்களை உள்ளடக்கிய சுமார் 400-500 மில்லியன் தடுப்பூசிகளை வாங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் செயலாற்றி வருவதாக மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அண்மையில் அறிவித்தார். மின்னணு தடுப்பூசி நுண்ணறிவு நெட்வொர்க் (e-VIN) ஆனது நோய்த்தடுப்பு திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், தடுப்பூசி இயக்கத்தின் நிகழ்நேர கண்காணிப்புக்கும்; கொள்முதல் முதல் சேமிப்புக்கும், விநியோகத்திற்கும் அது பயன்படுத்தப்படுகிறது.

**8. "இந்தியா – பன்னாட்டு உணவு மற்றும் வேளாண் வாரம்" என்பதை தொடங்கிய அமைச்சகம் எது?**

அ. வேளாண் அமைச்சகம்

**ஆ. உணவுப் பதனிடுதல் அமைச்சகம் ☑**

இ. புவி அறிவியல் அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

❖ அக்டோபர்.16-22 வரை ஒருங்கிணைக்கப்படும் "இந்தியா-பன்னாட்டு உணவு மற்றும் வேளாண் வாரத்தை" இணையவாயிலாக மத்திய வேளாண் மற்றும் உழவர்கள் நலன், உணவு பதப்படுத்தும் தொழிற்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார். தொடக்க நிகழ்வில் உரையாற்றிய நரேந்திர சிங் தோமர், இந்திய உணவு சந்தையில் இந்தியாவின் உணவுப் பதப்படுத்தும் துறையின் பங்கு 32% இருப்பதாக கூறினார். இந்த நிகழ்வை முன்னிட்டு, 'அன்ன தேவோ பவா' என்று தலைப்பிடப்பட்ட இயக்கத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

**9.தோல் துறை திறன் கழகம் (LSSC) அறிமுகப்படுத்தியுள்ள திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. Skill India

ஆ. Leather India

**இ. Scale India ☑**

ஈ. Scale Skill

❖ "Scale India" என்ற ஆண்ட்ராய்டு அடிப்படையிலான திறன்பேசி செயலியை, இலாப நோக்கற்ற அமைப்பான Leather Sector Skill Council தொடங்கியுள்ளது. திறன் மற்றும் வேலைவாய்ப்பு சூழலியலில் உள்ளோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை இந்தச் செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தச் செயலியை, மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே, ஒரு மெய்நிகர் நிகழ்வில் அறிமுகப்படுத்தினார்.

**10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பெபிகொலம்போ என்பது எந்தக் கோள் / வான் பொருளை ஆராய ஏவப்பட்ட விண்கலமாகும்?**

அ. சனி

ஆ. செவ்வாய்

**இ. புதன் ☑**

ஈ. வெள்ளி

❖ 'BepiColombo' என்பது ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA) ஆகியவற்றின் கூட்டுத்திட்டமாகும்; இது, புதன் கோளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமீபத்தில் இவ்விண்கலம், முதன்முறையாக வெள்ளிக் கோளைக் கடந்து, வெள்ளிக்கு 17,000 கிலோமீட்டர் தொலைவிலிருந்து வெள்ளியை படம் பிடித்தது. புதனுக்கு ஏழாண்டு பயணத்தை மேற்கொள்வதற்காக இந்த விண்கலம் கடந்த 2018ஆம் ஆண்டில் ஏவப்பட்டது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.உலக நலவாழ்வு அமைப்பின் அண்மைய அறிக்கையின்படி, 26 சதவீதத்துடன் உலகில் மிக அதிகமாக காசநோயால் பாதிப்படைந்துள்ள நாடு எது?**

அ. நைஜீரியா

**ஆ. இந்தியா ☑**

இ. மத்திய ஆப்பிரிக்க குடியரசு

ஈ. காங்கோ குடியரசு



❖ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) சமீபத்தில், 'உலகளாவிய காசநோய் அறிக்கை–2020' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி, COVID–19 கொள்ளைநோயின் காரணமாக விதிக்கப்பட்ட நாடடங்கை அடுத்து, 2020 ஏப்ரலில் காசநோய் பாதிப்பு சதவீதத்தில், சுமார் 85% அளவுக்கு இந்தியாவில் குறைந்துள்ளது. இருப்பினும், 26 சதவீதத்துடன் உலகில் மிக அதிகமாக காசநோயால் பாதிப்படைந்துள்ள நாடாக இந்தியா உள்ளது.

**2.உலக வங்கி வளர்ச்சிக்குழுவின் 102ஆவது கூட்டத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**

அ. நரேந்திர மோடி

ஆ. பியூஷ் கோயல்

**இ. நிர்மலா சீதாராமன் ☑**

ஈ. ஹர்ஷ் வர்தன்

❖ உலக வங்கி வளர்ச்சிக் குழுவின் 102ஆவது கூட்டத்தில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் காணொலிக்காட்சிமூலம் கலந்துகொண்டார். COVID–19 தொற்று நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை அவர் அப்போது எடுத்துரைத்தார். அதில், ஏழைகளுக்கு நேரடி பயன் பரிமாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைளுக்கு முதற்கட்டமாக $23 பில்லியன் டாலர் நிதியை நடுவணரசு அறிவித்தது; அதையடுத்து பிரதமரின் தற்சார்பு இந்தியா திட்டத்தின்கீழ் $271 பில்லியன் டாலர் மதிப்பிலான நிதியுதவி திட்டங்கள் அறிவிக்கப்பட்டதை அமைச்சர் கூறினார்.

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, ENFUSER & SILAM ஆகியவற்றுடன் தொடர்புடைய துறை எது?**

அ. பாதுகாப்பு

**ஆ. சுற்றுச்சூழல் ☑**

இ. கல்வி

ஈ. கலாச்சாரம்

❖ காற்றின் தரம் குறித்து முன்கூட்டியே அறிவிக்கும் அதிநவீன அமைப்பை தில்லி மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளுக்காக இந்திய வானிலை துறை செயல்படுத்தியுள்ளது. "System for Integrated Modelling

of Atmospheric Composition (SILAM)" எனப்படும் காற்றின் தரத்தை முன்கூட்டியே கணிக்கும் ஒருங்கி –ணைந்த அமைப்பு தற்போது மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ "Environmental Information Fusion Service (ENFUSER)" என்னும் அதீத திறன்வாய்ந்த, மாநகரத்துக்கான அளவிடும் அமைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பின்லாந்து வானிலை நிறுவனத்துடன் இணைந்து SILAM & ENFUSER ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. இவ்விரு அமைப்புகளின் துணைகொண்டு காற்றின்தரத்தை துல்லியமாக முன்கூட்டியே கணித்து மாசை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை, செயற்பாடுகளை எடுக்கலாம்.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'உத்திசார் ஆயுதக்குறைப்பு ஒப்பந்தம் (START)' தொடர்புடைய இரு நாடுகள் எவை?**

அ. சீனா மற்றும் இரஷ்யா

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் இரஷ்யா ☑**

இ. இந்தியா மற்றும் இரஷ்யா

ஈ. இஸ்ரேல் மற்றும் இரஷ்யா

❖ இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பிப்ரவரியில் காலாவதியாகும் புதிய உத்திசார் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் (START) நீட்டிக்கப்படவேண்டும் என முன்மொழிந்துள்ளார். எவ்வாறாயினும், எந்தவொரு நிபந்தனையும் விதிக்காமல் குறைந்தபட்சம் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை நீட்டிக்கும் இரஷ்ய அதிபரின் முன்மொழிவை அமெரிக்கா நிராகரித்துள்ளது. 2010'இல் கையெழுத்திடப்பட்ட புதிய START ஒப்பந்தம், இருநாடுகளும் பயன்படுத்தக்கூடிய உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த அணுவாற்றல் சாதனங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துகிறது.

**5.நடப்பாண்டின் (2020) உலகளாவிய பசி குறியீட்டில் இந்தியா அடைந்த தரநிலை (rank) என்ன?**

அ. 102

ஆ. 105

**இ. 94 ☑**

ஈ. 97

❖ அண்மையில் வெளியிடப்பட்ட பசி மற்றும் ஊட்டச்சத்தின்மையால் வாடும் நாடுகளின் பட்டியல்–2020 அறிக்கையின்படி, 107 நாடுகளுள் இந்தியா 94ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 27.2 மதிப்பெண்களை இந்தியா பதிவுசெய்துள்ளது. பசியின் அளவு "தீவிரம்" என்ற அளவில் உள்ளதை இது காட்டுகிறது. கடந்த ஆண்டு, 117 நாடுகளுள் இந்தியா 102ஆம் இடத்தில் இருந்தது. இந்திய மக்கள்தொகையில் 14 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் என்றும் இந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

**6.இந்தியாவை எந்த ஆண்டுக்குள் மாறுபக்க கொழுப்பு பாதிப்பற்ற நாடாக மாற்றவேண்டும் என அரசு நோக்கம் கொண்டுள்ளது?**

அ. 2021 **ஆ. 2022 ☑**

இ. 2025 ஈ. 2030

2022

❖ வரும் 2022ஆம் ஆண்டுக்குள் மாறுபக்க கொழுப்பு பாதிப்பற்ற (Trans Fat Free) நாடாக மாற்றவேண்டும் என இந்தியா இலக்கு வைத்துள்ளது. இது உலக சுகாதார அமைப்பு (WHO) நிர்ணயித்த இலக்கைவிட ஓராண்டு முன்னதாகும். மாறுபக்க கொழுப்பு என்பது ஓரளவு ஹைட்ரஜனேற்றப்பட்ட தாவர எண்ணெய்–களில் உள்ள ஒரு நச்சுப்பொருளாகும். சுட்ட மற்றும் வறுத்த உணவுகளானது இந்திய ஒன்றியத்தில் பரவா நோய்கள் ஏற்படுவதற்கான ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

**7.லான்செட் இதழில் வெளியான சமீபத்திய தரவின்படி, 2019'இல் இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் என்ன?**

அ. 65

ஆ. 66.6

**இ. 70.8 ☑**

ஈ. 80.8

❖ லான்செட் இதழின் ஓர் அண்மைய வெளியீட்டின்படி, கடந்த 1990ஆம் ஆண்டில் 59.6 ஆண்டுகளாக இருந்த இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம், தற்போது 2019'இல் 70.8 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இதன் மதிப்பு கேரளத்தில் 77.3 ஆண்டுகளாகவும், உத்தரபிரதேசத்தில் 66.9 ஆண்டுகளாகவும் உள்ளது. ஆயுட்காலம் அதிகரித்தாலும், இந்தியர்கள் தங்கள் வாழ்நாளின் கடைசியில் பெரும்பாலான நாட்களை நோயுடனும், நலக்குறைவுடனும் அவதிப்பட்டபடியே கழிக்கின்றனர் என இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. உயர் இரத்தவழுத்தம், புகையிலை பயன்பாடு, வளி மாசுபாடு மற்றும் COVID–19 தொற்றுநோய் ஆகியவை கடுமையான சுகாதார பாதிப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளன.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, நியூ ஷெப்பர்ட் என்ற ஏவுகனையுடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**

அ. ISRO

ஆ. NASA

**இ. புளூ ஆர்ஜின் ☑**

ஈ. வர்ஜின் அட்லாண்டிக்

❖ 'நியூ ஷெப்பர்ட்' என்ற ஏவுகணையை சமீபத்தில் புளூ ஆர்ஜின் நிறுவனம் சோதனை செய்தது. இந்த 'நியூ ஷெப்பர்ட்' ஏவுகலம், மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏவுகலத்தைக் கொண்டதாகும். இந்தச் சோதனையின்போது, பொதியுறை மற்றும் ஏவுகல ஊக்கிகள் இரண்டும் வெற்றிகரமாக புவிக்கு தரையிறங்கின. 'புளூ ஆர்ஜின்' என்பது அமேசான் தலைமைச் செயல் அலுவலர் ஜெப் பெசோஸால், கடந்த 2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமாகும்.

**9.இந்தியாவில் தேர்தல் பத்திரங்களை வழங்குவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ. பாரத வங்கி ☑**

இ. இந்தியன் வங்கி

ஈ. பஞ்சாப் தேசிய வங்கி

❖ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் தேர்தல் செலவினங்களுக்–கான நன்கொடைகளை, தேர்தல் பத்திரங்கள்மூலம் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2018ஆம் ஆண்டு அறிவித்தது. இந்தத் தேர்தல் பத்திரங்களை, பாரத வங்கி (SBI) தனது 29 அங்கீகரிக்கப்பட்ட கிளைகளில் 19.10.2020 முதல் 28.10.2020 வரை விற்பனை செய்கிறது.

❖ இந்தத் தேர்தல் பத்திரங்கள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதற்குள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்களை டெபாசிட் செய்து பணமாக்கி கொள்ளவேண்டும். டெபாசிட் செய்த அதேநாளில், அரசியல் கட்சிகளின் வங்கிக்கணக்கில் பணம் வரவு வைக்கப்படும். 15 நாட்களுக்குப்பின் தேர்தல் பத்திரங்களை தாக்கல் செய்தால் பணம் வழங்கப்படாது.

**10.ஆறாண்டுகால தடைக்குப் பிறகு, சர்ச்சைக்குரிய தென்சீனக்கடலில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வை மீண்டும் தொடங்கவுள்ள நாடு எது?**

அ. தாய்லாந்து

ஆ. தைவான்

**இ. பிலிப்பைன்ஸ் ☑**

ஈ. சிங்கப்பூர்

❖ இயற்கைவள ஆய்வு தொடர்பான 6 ஆண்டுத்தடையை முடிவுக்குக்கொண்டுவந்து, தென்சீனக்கடலில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுகளை மீண்டும் தொடங்குவதாக பிலிப்பைன்ஸ் அறிவித்துள்ளது. முன்னாள் அதிபர் பெனிக்னோ அக்வினோ III, சீனாவுடனான பதட்டங்களுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய தென்சீனக்கடலில் கடந்த 2014'இல் ஆய்வை நிறுத்திவைத்தார். சீனாவின் நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்கா பிலிப்பைன்ஸை ஆதரித்து வருகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.தற்போதைய நிலவரப்படி, மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் எத்தனை கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?**

அ. 13

ஆ. 17

இ. 20

**ஈ. 24 ☑**

❖ நாட்டிலுள்ள மேலும் 7 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களின் விளையாட்டு மையங்களை, கேலோ இந்தியா மாநில சிறப்பு மையமாக தரமுயர்த்த விளையாட்டு அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. இவ்வாண்டின் தொடக்கத்தில் விளையாட்டு அமைச்சகம் 14 விளையாட்டு மையங்களை தரமுயர்த்தி அறிவித்திருந்தது. இப்போது கூடுதலாக ஒன்பது மையங்கள் சேர்க்கப்பட்டிருப்பதை அடுத்து, மொத்தம் 23 மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களில் உள்ள 24 விளையாட்டு மையங்கள் தரமுயர்த்தப்பட உள்ளன. ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் கனவை நனவாக்கும் வகையில் உலகத்தரம்வாய்ந்த பயிற்சிகளும் வசதிகளும் கேலோ இந்தியா மாநில சிறப்பு மையத்தில் அளிக்கப்படும்.

**2.பிரமோஸ் மீயொலி ஏவுகணையின் கடற்படை பதிப்பு, எந்தக் கப்பலிலிருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது?**

**அ. INS சென்னை ☑**

ஆ. INS மைசூர்

இ. INS கொல்கத்தா

ஈ. INS விக்கிரமாதித்யா

❖ ஒலியைவிட அதிக வேகத்தில் செல்லும் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை, INS சென்னை போர்க் கப்பலிலிருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. அது, அரபிக்கடலிலுள்ள இலக்கை துல்லியமாக தாக்கியது. எதிரிநாட்டுக் கப்பல்களை தொலைவிலிருந்து தாக்குந்திறன்கொண்ட முக்கிய ஆயுதமாக பிரமோஸ் ஏவுகணை கருதப்படுகிறது. இந்தியா மற்றும் இரஷ்யா நாடுகளின் கூட்டு முயற்சியில் இந்த பிரமோஸ் ஏவுகணை வடிவமைத்து தயார்செய்யப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையை நீர்மூழ்கிக்கப்பல், கப்பல், வானூர்தி அல்லது நிலத்திலிருந்தும் ஏவமுடியும்.

**3.சைவ உணவுகளுக்கான வழிகாட்டுதல்களை ஆராய்வதற்காக பணிக்குழுவொன்றை அமைத்துள்ள அமைப்பு எது?**

அ. வேளாண் அமைச்சகம்

**ஆ. FSSAI ☑**

இ. FCI

ஈ. APEDA

❖ நாட்டில் சைவ உணவுகளுக்கான வழிகாட்டுதல்களை ஆராய்வதற்காக இந்திய உணவுப்பாதுகாப்பு & தரநிர்ணய ஆணையம் (FSSAI) அண்மையில் ஒரு பணிக்குழுவை அமைத்தது. இப்பணிக்குழுவில் ICAR, வர்த்தக அமைச்சகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் மற்றும் தரக்கழகம் மற்றும் சில தனியார் சைவ உணவு நிறுவனங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளைச்சார்ந்த 7 உறுப்பினர்கள் உள்ளனர்.

**4. WPP Plc மற்றும் Kantar'இன் அறிக்கையின்படி, எது இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம்?**

அ. TATA மோட்டார்ஸ்

**ஆ. HDFC வங்கி ☑**

இ. ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம்

ஈ. எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகம்

❖ WPP Plc மற்றும் Kantar'இன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, HDFC வங்கி இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தொடர்ந்து ஏழாவது ஆண்டாக இவ்வங்கி முதலிடத்தில் உள்ளது. HDFC வங்கியின் நிகர மதிப்பு $20.2 பில்லியன் டாலர்களாகும். அதைத்தொடர்ந்த இடத்தில், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) இடத்தில் உள்ளது.

**5.கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'காதி பிகூ திருவிழா' கொண்டாடப்படுகிறது?**

அ. ஒடிஸா

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. கர்நாடகா

❖ அஸ்ஸாம் மாநிலத்தில், அண்மையில், 'காதி பிகூ' திருவிழா கொண்டாடப்பட்டது. இது, அக்டோபர் மாதத்தில் கொண்டாடப்படும் ஒரு வேளாண் திருவிழாவாகும். இந்தத் திருவிழாவின்போது, அஸ்ஸாம் மாநில மக்கள், தங்களின் இல்லங்களிலும் வயல்களிலும் விளக்கேற்றுகிறார்கள். மாநிலம் முழுவதும் கலாசார நடனங்களும், விருந்து நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**6.அறிவியல் மற்றும் தொழினுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதியத்தை செயல்படுத்துகிற துறை எது?**

அ. வேளாண் துறை

**ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ☑**

இ. பணியாளர்கள் துறை

ஈ. விண்வெளித் துறை

❖ "பல்கலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அறிவியல் & தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதியத்தை' (FIST) மறுசீரமைப்பதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை கூறியுள்ளது. FIST திட்டம் இப்போது FIST 2.0 என மீண்டும் தொடங்கப்படவுள்ளது.

❖ துளிர் நிறுவனங்களின் தேவைகளை அரசாங்கத்தின், 'தற்சார்பு இந்தியா' திட்டத்துடன் இணைப்பதை இந்த FIST 2.0 திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. NITI ஆயோக் ஆனது ஒரு முன்னணி தொழில்நுட்பமான, 'கிளவுட்' புத்தாக்க மையத்தை, கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடன் இணைந்து நிறுவவுள்ளது?**

அ. இன்டெல்

ஆ. மைக்ரோசாப்ட்

**இ. அமேசான் ☑**

ஈ. கூகிள்

❖ சமூகத்தில் சவால்களாக உள்ள சிக்கல்களை, டிஜிட்டல் புத்தாக்கங்கள்மூலம் தீர்வுகாண, முன்னணி தொழில்நுட்பமான 'கிளவுட் புத்தாக்க மையத்தை' அமேசான் வலையக சேவைகள் நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் முதல்முறையாக NITI ஆயோக் அமைக்கவுள்ளதாக அறிவித்தது. அமேசான் வலையக சேவையின், உலகளாவிய CIC திட்டத்தின் ஒருபகுதிதான் இம்மையம். இது இந்தியாவில் அமைக்கப்படவுள்ள அமேசானின் முதல் கிளவுட் புத்தாக்க மையமும் உலக அளவில் பன்னிரண்டாம் மையமும் ஆகும்.

**8.பல பண்டங்கள் பரிமாற்றகம் (MCX) அறிமுகப்படுத்திய நிகழ்நேர எளிய உலோகக் குறியீட்டின் (Base Metals Index) பெயர் என்ன?**

**அ. METLDEX ☑**

ஆ. GOLDEX

இ. BULLDEX

ஈ. BASEDEX

❖ பண்டப்பரிமாற்றகமான Multi Commodity Exchange of India (MCX) அண்மையில் நிகழ்நேர எளிய உலோகக் குறியீடான, 'METLDEX'இல் எதிர்கால வர்த்தகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. துத்தநாகம், தாமிரம், நிக்கல், ஈயம் மற்றும் அலுமினியம் உள்ளிட்டவற்றின் நிகழ்நேர செயல்திறனை இந்த எளிய உலோக அட்டவணை கண்காணிக்கும். கடந்த 2020 ஆகஸ்டில், இந்தப் பரிமாற்றகம், MCX Bullion Index (MCX BULLDEX)'ஐ அறிமுகப்படுத்தியது.

**9. 2019ஆம் ஆண்டில் அதிக உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பதிவு செய்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளம்

இ. கர்நாடகா

**ஈ. உத்தர பிரதேசம் ☑**

❖ கடந்த 2019ஆம் ஆண்டில் அதிக உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த இந்திய மாநிலமாக உத்தர பிரதேச மாநிலம் விளங்குகிறது. இந்திய சுற்றுலா புள்ளிவிவரங்கள் 2020'இன்படி, இந்தியாவைச்

சார்ந்த 23.1% பயணிகள் உத்தர பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளனர். அயல்நாட்டுப் பயணிகளின் சராசரி எண்ணிக்கையில், அம்மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது. 47 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள், கடந்த 2019ஆம் ஆண்டில் அம்மாநிலத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

**10.மகாராஷ்டிராவின் சாலை மேம்பாட்டுக்காக கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடனான $177 மில்லியன் டாலர் மதிப்புள்ள கடனொப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டுள்ளது?**

அ. உலக வங்கி

ஆ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

**இ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஈ. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

❖ மகாராட்டிர மாநிலத்தில் 450 கிலோமீட்டர் தூரத்துக்கு நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சாலைகளை மேம்படுத்த $177 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியும், நடுவணரசும் கையெழுத்திட்டுள்ளன. இது, மகாராட்டிர மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புற சாலைகள் இணைப்பை மேம்படுத்தும், வேலைவாய்ப்பை உருவாக்கும், இதன்மூலம் இப்பகுதியின் பொருளாதாரம் மேம்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எத்திட்டத்திற்கான வல்லுநர் குழுவை அமைக்குமாறு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அறிவுறுத்தியுள்ளது?**

**அ. காலேஸ்வரம் நீரேற்றுப் பாசனத் திட்டம் ☑**

ஆ. தெலங்கானா மீஅனல்மின் திட்டம்

இ. காகதீய திட்டம்

ஈ. பகீரதா திட்டம்

❖ தெலுங்கானா மாநிலத்தில் உள்ள காலேஸ்வரம் நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டதாக தேசிய பசுமைத் தீர்ப்பாயம் சமீபத்தில் அறிவித்தது. ஏழு உறுப்பினர்களைக்கொண்ட வல்லுநர் குழுவை அமைத்து நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை பரிந்துரைக்குமாறு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. திட்டத்தால் ஏற்படும் சேதத்தின் அளவையும் இந்தக் குழு மதிப்பீடு செய்யும்.

**2. Solvent Extractors' சங்கத்தின் கூற்றுப்படி, இந்தியாவில், இந்த எண்ணெய் ஆண்டில், எப்பொருளின் இறக்குமதி 12 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது?**

**அ. சமையல் எண்ணெய் ☑**

ஆ. சோயா பீன்ஸ்

இ. பிண்ணாக்கு

ஈ. கடுகு

❖ இந்தியாவின் சால்வண்ட் எக்ஸ்ட்ராக்டர்ஸ் சங்கத்தின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, 2019–20 எண்ணெய் ஆண்டின் முதல் 11 மாதங்களில் (நவம்பர் முதல் செப்டம்பர் வரை) இந்தியாவின் சமையல் எண்ணெய் இறக்குமதி 12 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது. ஓர் எண்ணெய் ஆண்டு என்பது நவம்பர் முதல் அக்டோபர் வரையுடையதாகும். 2019–20 நவம்பர்–செப்டம்பர் மாதங்களில் மட்டும் இந்தியா 11.95 மில்லியன் டன் சமையல் எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது.

**3. ஐநா மனிதவுரிமைகள் உயராணையரானவர் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டத்தை எந்த நாடு மீளாய்வு செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. பிரேசில்

❖ ஐநா மனிதவுரிமைகள் உயராணையரான மைக்கேல் பேச்லெட், சமீபத்தில் இந்திய அரசாங்கத்திடம் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டத்தை மீளாய்வு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

❖ ஐநா மன்றத்தின் தலைவரும் இந்தியாவை பன்னாட்டு மனிதவுரிமை விதிமுறைகளுடன் இணங்கிச் செல்வதை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மனிதவுரிமை மீறல் குறித்த புகாரளிப்பின் பின்னணியில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தண்டிக்க இது பயன்படுத்தப்படுவதாகவும் அவர் வருத்தம் தெரிவித்தார். முன்னதாக, பன்னாட்டு மன்னிப்பு அவை தனது வங்கிக்கணக்குகளை இந்தியா முடக்கியதை அடுத்து, இந்தியாவிலுள்ள தனது அலுவலகத்தை மூடியது குறிப்பிடத்தக்கது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'PM 2020' என்பதுடன் தொடர்புடைய அமைப்பு எது?**

அ. ISRO

**ஆ. DRDO ☑**

இ. BSNL

ஈ. HAL

❖ 'தற்சார்பு இந்தியா'வை உருவாக்கும் முயற்சியில், துளிர் நிறுவனங்கள், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் ஈடுபடும் வகையில், பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின் (DRDO) கொள்முதல் கையேடு 2020'ஐ (Procurement Manual 2020) மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ளார்.

**5.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'OSIRIS-Rex' என்றால் என்ன?**

**அ. விண்கலம் ☑**

ஆ. நீர்மூழ்கிக்கப்பல்

இ. COVID-19 தடுப்பூசி

ஈ. பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

❖ Origins, Spectral Interpretation, Resource Identification, Security, Regolith Explorer (OSIRIS-REx) என்பது NASA'இன் விண்கலமாகும். 2023ஆம் ஆண்டில் புவிக்கு வழங்குவதற்காக, ஒரு குறுங்கோளின் மேற்பரப்பிலிருந்து தூசி மற்றும் கூழாங்கற்களை சேகரிக்க, அவ்விண்கலம் அதன் எந்திர கையைப் பயன்படுத்தி அக்குறுங்கோளைத் தொட்டதை அடுத்து அது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றுள்ளது. 'பென்னு' எனப்படும் குறுங்கோள் தற்போது புவியிலிருந்து ஏறத்தாழ 321 மில்லியன் கிமீட்டருக்கும் அப்பால் உள்ளது.

**6.எந்த மாநிலத்தில், 172 ஆயிரமாண்டுகள் பழமையான ஆற்றின் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. இராஜஸ்தான் ☑**

ஈ. கர்நாடகா

❖ 'குவாட்டர்னரி சைன்ஸ் ரிவியூஸ்' இதழில் அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வின்படி, தொலைந்த ஓர் ஆறு குறித்த சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன; இந்த ஆறு அக்காலத்தில் மாந்தரின் உயிர்நாடியாக

இருந்திருக்கலாம். 172,000 ஆண்டுகளுக்கு முன்பு பிகானேருக்கு அருகிலுள்ள மத்திய தார் பாலைவ –னத்தின் வழியாக இந்த ஆறு பாய்ந்தோடியுள்ளது. இந்த ஆய்வை, ஜெர்மனியில் அமைந்துள்ள மாந்தர் வரலாற்று அறிவியலுக்கான மேக்ஸ் பிளாங்க் நிறுவனம், தமிழ்நாட்டைச் சார்ந்த சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் IISER கொல்கத்தா ஆகியவை இணைந்து நடத்தியுள்ளன.

**7.நாட்டின் 29 மாநிலங்களுள் சிறந்த இரத்தசோகை முக்த் பாரத் குறியீட்டைக் கொண்ட மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. ஹரியானா ☑**

ஈ. கர்நாடகா

❖ சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அனீமியா முக்த் பாரத் (AMB) குறியீட்டின் மதிப்பெண் பட்டியலில், ஹரியானா மாநிலம் 46.7 என்ற AMB குறியீட்டுடன் முதலிடத்தைப் பிடித்தது. இரத்தசோகை முக்த் பாரத் என்பது நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம் மற்றும் UNICEF ஆகியவற்றின் ஒரு முன்னெடுப்பாகும். இந்தியா முழுவதும் இரத்தசோகை பாதிப்பைக் குறைப்பதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'நாஸ்கா கோடுகள்' அமைந்துள்ள நாடு எது?**

அ. பிரேசில்

**ஆ. பெரூ ☑**

இ. ஜமைக்கா

ஈ. தென்னாப்பிரிக்கா

❖ புகழ்பெற்ற UNESCO உலக பாரம்பரிய தளமான நாஸ்கா கோடுகள் (பம்பா டி நாஸ்கா) தென்னமெரிக்க நாடான பெரூவில் அமைந்துள்ளது. இந்த மலையின் சரிவொன்றில் வரையப்பட்ட பூனை தொடர்பான புதிய உருவ அடையாளம் காணப்பட்டதால் இந்த இடம் அண்மைச் செய்திகளில் காணப்பட்டது. இந்தத் தளம், பிரம்மாண்டமான விலங்குகள், தாவரங்கள் மற்றும் கற்பனை மனிதர்களின் சித்தரிப்புகளுக்கு பெயர் பெற்றது.

**9. "Global Estimate of Children in Monetary Poverty – An update" என்ற அறிக்கையை உலக வங்கியுடன் இணைந்து வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. WHO

ஆ. FAO

இ. IMF

**ஈ. UNICEF ☑**

❖ "Global Estimate of Children in Monetary Poverty – An update" என்பது உலக வங்கிக் குழுமமும் UNICEF அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ள வறுமையில் வாடும் சிறார்கள் குறித்த ஒரு பகுப்பாய்வு ஆகும்.

❖ இம்மதிப்பீட்டின்படி, உலகில் உள்ள மொத்த 356 மில்லியன் குழந்தைகளில் ஆறில் ஒரு பங்கினர் (1/6), COVID–19 கொள்ளைநோய்க்கு முன்னதாக மிகுந்த வறுமையில் வாழ்ந்து வந்தனர். துணை சஹாரா ஆப்பிரிக்க பகுதிகளில் மூன்றில் இரண்டு பங்கு சிறார்கள் கடுமையான வறுமையில் வாழ்கின்றனர் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

**10. 'Global Air 2020' என்ற அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் உலகளவில் அதிக காற்றுமாசை ஏற்படுத்திய நாடு எது?**

அ. சீனா

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ. இந்தியா ☑**

ஈ. சிங்கப்பூர்

❖ 'The State of Global Air 2020' (SOGA 2020) என்ற அறிக்கையை ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சார்ந்த ஹெல்த் எபெக்ட்ஸ் நிறுவனமும் குளோபல் பர்டன் ஆப் டிசீசசும் இணைந்து வெளியிட்டுள்ளன. இவ்வறிக்கையின்படி, கடந்த ஆண்டு, இந்தியாவில் மிகவுயர்ந்த ஆண்டு சராசரியான PM 2.5 செறிவு வெளிப்பாட்டை இந்தியா பதிவுசெய்துள்ளது. இந்திய மக்கள் உலகளவில் மிகவுயரிய PM 2.5 செறிவுக்கு ஆளாகின்றனர். மேலும், 2010 முதல் PM 2.5 செறிவானது இந்தியாவில் அதிகரித்து வருவது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ள, நீர்மூழ்கிக் கப்பல்களை இரகசியமாக தாக்கியழிக்கும் போர்க்கப்பலின் பெயர் என்ன?**

அ. INS கவச்

**ஆ. INS கவராட்டி ☑**

இ. INS கமோர்தா

ஈ. INS கில்தான்

❖ விசாகப்பட்டிணம் கடற்படை தளத்தில் நடைபெற்ற விழாவில், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரான INS கவராட்டி போர்க்கப்பலை, ராணுவ தலைமைத்தளபதி மனோஜ் முகுந்த் நரவானே கடற்படையில் இணைத்து வைத்தார். நீர்மூழ்கிக் கப்பல்களை இரகசியமாக தாக்கியழிக்கும் கமோர்தா வகையைச் சேர்ந்த 4 சிறிய போர்க்கப்பல்கள் உள்நாட்டு தொழினுட்பத்தில் உருவாக்கப்பட்டன. இவற்றில் கடைசி போர்க்கப்பலான INS கவராட்டி, கடற்படையில் இணைந்துள்ளது. இவை அனைத்தும் 'Project 28'இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ INS கவராட்டி போர்க்கப்பலை கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள் என்ற நிறுவனம் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**2. 80,000 அரசுப்பள்ளிகளில் ஸ்மார்ட் கரும்பலகை திட்டத்தை செயல்படுத்தியுள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளம்

இ. ஒடிஸா

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ 80,000 அரசாங்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் கரும்பலகை திட்டத்தை செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. ஸ்மார்ட் கரும்பலகை திட்டத்தின்கீழ், ஒலி–ஒளி வழியாக பாடங்கள் கற்பிக்கப்படும். இதற்கு விரலிகளும், கணினித் திரைகளும் பள்ளிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் சிறந்த கற்பித்தல் சூழலை உறுதிசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. ICMR'ஆல் அங்கீகரிக்கப்பட்ட மலிவுவிலை COVID–19 பரிசோதனை அலகான, 'COVIRAP' என்பதை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ. IIT சென்னை

**ஆ. IIT கரக்பூர் ☑**

இ. AIIMS

ஈ. JIPMER

❖ கரக்பூரில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுமம், 'COVIRAP' என்ற பெயரில் குறைந்த விலையில் COVID–19 பரிசோதனை அலகை உருவாக்கியுள்ளது.

❖ COVID-19'இன் விரைவான நோயறிதலுக்கான ஒரு சிறிய அலகான இது, ஒரு மணிக்கும் குறைவான நேரத்தில் முடிவுகளைத் தருகிறது. இந்த அலகு துல்லியமான மூலக்கூறு கண்டறியும் செயல்முறையை உள்ளடக்கியதாகும். இதில் ஒருமுறை பரிசோதிக்க ₹500 மட்டுமே செலவாகும்.

**4. 'இ-தர்தி ஜியோ' வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஆ. வேளாண் அமைச்சகம்

இ. சுற்றுச்சூழல் அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

Ministry of Housing and Urban Affairs
Government of India

❖ மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி சமீபத்தில், 'இ-தர்தி ஜியோ' வலைதளத்தை அறிமுகப்படுத்தினார். இ-தர்தி என்ற பெயரிலான இம்மேலாண்மை தகவலமைப்பில், வரைபடங்கள் மற்றும் குத்தகைத் திட்டங்கள் போன்ற வரைபடங்களை ஒருங்கிணைத்து, புவியியல் தகவலமைப்புடன் (GIS) அவற்றை ஒருங்கிணைத்த ஒரே அமைப்பாக மாற்றுவதை இந்தத் வலைதளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. 'The Future of Jobs Report 2020' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. ILO

**ஆ. WEF ☑**

இ. WTO

ஈ. UNCTAD

WORLD ECONOMIC FORUM

❖ சுவிச்சர்லாந்தைச் சார்ந்த உலக பொருளாதார மன்றம் (WEF) அண்மையில், 'The Future of Jobs Report 2020' என்ற தலைப்பிலான ஓரறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, ரோபாட்டிக்ஸ் & செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளில் அதிக பணிவாய்ப்புகளை உருவாக்கும். COVID-19 கொள்ளைநோய், தொழிலாளர்களுக்கு, "இரட்டை இடையூறு" ஏற்படுத்தும் என்பதையும் அவ்வறிக்கை வெளிப்படுத்தியது.

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Right of First Refusal (RoFR)' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ. மருத்துவம்

**ஆ. கப்பல் வாணிபம் ☑**

இ. சுற்றுச்சூழல்

ஈ. கல்வி

❖ நடுவணரசின், 'இந்தியாவில் தயாரிப்போம்' கொள்கையை பின்பற்றுவதற்காக, ஒப்பந்த முறையில் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தும் உரிமம் நிபந்தனையை, கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகம் மீளாய்வுசெய்து திருத்தியுள்ளது. இந்தியாவில் கட்டப்படும் கப்பல்களுக்கான தேவையை ஊக்குவிக்கும்

வகையில், இந்தியாவில் கட்டப்படும் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதில் முன்னுரிமை அளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கேற்ப உரிமம் நிபந்தனை வழிகாட்டுதல்களில் திருத்தம் செய்யப்பட்டது.

**7.தொழிலாளர் அமைச்சகத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி தொழிற்துறை ஊழியர்களுக்கான நுகர்வோர் குறியீட்டு எண்ணுக்கான அடிப்படை ஆண்டு எது?**

அ. 2010

ஆ. 2012

**இ. 2016 ☑**

ஈ. 2018

❖ தொழிற்துறை ஊழியர்களுக்கான திருத்தியமைக்கப்பட்ட நுகர்வோர் குறியீட்டு எண்ணை மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. தொழிற்துறையினருக்கான நுகர்வோர் குறியீட்டு எண்ணின் புதிய பதிப்பு, 2001 = 100 என்ற அடிப்படையிலிருந்து 2016 = 100 என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உடல்நலம், கல்வி மற்றும் பிற இதர செலவுகளுக்கு அதிக பங்கை கொடுப்பதற்காக மாறிவரும் நுகர்வு முறைக்கு ஏற்ற வகையில் இது செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இது அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை பாதிக்காது.

**8.கோல்கொண்டா கோட்டை அமைந்துள்ள இந்திய நகரம் எது?**

அ. அமிர்தசரஸ்

ஆ. ஜான்சி

**இ. ஹைதராபாத் ☑**

ஈ. அயோத்தியா

❖ அண்மையில் ஹைதராபாத்தில் பெய்த கனமழையின் காரணமாக 500 ஆண்டுகள் பழமையான கோல்கொண்டா கோட்டை சேதமடைந்துள்ளது. இது, குதுப் ஷாஹி வம்சத்தின் தொடக்ககால தலை நகரமாகும். இந்திய தொல்பொருள் ஆய்வறிக்கையின்படி, அரசப்பாதையின் படிகள் மற்றும் பாறைகள், ஜகதாம்பிகை கோவிலுக்கு அருகிலுள்ள சுவர், பின்புற சுவர் மற்றும் இரண்டாவது கிணற்றுக்கு அருகிலுள்ள ஓர் அமைப்பு ஆகியவை கடுஞ்சேதமடைந்துள்ளன.

**9.பிணைமுறிகளை முன்மொழிந்துள்ள IRDAI பணிக்குழுவின் தலைவர் யார்?**

**அ. G ஸ்ரீநிவாசன் ☑**

ஆ. அசோக் மேத்தா

இ. இஞ்செட்டி ஸ்ரீநிவாஸ்

ஈ. உதய் கோடக்

❖ இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையமானது (IRDAI) நியூ இந்தியா அஷ்யூரன்சின் முன்னாள் தலைவர் G ஸ்ரீநிவாசன் தலைமையில் செயற்குழுவொன்றை அமைத்துள்ளது. இந்திய காப்பீட்டுத் துறையால் பிணைமுறிகளை வழங்குவதற்கான பொருத்தத்தை ஆய்வு செய்ய இந்தக்குழு

அமைக்கப்பட்டுள்ளது. முதன்மை பத்திரங்களின் அடிப்படை கடமைகளை பாதிக்கும் நிகழ்வுகளுக்கு எதிராக பிணைமுறி ஒரு பயனாளியைப் பாதுகாக்கின்றது. காப்பீட்டுத்துறையில் பிணைமுறிகளை அறிமுகப்படுத்துவதற்கு இந்தக் குழு ஆதரவளித்துள்ளது.

**10.மலேசியா & பப்புவா நியூ கினியாவில் உள்ள அமைப்புக்கும், இந்தியாவில் உள்ள அதற்கிணையான எவ்வமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு இந்திய நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. இந்திய விண்வெளி ஆய்வு மையம்

**ஆ. இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் ☑**

இ. இந்திய உணவுப் பாதுகாப்பு & தரப்படுத்தல் ஆணையம்

ஈ. இந்திய புவியியல் ஆய்வு மையம்

- இந்தியாவின் ICAI மற்றும் மலேசியாவின் MICPA ஆகியவற்றுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம், தகுதியுடைய ICAI உறுப்பினர் MICPA'இலும், தகுதியுடைய MICPA உறுப்பினர் ICAI'இலும் இணைந்துகொள்ள வழிவகுக்–கும். ஆசிய–பசிபிக் பிராந்தியத்திலுள்ள நிறுவனங்களோடு இருதரப்பு கூட்டு ஏற்படுத்திக்கொள்ள ICAI விரும்புகிறது. அதன் ஒருபகுதியாக MICPA உடன் ஒப்பந்தம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்மூலம், உரிய முறையில் ICAI சான்றளித்த நபர்களை MICPA'உம், அதேபோன்று MICPA சான்றளித்த உறுப்பினர்களை ICAI'உம் ஏற்றுக்கொள்ளும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 2020 செப்டம்பர் மாதத்துக்கான வேளாண் மற்றும் ஊரகத் தொழிலாளர்களுக்கு அகில இந்திய நுகர்வோர் குறியீட்டு எண்களை மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. அதில், வேளாண் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்ணின் வரிசையில் 1234 புள்ளிகளுடனும், ஊரகத் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்ணின் வரிசையில் 1218 புள்ளிகளுடனும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- கிராமிய கலைகளை மீட்டெடுக்கும் வகையில் கோயம்புத்தூரில் 'கிராமிய புதல்வன்' கலைக்குழுவை நடத்தி வருபவரும், தமிழ்நாடு அரசாங்கத்தின் கலைப்பிரிவில் தூதராகவும் உள்ள கலையரசனுக்கு, ஐநா அவையின் பவளவிழாவையொட்டி கலைஞர்களை கௌரவப்படுத்தும் விதமாக, 'கிராமிய விருது' அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன்முறையாக கலையரசனுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.ரோபார் இந்திய தொழினுட்ப நிறுவனத்தின் நிரந்தர வளாகம் சமீபத்தில் திறக்கப்பட்டது. இந்நிறுவனம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. பஞ்சாப் ☑**

இ. உத்தரபிரதேசம்

ஈ. ஹரியானா

❖ ரோபார் இந்திய தொழினுட்பக் கழகத்தின் நிரந்தர வளாகத்தை மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' அண்மையில் திறந்துவைத்தார். டைம்ஸ் உயர்கல்வி உலக பல்கலைக்கழக தரவரிசை 2020'இல் IIT ரோபார் 351–400 தரவரிசையில் இடம்பெற்றுள்ளது. வேளாண்மை மற்றும் நீர் துறைகளில் தொழினுட்ப புத்தாக்க மையத்தை அமைக்க இந்த நிறுவனம் ₹110 கோடி மதிப்பிலான மானியத்தையும் பெற்றுள்ளது.

**2. 'பரினம் மஞ்சுஷா' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் டிஜிட்டல் கல்விக்களஞ்சியமாகும்?**

அ. தேசிய ஆட்சேர்ப்பு நிறுவனம்

ஆ. இந்திய விண்வெளி ஆய்வு மையம்

**இ. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் ☑**

ஈ. அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழகம்

❖ முக அங்கீகார முறைமையைப்பயன்படுத்தி மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு டிஜிட்டல் கல்வி ஆவணங்களை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) வழங்கவுள்ளது. CBSE சேர்க்கை அட்டையிலுள்ள நிழற்படத்துடன் மாணவரின் நேரடிப்படம் பொருந்தும் வகையில் அது இருக்கும். அவை, மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் டிஜிட்டல் கல்விக்களஞ்சியமான, 'பரினம் மஞ்சுஷா' மற்றும் டிஜி லாக்கரில் கிடைக்கப்பெறும்.

**3.தேசிய மூலிகை தாவர வாரியத்தின் இரண்டாவது மண்டல மூல மருந்துக் களஞ்சியம் திறக்கப்பட்ட இடம் எது?**

அ. வாரணாசி

**ஆ. புது தில்லி ☑**

இ. அகமதாபாத்

ஈ. மைசூர்

❖ புது தில்லியில் அமைந்துள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் மண்டல மூல மருந்து களஞ்சியம் (RRDR) திறக்கப்பட்டுள்ளது. AYUSH அமைச்சகத்தின் தேசிய மூலிகை தாவர வாரியத்தால் அறிவிக்கப்ப –ட்ட களஞ்சியங்களின் வரிசையில் இந்த RRDR இரண்டாவது இடத்தில் உள்ளது.

❖ AYUSH அமைச்சகம் எட்டு RRDR மற்றும் ஒரு NRDR'ஐ முன்மொழிந்துள்ளது; அதில், மூன்று மண்டல மூல மருந்துக்களஞ்சியங்கள் தற்போது தயார்நிலையில் உள்ளன.

**4. G–20 ஊழல் தடுப்பு செயற்குழுவின் முதலாவது அமைச்சர்கள் கூட்டத்தில், இந்தியாவின் சார்பாக உரையாற்றியவர் யார்?**

அ. நிதின் கட்கரி

**ஆ. ஜிதேந்திர சிங் ☑**

இ. நிர்மலா சீதாராமன்

ஈ. பியூஷ் கோயல்

❖ G–20 ஊழல் தடுப்பு செயற்குழுவின் முதலாவது அமைச்சர்கள் கூட்டத்தில் நடுவணமைச்சர் ஜிதேந்திர சிங் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தினார். காணொலிவழி நடந்தேறிய இக்கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டார். அவர் தனது உரையின்போது, ஊழல் (அ) கணக்கில் வராத பணத்திற்கு எதிராக சகிப்புத்தன்மையற்ற கொள்கையை இந்தியா கொண்டுள்ளதாக தெரிவித்தார். இந்தியாவின் ஊழல் தடுப்புச்சட்டம், 1988 குறித்தும் அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

**5.ஐரோப்பிய ஒன்றியத்தின் நடப்பாண்டுக்கான (2020) சகரோவ் பரிசு, எந்த நாட்டின் எதிரணிக்கு வழங்கப்பட்டுள்ளது?**

**அ. பெலாரஸ் ☑**

ஆ. சிலி

இ. அர்ஜென்டினா

ஈ. சிங்கப்பூர்

❖ அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோவை எதிர்க்கும் பெலாரஸிய இயக்கத்திற்கு, மனிதவுரிமைக –ளுக்கான நடப்பாண்டுக்கான (2020) சகரோவ் பரிசை ஐரோப்பிய நாடாளுமன்றம் வழங்கியுள்ளது. இவ்வணிக்கு, நாடுகடத்தப்பட்ட சுவெட்லானா டிகானோவ்ஸ்கயா தலைமைதாங்கினார். பெலாரஸில் எதிர்ப்பாளர்கள்மீது ஒடுக்குமுறையில் ஈடுபட்டதாக ஐயப்படும் அதிகாரிகளுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக்கொண்டுள்ளது.

**6.எந்த நாட்டின் புதிய பிரதமராக சாத் அல் ஹரிரி அறிவிக்கப்பட்டுள்ளார்?**

அ. குவைத்

**ஆ. லெபனான் ☑**

இ. ஜிம்பாப்வே

ஈ. ஈரான்

❖ லெபனானின் முன்னாள் பிரதமர் சாத் அல் ஹரிரி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெ –டுப்பில் ஒரு சிறிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அடுத்த பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ வெகுஜன எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அவர் பதவி விலகிய ஓராண்டுக்குள்ளாக, தனது நான்காவது அரசாங்கத்தை அமைக்கும் பணி அவருக்கு கிடைத்துள்ளது. அதிபர் மைகேல் ஒளன் அவரை பிரதமர் என அறிவிப்பதற்கு முன்பு, பல்வேறு நாடாளுமன்ற சங்கங்களுடன் கலந்தாலோசித்தார்.

**7. இந்தியக்கடற்படையானது சமீபத்தில், கீழ்க்காணும் எக்கப்பலிலிருந்து கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை (AshM) பரிசோதித்தது?**

அ. INS பிரபல் ☑

ஆ. INS கவராட்டி

இ. INS கல்வாரி

ஈ. INS விராத்

❖ INS பிரபல் என்ற கப்பலிலிருந்து இந்தியக் கடற்படை தனது கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை (AshM) பரிசோதித்தது. அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, ஒரு பழைய கப்பலை இலக்காகக்கொண்டு அரபிக்கடலி –லிருந்து இக்கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை INS பிரபல் ஏவியது. இந்த ஏவுகணை மிகத்துல்லியத்துட –ன் இலக்கைத் தாக்கி இலக்குக்கப்பலை மூழ்கடித்தது.

**8.உலகின் மிகப்பெரிய நீரூற்றுக்கான சாதனையை முறியடித்த நகரம் எது?**

அ. சென்னை

ஆ. டோக்கியோ

**இ. துபாய் ☑**

ஈ. நியூயார்க்

❖ ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) துபாய் நகரம் உலகின் மிகப்பெரிய நீரூற்றுக்கான சாதனையை முறியடித்தது. 14,366 சதுர அடி பரப்பளவைக் கொண்ட பாம் நீரூற்று துபாயின் பாம் ஜுமேராவிலுள்ள பாயிண்ட் ஷாப்பிங் மற்றும் டைனிங் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஏழு அமீரகங்களுள் ஒன்றான துபாய், ஏற்கனவே உலகின் மிகவுயரமான கட்டடம் மற்றும் உலகின் அதிவேக காவல்துறை கார் சேவையில் சாதனை படைத்துள்ளது.

**9.நிகர சுழிய கரியமிலவாயு உமிழ்வுக்கான (Net Zero Carbon Emission) இலக்கை ஐரோப்பிய ஒன்றியம் எந்த ஆண்டுக்கு நிர்ணயித்துள்ளது?**

அ. 2025

ஆ. 2030

**இ. 2050 ☑**

ஈ. 2100

❖ லக்ஸம்பர்க்கில் ஐரோப்பிய ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர்கள் நடத்திய கூட்டத்தில், வரும் 2050ஆம் ஆண்டளவில் ஐரோப்பிய ஒன்றியத்தை நிகர சுழிய கரியமிலவாயு உமிழ்வானாக ஆக்குவதற்கு ஒரு சட்டம் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் அனைத்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களையும்

சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்துகிறது. இக்காலநிலைச்சட்டம், பல்வேறு தொழிற்சாலைகளில் பைங்குடில் வாயு உமிழ்வைக் குறைப்பதற்கான ஐரோப்பாவின் திட்டங்களுக்கு ஓர் அடிப்படையை உருவாக்கும்.

**10.அரசு மின்னணு சந்தையானது (GeM) சமீபத்தில் எந்தத் தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது?**

அ. ஸ்வயம் வலைதளம்

ஆ. IRCTC வலைதளம்

**இ. மத்திய பொதுக் கொள்முதல் வலைதளம் ☑**

ஈ. சாம்பியன்ஸ் வலைதளம்

❖ அண்மையில், அரசு மின்னணு சந்தையானது மத்திய பொதுக்கொள்முதல் தளத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டது. அவ்வாறு செய்வதன்மூலம், பண்டங்கள் மற்றும் சேவைகளை பொதுக் கொள்முதல் செய்வதற்கான முழு செயல்முறையும் ஒரே தளத்தின்கீழ் கொண்டுவரப்படும். தனிப்பயன் ஆக்கப்பட்ட ஏலச்செயல்பாடும் இதில் உருவாக்கப்பட்டுள்ளது. இது, வாங்குபவரை GeM இல் ஏலமெடுக்க அனுமதிக்கும்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.மத்திய புலனாய்வுப் பிரிவின் (CBI) அதிகாரங்களைக் குறைக்கும் மூன்றாவது மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. மத்திய பிரதேசம்

❖ மாநிலத்தில் மத்திய புலனாய்வுப் பிரிவின் (CBI) அதிகாரங்களைக் குறைக்கும் நாட்டின் மூன்றாவது மாநிலமாக மகாராஷ்டிரா ஆனது. CBI முகமையுடனான பொது ஒப்புதல் ஒப்பந்தத்தை அம்மாநில அரசு திரும்பப்பெற்றது. எனவே, CBI இனி தான் விசாரிக்க வேண்டிய ஒவ்வொரு வழக்கிற்கும் மகாராஷ்டிரா அரசிடம் அனுமதி பெறவேண்டும். இதேபோன்ற நடவடிக்கையை முன்னதாக இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் மேற்கொண்டுள்ளன.

**2.சமீபத்தில், விலை கண்காணிப்பு மற்றும் வளப்பிரிவு அமைக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கோவா ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. மத்திய பிரதேசம்

❖ தேசிய மருந்துகள் விலை நிர்ணய ஆணையத்தின் (NPPA) உதவியுடன் கோவா மாநிலத்தில் விலை கண்காணிப்பு மற்றும் வளப்பிரிவு (PMRU) அண்மையில் அமைக்கப்பட்டது. NPPA ஏற்கனவே அதன் நுகர்வோர் விழிப்புணர்வு, விளம்பரம் மற்றும் விலை கண்காணிப்பு திட்டத்தின்கீழ் 15 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் PMRU'களை நிறுவியுள்ளது.

❖ ரசாயனங்கள் & உரங்கள் அமைச்சகத்தின் கூற்றுப்படி, இவ்வலகு, மாநில மருந்துக் கட்டுப்பாட்டாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் கோவா மாநில அளவில் செயல்படும்.

**3. ஓர் அண்மைய ஆய்வின்படி, காலநிலை மாற்றம் காரணமாக, எதிர்வரும் 2050ஆம் ஆண்டளவில், எந்த உயிரினத்தின் வாழ்விடங்கள் வெகுவாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது?**

அ. கங்கைவாழ் ஓங்கில்

ஆ. வங்கப்புலி

**இ. இமயமலை பழுப்புக்கரடி ☑**

ஈ. கானமயில்

❖ இந்திய விலங்கியல் ஆய்வு அறிவியலாளர்களால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட இமயமலை பழுப்புக் கரடிகுறித்த ஆய்வில், காலநிலை மாற்றம் காரணமாக அவற்றின் பொருத்தமான வாழ்விடங்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனக்கணித்துள்ளனர். மேற்கிமயமலையில் பாதுகாக்கப்பட்ட பகுதி வலையமைப்பின்

தகவமைப்புத் திட்டத்தை பரிந்துரைக்கவும், இமயமலை பழுப்புக்கரடி இனங்களை (*Ursus arctos isabellinus*) பாதுகாக்கவும் இந்த ஆய்வு அறிவியலாளர்களை வலியுறுத்தியுள்ளது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தரங் சுபோஷித் மகாராஷ்டிரச்சா' திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ. கல்வி

**ஆ. ஊட்டச்சத்து ☑**

இ. விளையாட்டு

ஈ. தொழிற்சாலை

❖ பாலூட்டும் தாய்மார்கள் & சிறார்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்திசெய்வதற்காக மகாராஷ்டிர மாநிலம் அண்மையில், 'தரங் சுபோஷித் மகாராஷ்டிரச்சா' என்ற தளத்தை திறந்துள்ளது. இந்தத் தளம், அளவளாவும் குரல்வழி மறுமொழி முறையை அடிப்படையாகக் கொண்டது. மாநிலத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு அனுசரிக்கப்பட்ட, 'போஷான் மா'வில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தில் இருந்தது.

**5. Mars Atmosphere and Volatile Evolution (MAVEN) என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் செவ்வாய் கோள் சுற்றுக்கலன் திட்டமாகும்?**

அ. இந்தியா

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. இரஷ்யா

❖ Mars Atmosphere and Volatile Evolution (MAVEN) என்பது கடந்த 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, செவ்வாய் கோள் சுற்றுக்கலன் திட்டமாகும். இது, செவ்வாய் கோளின் மேல்வளிமண்டலம் மற்றும் அயனி மண்டலத்தை ஆராய்கிறது. ISRO'இன் செவ்வாய் சுற்றுக்கலன் திட்டம் & NASA'இன் MAVEN அனுப்பிய தரவு மற்றும் படங்கள் குறித்த அண்மைய ஆய்வின்படி, சூரிய மண்டலத்தில் உள்ள மற்ற கோள்களுடன் ஒப்பிடும்போது செவ்வாயானது அதன் வளிமண்டலத்தை வேகமாக இழந்துவருகிறது.

**6.ஜோகிந்தர் போர் நினைவுச்சின்னம் திறக்கப்பட்ட பம் லா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. சிக்கிம்

ஆ. கேரளா

**இ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ. கர்நாடகா

❖ இந்திய இராணுவம் அண்மையில் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள பம் லாவில் ஜோகிந்தர் போர் நினைவுச்சின்னத்தின் திறப்புவிழாவை ஏற்பாடு செய்திருந்தது. 1962ஆம் ஆண்டில் டோங்பென் லா (பம் லா) போர் நடந்த அக்.23 அன்று இந்த விழா நடைபெற்றது.

❖ சீக்கிய படைப்பிரிவில் பணியாற்றிய ஜோகிந்தர் சிங்குக்கு, அவரது மறைவுக்குப்பிறகு, வீரதீரச்செயல் புரிந்தோருக்கு வழங்கப்படும் மிகவுயரிய 'பரம் வீர் சக்ரா' விருது வழங்கப்பட்டது. கடந்த 1962ஆம் ஆண்டு நடந்த சீன–இந்திய போரின்போது அவர் தனது இன்னுயிரைத் தியாகஞ்செய்தார்.

**7.'The world's women 2020: Trends & Statistics' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. உலக பொருளாதார மன்றம்

**ஆ. ஐக்கிய நாடுகள் ☑**

இ. உலக வங்கி

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

❖ ஐக்கிய நாடுகள் அவையானது 'The World's Women 2020: Trends and Statistics' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. உலகளவில் பாலின சமத்துவத்தின் நிலையை மதிப்பிடுதற்கு இது 100 தரவுக்கதைகளைத் தொகுக்கிறது. இவ்வறிக்கையின்படி, உழைக்கும் வயதுடை பெண்களுள் 50 சதவிகிதத்துக்கும் குறைவானவர்களே தொழிலாளர் சந்தையில் உள்ளனர். நூற்றாண்டின் கடைசி காலாண்டிலிருந்து இதே நிலைதான் நீடித்து வருகிறது. COVID–19 கொள்ளைநோய் பெண்களின் பணி மற்றும் வாழ்வாதாரங்களை கூடுதலாக பாதிக்கிறது என்பதையும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

**8. "அணுவாயுதங்களை தடைசெய்வதற்கான ஐநா ஒப்பந்தம்" எப்போது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?**

அ. டிசம்பர் 2020

**ஆ. ஜனவரி 2021 ☑**

இ. மார்ச் 2021

ஈ. டிசம்பர் 2021

❖ அணுவாயுதங்களை தடைசெய்வதற்கான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தம் 20 செப்டம்பர் 2017 அன்று ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் கையொப்பமிட திறக்கப்பட்டது. 50 நாடுகள் இதற்கு ஒப்புதல் அளித்தவுடன், அது நடைமுறைக்கு வரும். ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் 50 நாடுகள் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், 2021 ஜனவரி மாதத்திற்குள் 90 நாட்களுக்குள் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவித்தது.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கேங்டாக் – நாதுலா மாற்று சீரமைப்புச்சாலை'யை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. லார்சன் & டூப்ரோ

**ஆ. எல்லைபுறச் சாலைகள் அமைப்பு ☑**

இ. தளவாடங்கள் தொழிற்சாலை வாரியம்

ஈ. இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம்

❖ மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், 'கேங்டாக் – நாதுலா மாற்று சீரமைப்புச் சாலை'யைத் திறந்து வைத்தார். இச்சாலையை சிக்கிமில் இராணுவத்தின் எல்லைபுறச் சாலைகள் அமைப்பு (BRO) உருவாக்கியுள்ளது. டார்ஜிலிங்கில் இருந்து மெய்நிகர் முறையில் இந்தச் சாலை திறந்து வைக்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலை–310'இல் 19.35 கிமீ நீளமுள்ள இந்த மாற்று வழி கேங்டாக்கை 'நாது லா' உடன் இணைக்கிறது.

**10.இந்திய வம்சாவளியைச் சார்ந்த வேவெல் ராம்கலவன், எந்நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. பாகிஸ்தான்

ஆ. இலங்கை

இ. இந்தோனேசியா

**ஈ. சீஷெல்ஸ் ☑**

❖ இந்திய வம்சாவளியைச் சார்ந்த வேவெல் ராம்கலவன், அண்மையில் சீஷெல்ஸின் அதிபராக தேர்ந்தெ –டுக்கப்பட்டார். அவர் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர், 1977'க்குப் பிறகு முதல்முறையாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் அதிபர் பதவியை ஏற்றுக்கொள்கிறார். முப்பதாண்டுகளாக அதிபர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வியுற்ற முன்னாள் ஆங்கில பாதிரியாரான வேவெல் ராம்கலவன், தற்போதைய அதிபரான டேனி பாரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஆண்டுதோறும் உலக தகவல் வளர்ச்சி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 21

ஆ. அக்டோபர் 22

**இ. அக்டோபர் 24 ☑**

ஈ. அக்டோபர் 25

❖ ஒவ்வோர் ஆண்டும், அக்டோபர்.24 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் உலக தகவல் வளர்ச்சி நாள் கொண்டாடப்படுகிறது. இது தொடர்பான தீர்மானம், கடந்த 1972ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பன்னாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்நாள் வலியுறுத்துகிறது. தகவல்களின் பரவலை மேம்படுத்துவதற்கும், பொதுக்கருத்தை அணிதிரட்டுவதற்கும் குறிப்பாக இளையோரிடையே வளர்ச்சியின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு இது ஆணையிடுகிறது.

**2.நடப்பாண்டின் (2020) விழிப்புநிலை & ஊழல் எதிர்ப்பு தொடர்பான தேசிய மாநாட்டின் கருப்பொருள் என்ன?**

அ. Healthy India, Powerful India

**ஆ. Vigilant India, Prosperous India ☑**

இ. Nation towards Anti-corruption

ஈ. Corruption free India

❖ "விழிப்புநிலை இந்தியா, செழிப்பான இந்தியா" என்ற தலைப்பில் அக்டோபர் 27 முதல் விழிப்புநிலை மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பான தேசிய மாநாடு நடைபெற்றது. காணொலிக்காட்சிமூலம் நடந்தேறிய இந்த மாநாட்டை இந்தியப்பிரதமர் தொடங்கிவைத்தார்.

❖ மூன்று நாள் நடைபெற்ற இம்மாநாட்டை நடுவண் புலனாய்வுப்பிரிவு (CBI) ஏற்பாடு செய்திருந்தது. இது கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

**3. 'மோலேவ்' என்ற சூறாவளியானது அண்மையில் எந்தக் கடற்புற நாட்டைத் தாக்கியது?**

அ. இலங்கை

ஆ. தென்னாப்பிரிக்கா

இ. கியூபா

**ஈ. பிலிப்பைன்ஸ் ☑**

❖ அதிவேகமாக நகர்ந்துவரும், 'மோலேவ்' என்ற சூறாவளி பிலிப்பைன்ஸின் தெற்கு மாகாணங்களைத் தாக்கியுள்ளது. இதனால் அந்நாட்டின் கிராமங்களில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

❖ இச்சூறாவளி தென்சீனக்கடலை நோக்கி மணிக்கு 125 கிமீ வேகத்தில் நகர்ந்து வருகிறது. பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு சுமார் 25,000 மக்கள் இதன் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

**4.நான்கு நாள் தளபதிகள் மாநாட்டை நடத்திய பாதுகாப்புப் படை எது?**

அ. இந்தியக் கடற்படை

ஆ. இந்திய வான் படை

இ. இந்தியக் கடலோரக் காவல்படை

**ஈ. இந்திய இராணுவம் ☑**

❖ இந்திய ராணுவம், 2020 அக்.26–29 வரையிலான 4 நாட்களுக்கு தளபதிகள் மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டின்போது, அனைத்து உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மனிதவள பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. இது, கொள்கை வகுத்தல் & தீர்மான நிறைவேற்றலுக்காக நடத்தப்படும் ஒரு நிகழ்வு ஆகும். இதன் தொடக்கவுரையை மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிகழ்த்தினார்.

**5." No Mask, No Service" என்ற கொள்கையை அண்மையில் ஏற்றுக்கொண்ட நாடு எது?**

அ. பாகிஸ்தான்

ஆ. சீனா

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஈ. வங்கதேசம் ☑**

❖ COVID–19 கொள்ளைநோய் பரவலைக் கட்டுப்படுத்துதற்காக வங்கதேச அரசு, "முகமறைப்பு இல்லை, சேவை இல்லை" என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டது. இப்புதிய விதிமுறைப்படி, அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், சந்தைப்புறங்கள் மற்றும் பிற வழிபாட்டுத்தலங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும். மேலும், முகக்கவசம் அணியாத யாதொருவருக்கும் பொது மற்றும் தனியார் அலுவலகங்கள் சேவை வழங்காது.

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, சிந்து இணைவு மண்டலம் (ISZ) என்பது காணப்படுகிற மாநிலம் (அ) யூனியன் பிரதேசம் எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

இ. உத்தரகண்ட்

**ஈ. லடாக் ☑**




❖ டேராடூனில் உள்ள வாடியா இமாலய புவியியல் நிறுவனத்தைச் (WIHG) சார்ந்த அறிவியலாளர்கள் குழு அண்மையில் நடத்திய ஆய்வின்படி, லடாக் பிராந்தியத்தில் உள்ள சிந்து இணைவு மண்டலம் (Indus Suture Zone – ISZ) புவி ஒட்டுக்குரிய செயலில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்திய மற்றும் ஆசிய தட்டுகள் இணைந்த இம்மண்டலம் இன்றுவரை பிணைந்த மண்டலமாக கருதப்படுகிறது.

❖ WIHG என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின்கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனம். இந்த ஆய்வு அண்மையில், 'டெக்னோபிசிக்ஸ்' இதழில் வெளியிடப்பட்டது.

**7. 'மஞ்சள் தூசி' என்ற மர்மமான மேகம் குறித்து தனது குடிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள நாடு எது?**

அ. பிலிப்பைன்ஸ்

ஆ. ஜப்பான்

**இ. வட கொரியா ☑**

ஈ. இந்தியா

❖ 'மஞ்சள் தூசி – Yellow Dust' என்ற மர்மமான கொண்டலுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்குமாறு வட கொரியாவின் அதிகாரிகள் அந்நாட்டு குடிகளை வலியுறுத்தியுள்ளனர். அந்நாட்டு அதிகாரிகளின் கூற்றுப்படி, சீனாவிலிருந்து வீசும் இந்த, 'மஞ்சள் தூசி' SARS CoV–2'ஐ கொண்டு வரக்கூடும். வட கொரிய நாட்டில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தத் தூசிப் புயலுடன் தொடர்புகொள்வதைத் தவிர்ப்பதற்காக அந்நாடு தனது குடிகளை வீட்டுக்குள்ளிருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

**8.பன்னாட்டுப் பயணிகளுக்காக, எந்த வானூர்தி நிலையத்தில் முதன்முறையாக, 'இ–போர்டிங் வசதி' தொடங்கப்பட்டுள்ளது?**

அ. மும்பை பன்னாட்டு வானூர்தி நிலையம்

**ஆ. ஹைதராபாத் பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑**

இ. தில்லி பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஈ. கொச்சின் பன்னாட்டு வானூர்தி நிலையம்

HYDERABAD
RAJIV GANDHI
INTERNATIONAL AIRPORT

❖ ஹைதராபாத் பன்னாட்டு வானூர்தி நிலையமானது உள்நாட்டு பயணிகளுக்காக கூடுதலாக தொடுதலற்ற 'இ–போர்டிங் வசதி'யை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவிலிருந்து பிறநாடுகளுக்குச் செல்லும் பயணிகளுக்கு தொடுதலற்ற 'இ–போர்டிங் வசதி'யை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் வானூர்தி நிலையமாக இது திகழ்கிறது. இது, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் முறையிலான தீர்வை இதற்கு பயன்படுத்துகிறது. இதைப்பயன்படுத்தி, பயணிகள், அனைத்து வரிசைகளையும் காத்திருக்கும் நேரத்தையும் தவிர்க்கலாம்.

**9.எந்த நாட்டுடனான அடிப்படை பரிவர்த்தனை மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் (BECA) இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ. ரஷ்யா

ஆ. பிரான்ஸ்

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. பிரேசில்

❖ இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடைபெற்ற மூன்றாவது 2 + 2 பேச்சுவார்த்தைகளின் போது, அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் அல்லது BECA கையெழுத்தானது.

❖ இந்த ஒப்பந்தம், இந்தியாவுக்கு வகைப்படுத்தப்பட்ட புவியிடம்சார் தரவு மற்றும் அமெரிக்காவிலிருந்து குறிப்பிடத்தக்க இராணுவ பயன்பாடுகளைக் கொண்ட முக்கியமான தகவல்களுக்கான அணுகலை வழங்குகிறது. இது ஒரு நீண்டகால பேச்சுவார்த்தைக்குப் பின்னான பாதுகாப்பு ஒப்பந்தமாகும்.

**10.கப்பல் அமைச்சகமானது இந்தியாவின் எந்த முதன்மை துறைமுகத்தில், 'நேரடி துறைமுக நுழைவு வசதி'யை (Direct Port Entry) தொடங்கியுள்ளது?**

**அ. வ உ சிதம்பரனார் துறைமுகம் ☑**

ஆ. கொச்சின் துறைமுகம்

இ. புதிய மங்களூரு துறைமுகம்

ஈ. பாரதீப் துறைமுகம்

❖ தூத்துக்குடியிலுள்ள வ உ சிதம்பரனார் துறைமுகத்தில் சரக்கு கொள்கலன்களை நேரடியாக கொண்டு செல்லும், 'நேரடி துறைமுக நுழைவு வசதி'யை (Direct Port Entry), மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. இது சரக்குகளின் போக்குவரத்தை விரைவுபடுத்துதல் மற்றும் சரக்கு போக்குவரத்து செலவைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக உள்ளது.

❖ பன்னாட்டு வணிகத்தில் கப்பல் சரக்கு போக்குவரத்து தொழிலில் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் செயல்திறனை அதிகரிக்கவும், காலவிரையத்தைக் குறைக்கவும், குறைவான கட்டணச்செலவு ஆகிய –வற்றை இந்த வசதி தருவதுடன் ஏற்றுமதியாளர்கள் வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குவதை அதிகரிக்க இது உதவிகரமாக இருக்கும். நடுவண் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின், 'கடல்சார் தொலைநோக்கு 2030' கொள்கைக்கு இணங்க இது உள்ளது.